# 2

# தேசிய உற்பத்தி, செலவினம் மற்றும் வருமானம்

## 2.1 பொதுநோக்கு

இலங்கைப் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகளிலிருந்தான சவால்களுக்கு மத்தியிலும் பொதுவாக ஆதரவான இறைக்கொள்கை, நாணயக் கொள்கை மற்றும் சாதகமான காலநிலை என்பவற்றினால் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் உண்மை நியதிகளில் 4.8 சதவீதத்தால் விரிவடைந்தது. உள்நாட்டுப் பக்கத்தில், குறைந்த மற்றும் உறுதியான பணவீக்கச் சூழல் மற்றும் குறைந்த வட்டி வீதங்கள் என்பன பொருளாதாரத்துக்குத் தொடர்ந்தும் உதவின. அரச துறையிலுள்ள ஊழியர்களின் சம்பளங்களிலான அதிகரிப்பு மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் கீழ் நோக்கிய திருத்தம் போன்ற இறை வழிமுறைகளும் கேள்வியைத் தூண்டுவதற்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. எனினும், பாரியளவான பல உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை மீள்மதிப்பிடுவதற்காக வெளிப்படைத்தன்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய முயற்சிகள் சார்ந்த கொள்கைப் போக்கில் ஏற்பட்ட மாற்றமானது குறிப்பிட்ட மட்டம் வரை ஒட்டுமொத்த வளர்ச்சி உத்வேகத்தைக் கட்டுப்படுத்தியதுடன் பொருளாதாரத்தின் சாத்தியமான இயலளவு விரிவாக்கத்தையும் தாமதப்படுத்தியிருந்தது. வெளிநாட்டுத் துறையில் உலகப் பொருளாதாரத்தின் குறைந்த செயலாற்றத்திலிருந்தான பரவல்கள் பொருளாதாரச் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. உற்பத்தித் துறையிலான வளர்ச்சியானது பணிகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலிருந்தான சாதகமான பங்களிப்புடன் பரந்த ரீதியில் காணப்பட்டது. 2015இல் பொருத்தமான வட்டி வீதச் சூழலிலிருந்து நன்மையடைந்த நிதியியல் பணிகளால் பெரும்பாலும் உந்தப்பட்டு பணிகள் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கின. பெரியளவிலான கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான பின்னடைவு காரணமாக கைத்தொழில் செயற்பாடுகள் மிதமான செயலாற்றத்தைக் காட்டின. இதேவேளை, வேளாண்மைச் செயற்பாடுகள் சாதகமான வானிலை நிலைமைகளால் கூடியளவு நன்மையடைந்தன.

செலவின அணுகுமுறை மதிப்பீடுகளின்படி, பெயரளவு மற்றும் உண்மை ஆகிய இரு நியதிகளிலும் குடும்ப அலகின் செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் தூண்டப்பட்ட நுகர்வினூடாக உருவாக்கப்பட்ட கேள்வியால் பொருளாதார வளர்ச்சியானது தக்க வைக்கப்பட்டது. பொதுமக்களின் முதலீடுகள் மற்றும் முதலீட்டாளர் மனப்பாங்கு ஆகிய இரண்டையும் குறைவடையச் செய்த தேர்தல் செயன்முறை உள்ளிட்ட மிதமிஞ்சிய காரணங்களால் உந்தப்பட்டு முதலீட்டுச் செலவினம் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. உண்மை நியதிகளிலான தேறிய வெளிநாட்டுக் கேள்வி ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் சார்பு ரீதியிலான அதிகரிப்புக் காரணமாக தொடர்ந்தும் பாதகமாகவே காணப்பட்டது. ரூபாவின் பெறுமானத் தேய்வு, அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் 2015இன் பிற்பகுதியில் சில வகை இறக்குமதிகளுக்கான தீர்வைகளின் திருத்தம் என்பவற்றால் கொடுகடனைப் பெறும் வசதி கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் குறைந்த உலக பண்ட விலைகளால் தூண்டப்பட்டு இறக்குமதிக் கேள்வி தொடர்ந்தும் அதிகரித்தது. மேலும்,

முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் எதிர்பார்த்ததை விடக் குறைந்த வீதத்திலான மீட்சி, சீனாவின் பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு மற்றும் ருஷியா மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளிலான பொருளாதார மந்தம் என்பன ஏற்றுமதிகளுக்கான கேள்வியைக் குறைவடையச் செய்தன. மறுபக்கத்தில், வர்த்தகமாற்று விகிதத்திலான மேம்பாட்டால் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதி விலைகளிலான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் குறைந்த வீதத்தில் வீழ்ச்சியடைந்தன. இதேவேளை தேறிய பணிகள் ஏற்றுமதி 2015இல் முன்னேற்றமடைந்திருந்தது. இதன்படி, பெயரளவு நியதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி சிறிதளவால் அதிகரித்தது. 2015இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் அரசின் குறைச் சேமிப்பாலும் தனியார் சேமிப்புக்களின் மெதுவடைவாலும் வழிநடத்தப்பட்டு குறைவடைந்தன. இதேவேளை, வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்த வேளையில் தேறிய முதன்மை வருமானம் சுருக்கமடைந்திருந்தது. இவ்வபிவிருத்திகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேசிய சேமிப்புக்களிலும் மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கிலும் மெதுவடைவை விளைவித்தது. எனினும், தேசிய சேமிப்புக்களைவிட முதலீட்டிலான மெதுவடைவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை ஒடுங்கச் செய்தது. வருமான அணுகுமுறையின் மதிப்பீடுகளின்படி, மொத்த தொழிற்படு மிகை பொருளாதாரத்தின் வருமானம் உருவாக்கலின் பிரதான கூறாக இருப்பதுடன் நிறுவன ரீதியாக குடும்ப அலகுத் துறை 2015இல் உருவாக்கப்பட்ட வருமானத்தின் பெரும்பகுதிக்கு பங்களிப்புச் செய்தது.


## 2.2 மொ.உ.உற்பத்தி, தலைக்குரிய மொ.உ.உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம்

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2014இன் ரூ.10,448.5 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 80.0 பில்லியன்) ஒப்பிடுகையில் 2015இல் ரூ.11,183.2 பில்லியனாக (ஐ.அ.டொலர் 82.3 பில்லியன்) விளங்கியது.** இதன்படி, மொ.உ.உற்பத்தி 2014இல் அவதானிக்கப்பட்ட 8.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் 7.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இம்மெதுவடைவு உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி மற்றும் மொ.உ.உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கி இரண்டினதும் இணைந்த விளைவாகும். உண்மை நியதிகளில், மொ.உ.உற்பத்தி முன்னைய ஆண்டின் 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதன்படி, 2015இல் உண்மை மொ.உ.உற்பத்தி 2014இன் ரூ.8,229.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.8,622.8 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, மொ.உ. உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கி 2014இன் 3.9 சதவீதத்திலிருந்து 2015இல் 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2014இன் ரூ.503,032 உடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.533,398 ஆக மதிப்பிடப்பட்டு 2014இன் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இது ஓரளவு உறுதியான நடுவாண்டு குடித்தொகை வளர்ச்சி மட்டங்களுக்கு மத்தியில் பெயரளவு மொ.உ.உற்பத்தியிலான வளர்ச்சியால் ஏற்பட்டது. ஐ.அ.டொலர் நியதியில் குறித்துரைக்கப்பட்ட தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும் 2014இன் ஐ.அ.டொலர் 3,853 இலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 3,924 இற்கு அதிகரித்தது. ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2014இல் பதிவுசெய்யப்பட்ட 6.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 1.8 சதவீதம் கொண்ட மெதுவடைவாகும். இது பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சியிலான மெதுவடைவால் ஏற்பட்டது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்துக்கு மொ.உ.உற்பத்தியைச் சீராக்கம் செய்வதன் மூலம் மதிப்பிடப்பட்ட மொத்தத் தேறிய வருமானம் 2014இன் 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் பெயரளவு நியதிகளில் ரூ.10,932 பில்லியனுக்கு அதிகரித்து 7.1 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** ஊழியர்களுக்கான இழப்பீடுகள் மற்றும் முதலீட்டு வருமானத்தை உள்ளடக்கும் வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட முதன்மை வருமானத்தைவிட வெளிநாட்டிற்குச் செலுத்தப்பட்ட முதன்மை வருமானம் விஞ்சியமையால் எதிர்க்கணியமாகவே தொடர்ந்தும் விளங்கியது. முதன்மை வருமானத்திலான எதிர்க்கணிய வளர்ச்சி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஊழியர்களின் இழப்பீடு மற்றும் முதலீட்டு வருமானம் இரண்டிலுமான வீழ்ச்சியின் இணைந்த வெளிப்பாட்டால் ஏற்பட்டது.

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

அட்டவணை 2.1

**நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | மாற்ற வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 (இ) | 2015 | 2014 (இ) | 2015 | 2014 (இ) | 2015 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **4.9** | **5.5** | **7.8** | **9.0** | **7.8** | **7.9** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 4.3 | 1.0 | 0.2 | 0.0 | 0.2 | 0.2 |
| அரிசியின் வளர்ச்சி | - 7.0 | 23.3 | - 1.2 | 3.6 | 0.7 | 0.9 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 2.1 | 24.9 | 0.3 | 3.5 | 0.7 | 0.8 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்கள் | - 6.3 | - 14.5 | 0.0 | - 0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 9.4 | 16.5 | 0.9 | 1.7 | 0.5 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழ வகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 20.1 | 5.1 | 2.8 | 0.8 | 0.8 | 0.8 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | - 1.1 | - 2.6 | - 0.2 | - 0.5 | 0.9 | 0.8 |
| ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 16.4 | - 18.1 | 0.1 | - 0.1 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப் பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 13.1 | 1.3 | 1.7 | 0.2 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | - 24.5 | - 10.1 | - 2.4 | - 0.7 | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 7.3 | 2.8 | 0.3 | 0.1 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 31.0 | 8.0 | 3.0 | 1.0 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 6.4 | 0.1 | 0.2 | 0.0 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 10.2 | 1.9 | 1.2 | 0.2 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | 3.7 | - 2.7 | 1.1 | - 0.8 | 1.5 | 1.4 |
| **கைத்தொழில்** | **3.5** | **3.0** | **19.6** | **16.5** | **26.7** | **26.2** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 2.2 | - 0.9 | 1.2 | - 0.5 | 2.5 | 2.3 |
| தயாரிப்பு | 2.3 | 4.7 | 7.6 | 15.5 | 15.7 | 15.7 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 3.3 | 7.8 | 0.7 | 1.6 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 4.8 | 4.3 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| கழிவு நீர், கழிவுப்பொருள், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் | 11.9 | 24.8 | 0.5 | 1.1 | 0.2 | 0.3 |
| நிர்மாணம் | 6.6 | - 0.9 | 9.6 | - 1.3 | 7.2 | 6.8 |
| **பணிகள்** | **5.2** | **5.3** | **59.9** | **62.6** | **56.3** | **56.6** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் | 4.0 | 4.6 | 19.3 | 22.5 | 23.3 | 23.2 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 11.6 | 12.5 | 1.2 | 1.4 | 0.5 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 8.1 | 12.3 | 18.6 | 29.6 | 11.5 | 12.3 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 4.3 | 1.3 | 11.0 | 3.3 | 12.2 | 11.8 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 5.5 | 3.2 | 9.8 | 5.8 | 8.8 | 8.7 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமமானவை** | **4.7** | **4.6** | **87.3** | **88.1** | **90.8** | **90.7** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 6.9 | 6.2 | 12.7 | 11.9 | 9.2 | 9.3 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானவை** | **4.9** | **4.8** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -2.9 | -3.7 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **4.9** | **4.8** | | | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**உற்பத்தி மதிப்பீடுகளின் கீழ் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் செயற்பாடுகளின் மொத்தப் பெறுமதிகூட்டல் நிதியல்லா கூட்டுத்தாபனங்கள், நிதிக் கூட்டுத்தாபனங்கள், பொது அரசாங்கம், குடும்ப அலகுகள் மற்றும் நாட்டின் பொருளாதார பிரதேசத்தில் வதியும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் ஆகிய நிறுவன ரீதியிலான துறைகளுக்குள் மேலும் வகைப்படுத்தப்படலாம்.** தேசிய கணக்கு மதிப்பிடும் செயன்முறையில் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்த்து உள்ளடக்கப்படுகிறது. 2014 மற்றும் 2015இற்கான துறைவாரியான மதிப்பீடுகளை கருத்திற்கொள்கையில் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் இரண்டும் சேர்ந்து பொருளாதாரச் செயற்பாடுகளின் பெரும் பங்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பொருளாதாரத்தில் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் என்பவற்றின் பங்கு 2014இன் 51.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 51.0 சதவீதமாக விளங்கியது. குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் என்பன ஒன்றுசேர்ந்து பெயரளவு நியதிகளில் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 9.5 வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, பொருளாதாரத்தின் இரண்டாவது மிகப் பெரிய துறையான நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தின் 34.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மேலும், பொது அரசாங்கம்

அட்டவணை 2.2 நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறையின்படி மொத்த பெறுமதி சேர்ப்பு (அ) (ஆ)

| விடயம் | சதவீதப் பங்கு (%) 2014 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் |
| வேளாண்மை | 17.5 | - | - | 82.5 | 18.1 | - | - | 81.9 |
| கைத்தொழில் | 60.2 | - | 3.2 | 36.6 | 60.5 | - | 2.6 | 36.9 |
| பணிகள் | 24.6 | 7.3 | 13.9 | 54.2 | 23.7 | 7.4 | 15.3 | 53.7 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்ப்பு | 34.9 | 4.4 | 9.4 | 51.2 | 34.5 | 4.5 | 10.1 | 51.0 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மற்றும் நிதிக் கூட்டுத்தாபனங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட முறையே 14.3 சதவீதம் மற்றும் 13.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 13.6 சதவீதம் மற்றும் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, பொது அரசாங்கம் மற்றும் நிதிக் கம்பனிகள் 2015இல் பொருளாதாரத்தில் முறையே 10.1 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தின.

**பொருளாதாரத்தின் பங்குகள் வகைப்படியான செயற்பாட்டைக் கவனத்தில் கொள்ளும் போது 2015இல், வேளாண்மை அதுபோல் பணிகள் செயற்பாடுகளின் மொத்தப் பெறுமதிகூட்டல் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமல்லாத நிறுவனங்களால் உந்தப்பட்டிருக்கையில் கைத்தொழில் செயற்பாடுகள் நிதியல்லாக் கூட்டுத்தாபனத் துறையால் உந்தப்பட்டன.** இதன்படி, 2015இல் பொருளாதாரச் செயற்பாடுகளில் மொத்தப் பெறுமதிகூட்டலில் 81.9 சதவீதம் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களால் உருவாக்கப்பட்டிருக்கையில் எஞ்சியவை நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களிலிருந்து உருவாக்கப்பட்டது. வேளாண்மைச் செயற்பாடுகள் அநேகமானவற்றில் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களின் பங்களிப்பு நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களின் பங்கைவிட உயர்ந்து விளங்கியமை அவதானிக்கப்பட்டது. வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆகக்கூடிய பங்களிப்பு ஆழ்கடல் மீன்பிடியில் அவதானிக்கப்பட்டிருக்கையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களின் பங்களிப்பு விலங்கு உற்பத்தி மற்றும் தேயிலை வளர்த்தல் ஆகிய துறைகளில் பலமாகக் காணப்பட்டது. இதேவேளை, நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 2015இல் கைத்தொழில் செயற்பாடுகளில் மொத்தப் பெறுமதிகூட்டலில் 60.5 சதவீதம் பங்களிப்புச் செய்யப்பட்டிருப்பதுடன் இதைத் தொடர்ந்து குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் 36.9 சதவீதமும் பொது அரசாங்கத்திலிருந்து 2.6 சதவீதமும் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது. உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பில் மொத்தப் பெறுமதிகூட்டல் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத துறைகளின் கைத்தொழில் பங்கிற்கு பெரிதும் பங்களிப்புச் செய்திருக்கையில் பொது அரசாங்கத்திலிருந்தான பங்களிப்பு முக்கியமாக கட்டடவாக்கச் செயற்பாடுகளில் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை, பணிகள் செயற்பாடுகளுக்கான ஆகக்கூடிய பங்களிப்பு 53.7 சதவீதத்தைப் பிரதிநிதித்துப்படுத்தும் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து வந்திருக்கையில் 23.7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களிலிருந்து வந்தது. மேலும், பொது அரசாங்கம் நிதிக் கூட்டுத்தாபனங்கள் துறைகள் 2015இல் பணிகள் செயற்பாடுகளுக்கு முறையே 15.3 சதவீதம் மற்றும் 7.4 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. பணிகள் செயற்பாடுகளுக்கு குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்களின் பங்களிப்பு பெரும்பாலும் போக்குவரத்துச் செயற்பாடுகளிலிருந்து வந்திருக்கையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறையின் பங்களிப்பு பெரும்பாலும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகளிலிருந்து வந்தது. பொது அரச துறை பெரும்பாலும் பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு; கட்டாய சமூகப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் நிதிக் கம்பனிகள் துறைப் பங்களிப்பு நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகளிலிருந்து வந்தது.

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடிச் செயற்பாடுகள் பெறுமதி கூட்டல் நியதிகளில் 2014இன் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** வேளாண்மைச் செயற்பாடுகளிலான வளர்ச்சி இவ்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட அபரிமித நெல் அறுவடை காரணமாக நெல் பயிரிடுவதிலான குறிப்பிடத்தக்க விரிவாக்கம் மற்றும் மரக்கறிகள் வளர்ப்பிலிருந்தான கணிசமான பங்களிப்பால் பெரும்பாலும் ஏற்பட்டது. இதற்கும் மேலாக, பழமரங்கள் வளர்த்தல், விலங்கு உற்பத்தி மற்றும் எண்ணெய்ப் பசையுள்ள பழமரங்களை வளர்த்தலும் (தெங்கு, செவ்விளநீர், கமுகு) இவ் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தன. மேலும், காடாக்கல் மற்றும் குற்றியாக்கல், வாசனைத் திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்கற் பயிர்கள், ஏனைய நீண்டகாலப் பயிர்கள் மற்றும் ஏனைய தானியங்கள் என்பவற்றை வளர்த்தல் மற்றும் தாவரத்தை இனவிருத்தி செய்தல் மற்றும் வேளாண்மைக்கான துணைச் செயற்பாடுகள் வேளாண்மையிலான மொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. எனினும், மீன்பிடி, இறப்பர், தேயிலை, கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீடித்து நிலைத்திராத பயிர்கள் மற்றும் ஏனைய குடிபானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ போன்றவை) 2015இல் வேளாண்மையிலான வளர்ச்சியைக் குறைத்தன.

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டை அளவிடும் வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2014இன் 1.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 6.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இச்சுட்டெண்ணினுள் நெல், தெங்கு மற்றும் ஏனைய பயிர்களின் (பழங்கள், மரக்கறிகள் மற்றும் ஏனை களப்பயிர்கள்) துணைச் சுட்டெண்கள் அதிகரித்திருக்கையில், தேயிலை மற்றும் இறப்பர் துணைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. சுட்டெண்ணால் பிரதிபலிக்கப்பட்டவாறு கால்நடைத் துறை வளர்ச்சியடைந்திருக்கையில் மீன்பிடித் துறையில் சுருக்கம் பதிவுசெய்யப்பட்டது.

அட்டவணை 2.3
**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)**

| விடயம் | 2014 (அ) | 2015 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2013/14(அ) | 2014/15(ஆ) |
|---|---|---|---|---|
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 119.9 | 127.6 | -1.6 | 6.4 |
| 1 வேளாண்மை | 111.3 | 121.6 | -3.3 | 9.3 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 108.1 | 118.2 | -4.3 | 9.3 |
| நெல் | 90.4 | 128.9 | -26.9 | 42.6 |
| தேயிலை | 108.5 | 105.6 | -0.5 | -2.7 |
| இறப்பர் | 73.5 | 66.0 | -24.4 | -10.2 |
| தெங்கு | 101.3 | 107.9 | 14.2 | 6.5 |
| ஏனைய பயிர்கள் | 139.2 | 142.1 | 11.1 | 2.1 |
| மரக்கறிகள் | 135.8 | 136.1 | 0.5 | 0.2 |
| பழங்கள் | 139.7 | 152.8 | 22.0 | 9.4 |
| ஏனைய களப்பயிர்கள் | 140.5 | 144.6 | 8.4 | 2.9 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 136.2 | 147.2 | 3.1 | 8.1 |
| 2 மீன்பிடி | 160.4 | 155.9 | 4.4 | -2.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

### நெல்

**நெல் உற்பத்தி பொருத்தமான கொள்கைகள் மற்றும் சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்டு நெல் துறை 2015இல் சாதனைமிக்க உயர் மட்டத்திற்கு அதிகரித்தது.** 2014இல் மோசமான வானிலை நிலைமைகளால் வெகுவாகப் பாதிப்படைந்த நெல் உற்பத்தி 2015இல் 4.8 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 42.6 சதவீதத்தால் அதிகரித்தது.


அட்டவணை 2.4
**நெல் துறை புள்ளிவிபரங்கள்**

| விடயம் | அலகு | 2014 (அ) பெரும்போகம் | 2014 (அ) சிறுபோகம் | 2014 (அ) மொத்தம் | 2015 (ஆ) பெரும்போகம் | 2015 (ஆ) சிறுபோகம் | 2015 (ஆ) மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 651 | 313 | 964 | 773 | 481 | 1,254 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 580 | 301 | 881 | 735 | 476 | 1,211 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 521 | 272 | 793 | 659 | 429 | 1,088 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,236 | 1,145 | 3,381 | 2,877 | 1,942 | 4,819 |
| | '000 புசல்கள் | 107,155 | 54,872 | 162,027 | 137,882 | 93,091 | 230,973 |
| சராசரி விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,222 | 4,204 | 4,264 | 4,364 | 4,527 | 4,429 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 3,174 | 1,588 | 4,762 | 3,114 | 2,088 | 5,202 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 600 | - | - | 286 |
| நெல்லிற்குச் சமமான இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 858 | - | - | 409 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக மற்றும் சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதே வேளை மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணிப்பிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி




விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் இணைந்து சராசரி விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வாண்டில் உயர் உற்பத்திக்குப் பங்களிப்பு செய்தது. இவ்வாண்டில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 1,088,374 எக்டேயர்களுக்கு 37.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் நெல் விளைச்சல் 2014இன் எக்டேயர் ஒன்றுக்கான 4,264 கி.கிறாம்களிலிருந்து 2015இல் எக்டேயர் ஒன்றுக்கு 4,429 கி.கிறாம்களுக்கு அதிகரித்தது. நெல் பயிர்ச்செய்கையில் பருவகால நியதிகளில், 2014/15 பெரும்போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் அளவு 2.9 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 28.7 சதவீதத்தால் அதிகரித்து மொத்த நெல் உற்பத்தியில் 60 சதவீதத்திற்கு வகைகூறுகையில் 2015 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 1.9 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 69.7 சதவீதத்தால் அதிகரித்தது. உத்தரவாதமளிக்கப்பட்ட நெல் கொள்வனவு விலை, வளமாக்கி உதவுதொகை மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையால் மேற்கொள்ளப்பட்ட இருப்புக்களின் கொள்வனவு ஆகிய வடிவிலான அரசின் தலையீடு 2015இல் நெல் துறையின் கணிசமான முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்தது. 2015இல் வருடாந்த நெல் உற்பத்தி 3.3 மில்லியன் மெற்றிக் தொன் அரிசிக்குச் சமனாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது அண்ணளவாக 17 மாதங்களுக்கு நாட்டுக்கான அரிசியின் தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதாகும். இவ்வாண்டிலான அதிகரித்த நெல் உற்பத்தி மற்றும் கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட பாரிய தளம்பல் முன்னேற்றகரமான களஞ்சிய வசதிகளுடான நெல்லின் மாறுபாடும் இருப்பைக் கட்டியெழுப்புவதற்கான தேவையை வெளிப்படுத்தும் அதேவேளையில், அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கான தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்தி மேலதிக அரிசி உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் சாத்தியத்தையும் ஆராய்கிறது.

**2015இல் கொள்கை மாற்றங்கள் மற்றும் சந்தை நிலைமைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் நெல் மற்றும் அரிசி என்பவற்றின் விலைகள் அசைவடைந்திருந்தன.** 2015இன் முற்பகுதியில் உயர்ந்த மட்டங்களில் தொடர்ந்து விளங்கிய அரிசி விலைகள் 2014/15 பெரும்போகத்தில் அதிகரித்த நெல் அறுவடையின் கிடைப்பனவு மற்றும் இவ்வாண்டின் முற்பகுதியிலான அரிசி இறக்குமதிகளால் வீழ்ச்சியடைந்தன. இதேவேளை, 2015இன் அபரிமித அறுவடைக்குப் பதிலிறுத்தும் வகையில், உள்ளூர் விலைகளை உறுதிப்படுத்தல் மற்றும் வேளாண்மையாளர்களுக்கு இலாபகரமான விலைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் அரிசி இறக்குமதிகள் மீதான வரிகளை மேல்நோக்கி விதித்தது. அரசின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு விலையிலான அதிகரிப்புக் காரணமாக நெல் விலைகளில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பைத் தொடர்ந்து இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் அரிசி விலைகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கின. இதன்படி, சம்பாவின் சராசரி சில்லறை விலை 2014இன் கி.கிறாம் ஒன்றுக்கான ரூ.84.14 உடன் ஒப்பிடுகையில் 2015இல் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.91.20 ஆக விளங்கிய வேளையில் நாட்டரிசியின் விலை முன்னைய ஆண்டின் கி.கிறாம் ஒன்றுக்கான ரூ.78.37 உடன் ஒப்பிடுகையில் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.77.95 ஆக விளங்கியது. இதேவேளை, உயர் வரிகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் அரிசி இறக்குமதிகள் 2015இன் இரண்டாம் காலாண்டிலிருந்து மெதுவடையத் தொடங்கி இவ்வாண்டில் 285,604 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 52.4 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

## தேயிலை

**தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தேயிலை உற்பத்தி 2015இல் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.** வழங்கல் பக்கத்துக் காரணிகள் அதுபோல் கேள்வி நிலைமைகளின் பதிலிறுத்தல் காரணமாக மொத்தத் தேயிலை உற்பத்தி 2014இன் 338 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 2015இல் 329 மில்லியன் கி.கிறாம்களுக்கு 2.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வழங்கல் பக்கத்தில், இவ்வாண்டின் பெரும்பகுதியில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் கூலி அதிகரிப்பை வலியுறுத்தி யூலையில் பெருந்தோட்டத் துறையின் "மெதுவான பணி" தொழிற்சங்க நடவடிக்கை தேயிலை உற்பத்தியைப் பாதித்தன. கேள்விப் பக்கத்தில், வீழ்ச்சியடைந்து செல்லும் எண்ணெய் விலைகள் மற்றும் அதிகரித்த பூகோள அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக பொருளாதார பின்னடைவுகளை அனுபவித்த முக்கிய ஏற்றுமதிச் சேருமிடங்களிலிருந்தான குறைந்த கேள்வியுடன் உலக நிலைமைகள் சாதகமாக இருக்கவில்லை. 2015இல் ஒட்டுமொத்த உற்பத்தியில்

அண்ணளவாக 85 சதவீதத்துக்கு வகைகூறிய உயர்நில மற்றும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி முறையே 77 மில்லியன் கி.கிறாமிற்கும் 202 மில்லியன் கி.கிறாமிற்கும் 2.5 சதவீதத்தாலும் 3.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. எனினும், மத்திய நிலத் தேயிலை உற்பத்தி 50 மில்லியன் கி.கிறாம்களுக்கு 1.0 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போலவே, சிறுஉடமைத் தேயிலைத் துறை மொத்த தேயிலைக் கைத்தொழிலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி 2015இல் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 73 சதவீதத்திற்கும் கூடுதலாகப் பங்களிப்புச் செய்தது.

**2014 செத்தெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்ட தேயிலை விலைகளிலான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2015 முழுவதிலும் தொடர்ந்தது.** முக்கிய தேயிலை இறக்குமதியாளர்களிடமிருந்தான கேள்வியில் ஏற்பட்ட சுருக்கம் 2015இல் தேயிலை விலைகளை மோசமாகப் பாதித்தது. பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட மத்திய கிழக்குப் பொருளாதாரங்களிலிருந்தான குறைந்த கேள்வி மற்றும் ருஷியா மற்றும் உக்ரேன் போன்ற நாடுகளின் நாணயங்களின் கூர்மையான பெறுமானத் தேய்வு தேயிலை விலைகள் மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. இதன்படி, கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலையின் சராசரி விலை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றுக்கான ரூ.401.46 உடன் ஒப்பிடுகையில் 2015இல் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.459.01 இற்கு 12.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கொழும்பு தேயிலை ஏலத்தில் சராசரி தேயிலை விலைகளில் ஆகக் கூடிய ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியை தாழ்நிலத் தேயிலை (14.2 சதவீதம்) பதிவுசெய்ததுடன் அதைத் தொடர்ந்து மத்திய நிலத் தேயிலை (11.3 சதவீதம்) மற்றும் உயர் நிலத் தேயிலை (7.1 சதவீதம்) பதிவுசெய்தன. கப்பல் ஏற்று சராசரி விலையும் 2014இன் கி.கிறாமொன்றுக்கான ரூ.649.44 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.593.08 இற்கு 8.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேயிலைக் கொழுந்திற்காக தேயிலை சிறுஉடமையாளர்களால் பெறப்பட்ட சராசரி விலை 2014இன் கி.கிறாமொன்றுக்கான ரூ.67.54 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.58.80 இற்கு வீழ்ச்சியடைந்தது. இத்துறையின் இலாபகரத்தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருத்தலுக்குச் சவாலை ஏற்படுத்தும் குறைந்த உற்பத்தித்திறனுடன் சேர்ந்து தேயிலைக் கைத்தொழில் தற்போது உயர் உற்பத்திச் செலவை அனுபவித்து வருவதால் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் அதுபோல் இனிவரும் காலங்களில் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்கும் திருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். முன்னோக்கிச் செல்கையில், இலங்கைத் தேயிலைக்கான மூன்றாவது மிகப்பெரிய ஏற்றுமதிச் சேருமிடமான ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளின் நீக்கமானது உலகக் கேள்வியிலான சாத்தியமான முன்னேற்றங்கள் தேயிலை விலைகளை உறுதியடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இறப்பர்

**குறைந்த பன்னாட்டுச் சந்தை விலைகளின் காரணமாகத் தொடர்ந்து நான்காவது ஆண்டாக 2015இல் இறப்பர் உற்பத்தியில் பெருமளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.** இறப்பர் உற்பத்தி 2014இன் 98,573 மெ.தொன்களிலிருந்து 2015இல் 88,570 மெ.தொன்களுக்கு 10.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக, சிறு உடமையாளர்கள் குறைந்த இறப்பர் விலைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் பாலெடுத்தல் தொழிற்பாடுகளை மெதுவாக்கினர். மேலும், இவ்வாண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து உயர் உற்பத்திச் செலவு, தோட்டங்களிலான மோசமான முகாமைத்துவம் மற்றும் வயது முதிர்ந்த மரங்கள் உற்பத்தியில் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. நாட்டின் மொத்த இறப்பர் உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு வகைகூறும் சீற் இறப்பரின் உற்பத்தி 2015இல் 44,390 மெ.தொன்களுக்கு வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.5 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 13 சதவீதத்திற்கு வகைகூறும் கிறேப் இறப்பர் உற்பத்தி இவ்வாண்டில் 11,091 மெ.தொன்களுக்குக் 27.3 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இறப்பரின் ஏனைய வகைகளின் உற்பத்தி 2015இல் 25,480 மெ.தொன்களுக்கு 6.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, 2015இல் புதிய நடுகை அதுபோல் இறப்பரின் மீள்நடுகையிலான வீழ்ச்சி இயற்கை இறப்பரின் தாழ்ந்த விலைகளை விளைவித்தது. எனினும், 2015இல் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் 950 கி.கிறாம்களுக்கு 6.9 சதவீதத்தால் அதிகரித்தது. இயற்கை இறப்பர் விலைகளிலான தொடர்ச்சியான வீழ்ச்சி உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளிலுள்ள சிறுஉடமையாளர்கள் ஏனைய வேளாண்மைச் செயற்பாடுகளை நோக்கி நகரச் செய்தமையால் உலக உற்பத்தியில் வீழ்ச்சிக்கு வழியமைத்தது.

**பன்னாட்டுச் சந்தை விலைகளிலான வீழ்ச்சியைத் தொடர்ந்து உள்ளூர்ச் சந்தையில் இறப்பர் விலைகள் 2015இலும் அவற்றின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்தன.** உலகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் பெற்றோலிய விலைகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பரின் மெ.தொன் ஒன்றுக்கான சராசரி விலை 2014இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,960 இலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 1,560 இற்கு 20.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உலக சந்தையில் நலிந்த

விலைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் ஆர்எஸ்எஸ் 1 சராசரி விலை முன்னைய ஆண்டின் கி.கிறாமொன்றிற்கான ரூ.286.05 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.248.17 இற்கு 13.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உலக சந்தையிலான குறைந்த விலைகளுடன் சேர்ந்த குறைந்த உள்நாட்டு உற்பத்தி 2015இல் இறப்பர் இறக்குமதியை இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரிக்கச் செய்தது.

## தெங்கு

**2015இல் தெங்கு உற்பத்தி 3,000 மில்லியன் காய்களை விஞ்சியதுடன் இது 2000ஆம் ஆண்டிற்கு பின்னர் பதிவுசெய்யப்பட்ட ஆகக் கூடிய உற்பத்தி மட்டமாகும்.** தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டின் 2,870 மில்லியன் காய்களுடன் ஒப்பிடுகையில் 3,056 மில்லியன் காய்களுக்கு 6.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. உற்பத்தியிலான இம்முன்னேற்றம் தெங்கு பயிரிடும் பிரதேசங்களிலான சாதகமான மழைவீழ்ச்சி மற்றும் 2014 மற்றும் 2015 முற்பகுதியில் நிலவிய பொருத்தமான வளி வெப்பநிலையால் ஏற்பட்டது. மேலும், சாதகமான வேளாண்மை நடைமுறைகள் மற்றும் முகாமைத்துவம் என்பனவும் இத்திருப்திகரமான முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தன. அதிகரித்த உற்பத்தியுடன் முக்கிய உள்ளீட்டு உற்பத்திகளின் உற்பத்தியும் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் உயர்ந்தன. குறிப்பாக, தேங்காய் எண்ணெய் உற்பத்தி முன்னைய ஆண்டின் 45,268 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 52.790 மெ.தொன்களுக்கு 16.6 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. தேங்காய்க் களி, தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் பால் என்பவற்றின் உற்பத்தியானது ஏற்றுமதி விலைகள் அதிகரித்தமையால் ஏற்பட்ட கேள்வி காரணமாக இவ்வாண்டில் 31,885 மெ.தொன்களுக்கு 29.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2015இல் 13,765 மெ.தொன்களை உற்பத்தி செய்த தூய்மையான தேங்காய் எண்ணெய்க் கைத்தொழில் உலக சந்தையில் உயர் கேள்வி மற்றும் கவர்ச்சிகரமான ஏற்றுமதிச் செயலாற்றத்துடன் தோற்றம்பெற்றுவரும் தொழிலாக வந்துள்ளது. இதன்படி, 2015இல் தூய்மையான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 6,014 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 12,291 மெ.தொன்களுக்கு கணிசமானளவில் அதிகரித்தது. தேங்காய்த் துருவல் உற்பத்தி 2014இல் பதிவுசெய்யப்பட்ட 50,367 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 41,795 மெ.தொன்களுக்கு 17.0 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**உள்நாட்டுச் சந்தையில் தெங்கின் அதிகரித்த வழங்கலுக்கு மத்தியிலும், 2015இல் தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகள் உயர் மட்டத்தில் தொடர்ந்து விளங்கி தெங்கை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிலிருந்து எழும் உயர் கேள்வியைப் பிரதிபலிக்கின்றது.** தேங்காயின் சராசரிப் பண்ணை விலை 2014இன் காய் ஒன்றுக்கு ரூ.32.50 இலிருந்து 2015இல் காய் ஒன்றுக்கு ரூ.34.00 இற்கு அதிகரித்திருக்கையில், தேங்காயின் சராசரிச் சில்லறை விலையும் 2014இன் காய் ஒன்றுக்கான ரூ.45.50 இலிருந்து 2015இல் காய் ஒன்றுக்கு 50.00 இற்கு அதிகரித்தது. இதேவேளை, இவ்வாண்டில் தேங்காய்த் துருவலின் விலை மேலும் அதிகரித்தது. தேங்காய்த் துருவலின் சராசரி விலை 2014இன் கி.கிறாமொன்றுக்கான ரூ.254.50

**அட்டவணை 2.5**
**முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்**

| விடயம் | அலகு | 2014 (அ) | 2015 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2013/14 (அ) | 2014/15 (ஆ) |
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 338.0 | 329.0 | -0.6 | -2.7 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 203 | 203 | -8.6 | - |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 195 | 195 | 6.5 | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 475.11 | 478.23 | 12.4 | 0.7 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 459.01 | 401.46 | 3.3 | -12.5 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 649.44 | 593.08 | 4.1 | -8.7 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,195 | 806 | -24.9 | -32.6 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 401 | 479 | 52.5 | 19.5 |
| 1.8 மொ.உ.உ.,ன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.9 | 0.8 | - | -11.1 |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 98.6 | 88.6 | -24.4 | -10.1 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 134 | 135 | - | 0.7 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 111 | 116 | 5.7 | 4.5 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 160.00 | 170.00 | 6.7 | 6.3 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 286.05 | 248.17 | -24.1 | -13.2 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 362.83 | 342.03 | -6.9 | -5.7 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 2,096 | 621 | 3.6 | -70.4 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,428 | 769 | -52.1 | -46.1 |
| 2.8 மொ.உ.உயின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.3 | 0.3 | -40.0 | - |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,870 | 3,056 | 14.2 | 6.5 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 441 | 455 | 12.5 | 3.2 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 13.67 | 15.25 | 0.7 | 11.6 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 31.51 | 33.88 | 6.5 | 7.5 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | காய்க்கு ரூபா | 39.08 | 54.54 | 33.1 | 39.6 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 5,796 | 4,919 | 27.6 | -15.1 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 30,771 | 14,408 | 30.0 | -53.2 |
| 3.7 மொ. உ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.8 | 14.3 | - |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு ஹெக்டெயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.296.10இற்கு 16.4 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், பன்னாட்டுச் சந்தையில் மரக்கறி எண்ணெய்களின் விலைகளில் ஏற்பட்ட குறைவு அதுபோல் உள்ளூர் தேங்காய் எண்ணெயில் ஏற்பட்ட அதிகரிப்பைத் தொடர்ந்து தேங்காய் எண்ணெயின் விலை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, 750 மி.மீற்றர் தேங்காய் எண்ணெய் போத்தலொன்றின் விலை 2014இன் ரூ.212.00 இலிருந்து 2015இல் ரூ.206.50 இற்கு வீழ்ச்சியடைந்தது. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலை 2014இன் காயொன்றுக்கான ரூ.39.08 இலிருந்து 2015இல் காயொன்றுக்கு ரூ.54.54 இற்கு 39.6 சதவீதத்தால் அதிகரித்தது. தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ.46,517 மில்லியனிலிருந்து 2015இல் ரூ.47,745 மில்லியனுக்கு 2.6 சதவீதத்தால் அதிகரித்தன.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செயலாற்றம் 2015இல் மீளெழுச்சி அடைந்து 12.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** மிளகு, கராம்பு, கறுவா, ஏலக்காய் மற்றும் பாக்கு உற்பத்தி இவ்வாண்டில் வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கையில் கோப்பி, கொக்கோ மற்றும் சாதிக்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பூக்கும் காலம் மற்றும் பழுக்கும் காலப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவின் விரிவாக்கத்தால் உந்தப்பட்டு மிளகு உற்பத்தி 31,013 மெ.தொன்களுக்கு 66.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கையில் ஏனைய ஒவ்வொரு ஆண்டுக்கும் அபரிமித அறுவடையை உற்பத்தி செய்யும் சுற்றுவட்ட அறுவடை மாதிரி காரணமாக கராம்பு உற்பத்தி 5,253 மெ.தொன்களுக்கு 62.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் மிளகு மற்றும் கறுவாவின் ஏற்றுமதி அளவுகளும் முறையே 103.8 சதவீதத்தாலும் 348.4 சதவீதத்தாலும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. ஆண்டுக்காலத்தில் கறுவா உற்பத்தி 2014இன் 17,600 மெ.தொன்களிலிருந்து 17,707 மெ.தொன்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. 2015இன் முதலரைப் பகுதியில் குறிப்பாக இந்தியாவிலிருந்தான உயர் ஏற்றுமதிக் கேள்வி காரணமாக முன்னைய ஆண்டிலான கணிசமான வளர்ச்சியைத் தொடர்ந்து பாக்கு உற்பத்தி 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், கோப்பி மற்றும் கொக்கோ உற்பத்தி 2015இல் முறையே 2,126 மெ.தொன்னுக்கும் 457 மெ.தொன்னுக்கும் 20.5 சதவீதத்தாலும் 8.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. மரமுந்திரிப் பருப்பு உற்பத்தி மற்றும் விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பால் பண்ணை மட்ட விலைகளிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் பூக்கும் காலத்தில் எதிர்பார்க்கப்படாத மழைவீழ்ச்சி காரணமாக 33.3 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.

### ஏனைய களப் பயிர்கள்

**ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி 2015 முற்பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்படுத்தப்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு மத்தியிலும் அதிகரித்தது.** ஒட்டுமொத்தமாக, ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி 2014இன் 362,452 மெ.தொன்களிலிருந்து 2015இல் 339,495 மெ.தொன்களுக்கு 6.8 சதவீதத்தால் அதிகரித்தது. இது, 2014/15 பெரும்போகத்திலான 5.6 சதவீத வளர்ச்சி மற்றும் 2015 சிறுபோகத்திலான 10.8 சதவீத வளர்ச்சியினதும் இணைந்த வெளிப்பாடாகும். போதிய நீர் வழங்கலின் கிடைப்பனவு அதுபோல் இலாபகரமான விலைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவின. சோளம், குரக்கன், பாசிப்பயறு, உழுந்து, சோயா அவரை, நிலக்கடலை மற்றும் உருளைக்கிழக்கின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் விரிவடைந்திருக்கையில் தட்டைப் பயறு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் மற்றும் மிளகாய் எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இது மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் இப்பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகளுக்கு வழிகோலின. இவ்வாண்டில் பெரிய வெங்காய உற்பத்தி 89,323 மெ.தொன்களுக்கு 11.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையால் பெரிய வெங்காயத்தின் இறக்குமதிகள் 210,253 மெ.தொன்களுக்கு 39.7 சதவீதத்தால் அதிகரித்தன. 2015இல் உருளைக்கிழங்கு உற்பத்தி 17.7 சதவீதத்தால் 97,391 மெ.தொன்களுக்கு அதிகரித்த போதிலும், உருளைக்கிழங்கு இறக்குமதிகளும் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியுடன் இணைந்து உலக சந்தையில் நிலவிய தாழ்ந்த விலைகளால் உதவப்பட்டு 20.2 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை, சோளம், தட்டைப் பயறு மற்றும் நிலக்கடலையின் உற்பத்தி முக்கியமாக மூன்றாவது பருவகால பயிர்ச்செய்கையிலிருந்தான உற்பத்தி காரணமாக 2015இல் மதிப்பிடப்பட்ட உள்நாட்டுத் தேவையை விஞ்சியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. களப் பயிர்களின் முன்னேற்றமடைந்த உள்நாட்டு வழங்கல் அவ்வுற்பத்திகளைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு உதவி இறக்குமதிகளுக்கான கேள்வியை இல்லாமல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், உள்நாட்டு உணவுப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு, பருவகாலத்தில் இல்லாத உற்பத்தியை மேம்படுத்துதல், களஞ்சியப்படுத்தல் இயலளவை விரிவாக்கல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் விதை உற்பத்தியைப் பலப்படுத்துவதன் மூலம் அனைத்து ஏனைய களப் பயிர்களின் வழங்கலை மேம்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

### மரக்கறிகள்

**மரக்கறி உற்பத்தி 2015இல் 2.2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்து 1,875,508 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.** இது 2014/15 பெரும் போகத்திலான 2.4 சதவீத அதிகரிப்பாலும் 2015 சிறுபோகத்திலான 1.8 சதவீத வளர்ச்சியாலும் உதவப்பட்டது. இதேவேளை, மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக இவ்வாண்டு முழுவதும் மரக்கறி விலைகளில் பரவலான தளம்பல்கள் காணப்பட்டன. 2014 பிற்பகுதியில் நிலவிய காலநிலை தொடர்பான பின்னடைவுகள் பயிர்ச்சேதங்களை ஏற்படுத்தி சந்தை வழங்கலைக் குறைத்ததுடன் 2015இன் முற்பகுதியில் பல மரக்கறி வகைகளின் விலைகளை அதிகரிக்கச் செய்தன. இதனால், பெரும்போகம் அது போல் சிறுபோகத்தின் உயர் அறுவடை காலப்பகுதியில் மரக்கறிகளின் வழங்கல் அதிகரித்து விலைகளைக் குறைத்தன. இவ்வாண்டின் இறுதியை நோக்கி, மரக்கறி விலைகள் கிரமமான பருவகால மாதிரியை கூடியளவுக்கு வெளிப்படுத்தின. கீழ்நாட்டு மரக்கறிகளின் ஆண்டுச் சராசரி சில்லறை விலைகள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றுக்கு ரூ.70.00 இலிருந்து ரூ.152.00 வரையான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.70.00 இலிருந்து ரூ.256.00 இற்கான வீச்சில் காணப்பட்டன. இதேவேளை, மலைநாட்டு மரக்கறிகளின் ஆண்டுச் சராசரி சில்லறை விலைகள் கி.கிறாமொன்றுக்கு 2014இன் ரூ.93.00 இலிருந்து ரூ.229.00 வரையான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.94.00 இலிருந்து ரூ.308.00 வரையான வீச்சிடையே காணப்பட்டன. 2015இல் ரூ.4,142 மில்லியன் பெறுமதியான 26 மில்லியன் கி.கிறாம் மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதேவேளை, அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் மொத்த மரக்கறி உற்பத்தியின் 30 - 40 சதவீதம் வரையில் உள்ளதாக மதிப்பிடப்பட்டதுடன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரைப் பாதுகாத்தல் அதுபோல் இத்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### பழங்கள்

**அவக்காடோ, மெலன், காவா, ரம்புட்டான் மற்றும் அன்னாசியிலிருந்தான குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுடன் 2015இல் பழங்களின் உற்பத்தி அதிகரித்தது.** பழ உற்பத்தி முன்னைய ஆண்டின் 0.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 15.6 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வாண்டில் ரூ. 5,173 மில்லியன் பெறுமதியான 33 மில்லியன் கி.கிறாம் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கையில் ரூ.5,637 மில்லியன் பெறுமதியான 45 மில்லியன் கி.கிறாம் அப்பிள், மண்டறின், தோடம்பழம் மற்றும் திராட்சை உள்ளிட்ட உடன் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இத்துறையின் அறுவடைக்குப் பின்னரான இழப்பு கிட்டத்தட்ட 30-40 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### சீனி

**சாதகமான மழை வீழ்ச்சி, அதிகரித்த நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை மற்றும் கரும்பின் உயர் கொள்வனவு விலையால் உதவப்பட்டு சீனி உற்பத்தி 2015இல் அதிகரித்தது.** சீனி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் செயலாற்றம் மாறுபட்ட போதிலும் 2015இல் சீனி உற்பத்தி 55,982 மெ.தொன்களுக்கு 7.0 சதவீதத்தால் அதிகரித்தது. 2015இல் மொத்த உள்நாட்டு சீனி உற்பத்தியில் அரைவாசிக்கும் கூடுதலாக வகைகூறும் பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் உற்பத்தி 27,612 மெ.தொன்களுக்கு 53.7 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் செவனகல மற்றும் கல்ஓயா சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 14,377 மெ.தொன்கள் மற்றும் 13,994 மெ.தொன்களுக்கு 29.8 சதவீதத்தாலும் 0.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. கந்தளாய் சீனித் தொழிற்சாலை மிக அண்மிய காலத்தில் அதன் தயாரிப்புத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு கரும்புப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளது. இதேவேளை, உற்பத்தித்திறனை பகுதியளவில் பிரதிபலிக்கும் சீனி மீட்பு வீதம் முன்னைய ஆண்டின் 8.0 சதவீதத்திலிருந்து 2015இல் 7.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.[1] 2015இல் ஒட்டுமொத்த உள்நாட்டுச் சீனி உற்பத்தி நாட்டின் மொத்த சீனித் தேவையின் 10 சதவீத்தைப் பூர்த்திசெய்ய போதுமானது. உலக சந்தையில் நிலவும் தாழ்ந்த சீனி விலைகளுடன் சேர்ந்து அதிகரித்த கேள்வி 2015இல் சீனி இறக்குமதிகளை 623,971 மெ.தொன்களுக்கு 20.1 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது. சீனிக் கைத்தொழிலின் விரிவாக்கத்துக்கான உள்ளார்ந்த வளம் மற்றும் சீனியை இறக்குமதி செய்வதில் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான அளவைப் பரிசீலனையில் கொண்டு தற்போது சீனியின் சில்லறை விலையைக் காட்டிலும் கூடுதலாகக் காணப்படும் உற்பத்திச் செலவைக் குறைக்கும் அதேவேளையில் முன்னேற்றமடைந்த வகைகளைப் பயன்படுத்தல், சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நவீன தொழிநுட்பத்துடன் சீனிக் கைத்தொழிலை புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

### மீன்பிடி

**மீன்பிடித் துறை 2015இல் பின்னடைவை அனுபவித்தது.** 2015இல் மீன் உற்பத்தி 2014இல் பதிவு செய்யப்பட்ட 4.3 சதவீத

1.

$$\text{சீனி மீட்பு வீதம்} = \frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{சாறாக்கப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$$

**அட்டவணை 2.6**
**மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2014 | 2015 (அ) | மாற்றம் (%) 2013/14 | மாற்றம் (%) 2014/15 (அ) |
|---|---|---|---|---|
| கடல் | 459 | 453 | 3.0 | -1.4 |
| கரையோரம் மற்றும் களப்பு | 279 | 269 | 4.1 | -3.5 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 180 | 184 | 1.4 | 1.9 |
| நன்னீர் மீன்பிடி | 76 | 67 | 13.6 | -11.2 |
| பிடிப்பு | 69 | 57 | 25.1 | -17.1 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 2 | 3 | -76.1 | 77.0 |
| இறால் வளர்ப்பு | 5 | 7 | 16.3 | 37.7 |
| மொத்தம் | 535 | 520 | 4.3 | -2.8 |

(அ) தற்காலிகமானது

மூலம்: கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 520,190 மெ.தொன்களுக்கு 2.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது முக்கியமாக நன்னீர் மீன் உற்பத்தி 67,300 மெ.தொன்களுக்கு 11.2 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்டது. நன்னீர் மீன் உற்பத்தியினுள், நன்னீர் மீன்பிடியிலான வீழ்ச்சி 2015இன் முற்பகுதியில் மீன்பிடிப் பிரதேசங்களைக் குறைந்த பாரிய நீர்த்தேக்கங்களிலான உயர் நீர்மட்டங்கள் மற்றும் 2014இல் நீர்த்தேங்கங்களுக்குள் குறைந்தளவான மீன்குஞ்சுகள் விடப்பட்டமையாலும் உந்தப்பட்டது. எனினும், இறால் பண்ணை மற்றும் அலங்கார மீன் துணை வகைகளின் உற்பத்தி இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதேவேளை, ஆழ்கடல் மீன் உற்பத்தி கரையோர மற்றும் குடாப்பகுதியின் மீன் உற்பத்தியிலான வீழ்ச்சியின் பெருமளவு காரணமாக 452,890 மெ.தொன்களுக்கு 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் கரைகடந்த மீன் உற்பத்தி சிறிதளவால் அதிகரித்தது. உற்பத்தியிலான வீழ்ச்சிக்குப் பதிலிறுத்தும் வகையில் பெரிய மற்றும் சிறிய மீன் வகைகள் இரண்டினதும் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு முழுவதும் உயர் மட்டத்தில் தொடர்ந்து காணப்பட்டன. மேலும், இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீதான தடை காரணமாக மீன் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ.22,130 மில்லியனுக்கு 32.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இதேவேளை, தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் சிறப்புப் பண்டத்தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.102 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.50 இற்கு குறைக்கப்பட்டதன் பகுதிக் காரணத்தால் 2014இன் 19,591 மெ.தொன்களிலிருந்து 2015இல் 49,061 மெ.தொன்களுக்கு 150.2 சதவீதத்தால் அதிகரித்தது.

## கால்நடை

**மொத்த தேசிய பால் உற்பத்தியில் அதிகரித்துச் செல்லும் போக்கு 2015இலும் தொடர்ந்தது.** பதனிடப்படாத பாலுக்கான சாதகமான உற்பத்தியாளர் விலைகள் மற்றும் பால் தொழிற்சாலைகளின் அதிகரித்த இயலளவுடன் பாரிய பால் சேகரிப்பாளர்களிடமிருந்து பதனிப்படாத பாலுக்கான வளர்ச்சியடைந்து வரும் கேள்வி காரணமாக 2015இல் பால் உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 374 மில்லியன் லீற்றர்களுக்கு 12.1 சதவீதத்தால் அதிகரித்தது. பசும்பால் உற்பத்தி 305 மில்லியன் லீற்றருக்கு 11.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் எருமைப்பால் உற்பத்தி 69 மில்லியன் லீற்றருக்கு 13.2 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், பால் கறக்கும் பசுக்களின் எண்ணிக்கை 392,710இற்கு 2.1 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் பால் கறக்கும் எருமைகளின் எண்ணிக்கை 91,570இற்கு 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பால் சேகரிப்பு 10.8 மில்லியன் லீற்றரிலிருந்து 2015இல் 11 மில்லியன் லீற்றருக்கு அதிகரித்திருக்கையில் மில்கோ பிறைவேட் லிமிட்டெட் அதன் உற்பத்தியை 62 மில்லியன் லீற்றருக்கு 0.5 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது. ரிடியகம பண்ணையில் இறக்குமதி செய்யப்பட்ட கன்று ஈனும் பசுக்கள், பசுப்பால் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது. ரிடியகம பண்ணையில் 2014இல் அவுத்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தூய மற்றும் கலப்பினப் பசுக்களின் முதலாவது பெறுகையைத் தொடர்ந்து இது மேலும், இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களை தீவிர முகாமை முறைமைகளின் கீழ் பராமரிக்கும் நவீன பால் பண்ணையாக விரிவாக்கப்பட்டது. இதேவேளை, பாரிய அளவிலான உற்பத்தியாளர்கள் அவர்களின் பால் சேகரிப்பை 2015இல் 219 மில்லியன் லீற்றருக்கு 1.5 சதவீதத்தால் அதிகரித்தனர். இம் முன்னேற்றம் மில்கோவின் பொலனறுவை, திகன மற்றும் அம்பேவல தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கத்தால் உதவப்பட்டது. பாலின் தேசிய சராசரி உற்பத்திச் செலவு லீற்றர் ஒன்றுக்கு

**அட்டவணை 2.7**
**கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2014 (அ) | 2015 (ஆ) | மாற்றம் (%) 2013/14 (அ) | மாற்றம் (%) 2014/15 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.4 | 1.4 | -8.0 | -1.0 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.1 | -5.5 | -1.5 |
| எருமைகள் | 0.3 | 0.3 | -15.8 | 0.7 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 333.9 | 374.4 | 1.4 | 12.1 |
| பசும்பால் | 272.9 | 305.4 | 2.9 | 11.9 |
| எருமைப்பால் | 60.9 | 69.1 | -4.8 | 13.2 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) (இ) | 33.6 | 33.5 | 14.1 | -0.3 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 54.7 | 62.0 | -8.7 | 13.4 |
| 5. முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,721.0 | 1,899.0 | 5.1 | 10.3 |
| 6. கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 150.3 | 164.5 | 4.0 | 9.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை மற்றும் மில்கோ தனியார் லிமிடட் என்பவற்றின் உற்பத்திகள் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றது

மூலங்கள்: கிராமிய மற்றும் பொருளாதார விவகார அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை
மில்கோ தனியார் லிமிடட்

ரூ.32.42இற்கு ரூ.2.24ஆல் குறைக்கப்பட்ட அதேவேளை, சராசரிப் பண்ணை விலை லீற்றர் ஒன்றுக்கு ரூ.7.34ஆல் ரூ.62.00 இற்கு அதிகரித்து பண்ணையாளர்களுக்கு உயர் வருவாய்களுக்கு வழிகோலியது. வரவுசெலவுத் திட்டம் 2015இன் மூலம் பாலின் உத்தரவாதமளிக்கப்பட்ட விலை லீற்றர் ஒன்றுக்கு ரூ.60.00இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் இது மேலும் 2015 யூனிலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூ.70.00 இற்கு அதிகரிக்கப்பட்டது. இதேவேளை, பால் மா இறக்குமதி ரூ.31,842 மில்லியன் பெறுமதியாக விளங்கி 81,759 மெ.தொன்களுக்கு 21.7 சதவீதத்தால் அதிகரித்தது. பாலின் உள்நாட்டு உற்பத்தி தேசிய தேவையின் கிட்டத்தட்ட 40 சதவீதத்தையே பூர்த்தி செய்யப்போதுமானதால், எஞ்சிய தடைகளைத் தீர்க்கும் அதேவேளை பால் உற்பத்தியை மேலும் ஊக்கப்படுத்துவது முக்கியமாகும். கடந்த ஆண்டுகளாக இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட அரச முதலீட்டின் பெரும்பகுதி நாட்டில் பசுக்களின் தரத்தை முன்னேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டது. எனினும், வாங்குனர்களும், விற்பனை செய்வோரும் சந்திக்கக்கூடிய கன்றுகளுக்கான பயனுறுதிமிக்க சந்தை இருக்கவில்லை. இத்துடன், சிறிய அளவிலான பால் பதனிடலை ஊக்குவிக்க வேண்டும். ஏனெனில் பன்னாட்டுச் சந்தையில் பால் மா விலைகள் அதிகரிக்கும் போது அத்தகைய உற்பத்தியாளர்களின் உற்பத்தி முக்கியமானதாகும்.

**கோழிப்பண்ணைத் துறை 2015இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** 2015இல் கோழி இறைச்சியின் உற்பத்தி 164,450 மெ.தொன்களுக்கு 9.4 சதவீதத்தால் அதிகரித்தது. புறொயிலர் பேறன்ஸ் உற்பத்தியின் எண்ணிக்கை 2015இல் 8.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் புறொயிலர் பேறன்ஸ் மற்றும் லேயர் பேறன்ஸின் இறக்குமதிகள் முறையே 28.0 சதவீதத்தாலும் 21.9 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. அதிகரித்த உற்பத்திக்கு மத்தியிலும், கோழி இறைச்சியின் விலைகளும் 2015இல் அதிகரித்தன. உடன்கோழி இறைச்சியின் விலை முன்னைய ஆண்டின் கி.கிறாமொன்றுக்கான ரூ.453.00 உடன் ஒப்பிடுகையில் 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.508.00 ஆக விளங்கிய வேளையில் புறொயிலர் கோழி இறைச்சியின் உச்சவிலை கி.கிறாமொன்றுக்கு ரூ.380.00 ஆக விளங்கியது. கோழி இறைச்சியின் (தோலுடன்) உற்பத்தி செலவும் 2014இன் கி.கிறாமொன்றுக்கு ரூ.290.89 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு 296.16 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. பன்றி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியின் உற்பத்தி முறையே 7,180 மெ.தொன்னுக்கும், 1,350 மெ.தொன்னுக்கும் 1.4 சதவீதத்தாலும், 0.7 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் மாட்டிறைச்சி உற்பத்தி 32,020 மெ.தொன்களுக்கு 5.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சியின் சராசரி விலைகள் முறையே கி.கிறாமொன்றுக்கு ரூ.614.00, ரூ.1,384.00 மற்றும் ரூ.664.00 இற்கு முறையே 13.4 சதவீதம், 8.6 சதவீதம் மற்றும் 14.9 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, முட்டை உற்பத்தி 1,899 மில்லியனுக்கு 10.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் சந்தையில் முட்டையின் சராசரி சில்லறை விலை 2014இன் ரூ.12.75 இலிருந்து 2015இல் ரூ.14.80 இற்கு அதிகரித்தது. முட்டைகளின் ஏற்றுமதி 2015இல் 14.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

### காடாக்கல்

**வனத் திணைக்களத்தின்படி, 2015 இல் இலங்கையின் காட்டின் அளவு 1,951,472 எக்டேயர்களாக முன்னைய ஆண்டைப் போலவே மாற்றமின்றி விளங்கியது.** இவ்வாண்டில் மரத்தண்டு பிரித்தெடுப்பதற்காக 422.6 எக்டேயர்கள் காடு அழிக்கப்பட்டிருக்கையில் 450 எக்டேயர்கள் மீள்காடாக்கல் செய்யப்பட்டது. காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட காடழித்தல் மற்றும் காட்டின் அளவைக் குறைத்தலிலிருந்து எழும் வெளியிடல்களைக் குறைப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையில் காடழித்தல் மற்றும் காட்டின் அளவைக் குறைத்தலின் முக்கிய காரணிகளைத் தீர்மானிப்பதற்கு ஆரம்ப ஆய்வுப் பணிகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் நடத்தப்பட்டன. வரண்ட மற்றும் இடைவீட்டு வலயங்களில் அமைந்துள்ள 18 மாவட்டங்களை உள்ளடக்கும் 167 தலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை சமுதாய காடாக்கல் நிகழ்ச்சித்திட்டம் 2015இல் 37 புதிய தலங்களுக்கு விரிவாக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் காடு பாதுகாத்தலில் சமுதாயங்கள் ஈடுபடும் காடாக்கல் செயற்பாடு தொடர்பாகவும் காட்டுக்கு மனிதனால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துகிறது. 2015இல் அண்ணளவாக 1,000 எக்டேயர் காடு சமுதாயத்தால் வழிநடத்தப்பட்ட வளப்படுத்தும் நடுகை மற்றும் காட்டை சேமித்தல் போன்ற காடாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களால் நன்மையடைந்ததுடன் சமுதாயத்தால் மேற்கொள்ளப்பட்ட தீ தவிர்ப்பு வழிமுறைகளுடன் கிட்டத்தட்ட 40 கிலோமீற்றர் நீளமான காட்டு மண்டலம் மேம்படுத்தப்பட்டது. 2019 அளவில் நிலப்பரப்பில் 32 சதவீதம் வரை நாட்டின் காட்டின் அளவை வரை அதிகரிக்கும் பொருட்டு வனத் திணைக்களம் 2014இல் காட்டின் அளவை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்ததுடன் 2015இல் அழிக்கப்பட்ட காட்டைப் புத்தாக்கம் செய்வதற்கும் காட்டை பாதுகாப்பதற்கும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.[2] இதேவேளை, தனியார் துறை மீள்காடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 இறுதியளவில் வர்த்தக அளவிலான காட்டுப் பெருந்தோட்டத்தின் அளவு 437.9 எக்டேயராக விளங்கியது.

2. தற்கால தகவல்களின் அடிப்படையில் வனத் திணைக்களத்தால் 2010இல் காட்டுப் பிரதேசத்தை உள்ளடக்கிய தேசப்படம் உருவாக்கப்பட்டதன் அடிப்படையில் இலங்கையின் காட்டுப் பிரதேசமானது 29.7 சதவீதத்தை உள்ளடக்குகின்றது.

## வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியிலான உதவியும்

**2015இல் வேளாண்மைக் கொள்கையானது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சூழல் நீடித்து நிலைத்திருப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் பொருளாதார வாய்ப்பை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தியது.** இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கம் நாட்டில் உணவு பாதுகாப்பினை அடையும் வகையில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறுபட்ட கொள்கைகள் அறிமுகப்படுத்தியிருந்தன. நீர்ப்பாசன திட்டம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி, விரிவாக்கல் மற்றும் கல்வி போன்ற துணைப்பணிகள் என்பவற்றை உள்ளடக்கிய வேளாண்மை துறைக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மீது அதிக அக்கறை வழங்கப்பட்டிருந்த அதேவேளையில் வளமாக்கி மானியம் போன்ற மானியங்கள் மற்றும் முக்கிய வேளாண்மை பண்டங்களுக்கான உத்தரவாத விலைகள் போன்றன அரச தலையீட்டாளர்களின் கொள்கைகளால் வழங்கப்பட்டன. நாட்டின் உணவு தேவைப்பாட்டில் 75 சதவீதத்தை உள்நாட்டு வேளாண்மை பூர்த்தி செய்கிறது எனினும், தற்போது பகுதியளவில் இறக்குமதி ஊடாக பூர்த்தியாக்கப்படுகின்ற கடலை வகைகள், பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, மிளகாய் மற்றும் பெரிய வெங்காயம் போன்ற ஏனைய களப்பயிர்களின் நியதிகளில் நாட்டிற்கான முழுத்தேவைப்பாட்டிற்கும் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது.

**நாட்டின் வேளாண்மைத்துறையை வலுப்படுத்துவதற்கு மேலும் வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** அரசு வாழ்வாதார வேளாண்மையிலிருந்து 2020 அளவில் ஏற்றுமதிச் சந்தைகளுக்கான நுழைவுடன் வேளாண்மை வியாபாரத்துக்கு படிப்படியாக நகரும் அதேவேளை பயிர் பன்முகப்படுத்தலூடாக 2018 அளவில் சோளம், சோயாஅவரை, மிளகாய், பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கில் நாடு தன்னிறைவு அடைவதை ஏற்படுத்தும் உபாயம் தொடர்பான வேளாண்மைக் கொள்கையை அறிவித்தது. மேலும், இலங்கையின் வேளாண்மை உற்பத்திகளை உலகில் போட்டித்தன்மையாக விளங்குவதற்கு "இலங்கை - உலக வீட்டுத் தோட்டம்" என்ற தலைப்பின்கீழ் 23 வேளாண்மை அபிவிருத்தி பாரிய வலயங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேல் மாகாண பாரிய செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக பெருந்தோட்ட நகரம் மற்றும் காட்டு நகரம் உள்ளிட்ட 13 திட்டமிடல் பிரதேசங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. பெருந்தோட்ட நகரம் சிறு வதிவிட அபிவிருத்தியுடன் அவிசாவளையைச் சுற்றியுள்ள பெருந்தோட்ட பிரதேசங்களை உள்ளடக்கியிருக்கையில் காட்டு நகரமானது நன்கு பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மற்றும் காட்டுப் பிரதேசங்களிடையே வதிவிட மற்றும் சுற்றுலாப் பிராந்தியத்தின் குறிப்பிட்ட வகைகளை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. எனினும், இத்துறையில் காணப்படும் சவால்களைத் தீர்க்கும் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான முதலீட்டை அதிகரித்தல் மற்றும், சிறு உடமையாளர்கள் மற்றும் வேளாண்மையாளர்கள் வேளாண்மைக் கொடுகடன் பெறுவதை இலகுபடுத்தும் அதேவேளையில் வினைத்திறன் மிக்க நீர் முகாமைத்துவம், உயர் விளைச்சலுடைய விதை வகைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் என்பவற்றின் மூலம் மரபுரீதியான குறைந்த பெறுமதியுடைய வேளாண்மையிலிருந்து உயர் பெறுமதியுடைய வேளாண்மைக்கு நகர்த்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

**2015இல் நெல் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** விளைச்சல் மற்றும் பயிரிடப்பட்ட பரப்பளவை அதிகரிப்பதற்கு வேளாண்மையாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் நெல்லின் உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலை

**அட்டவணை 2.8**

**முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான உணவு ஐந்தொகை அட்டவணை**

| விடயம் | அலகு | 2010 | | | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (அ) | மெ.தொ'000 | 3011 | 126 | 152 | 2367 | 600 | 143 | 3373 | 286 | 175 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 241 | 99 | 16 | 261 | 79 | 16 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1051 | 51 | - | 1179 | 57 | - | 1208 | 58 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 101 | 151 | 12 | 89 | 210 | 14 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 52 | 520 | 28 | 56 | 624 | 32 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 83 | 118 | 10 | 97 | 142 | 11 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 535 | 21 | 27 | 520 | 34 | 26 |
| பசும்பால் | மில். லீற்றர் | 192 | - | 9 | 273 | - | 13 | 305 | - | 15 |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 45 | 6 | 2 | 53 | 6 | 3 |

(அ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

அதிகரிக்கப்பட்டது. சம்பா நெல்லின் உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலை கி.கிறாமொன்றுக்கு ரூ.35 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றுக்கு ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் நாடு மற்றும் ஏனைய வகைகளின் விலை முன்னைய ஆண்டின் கி.கிறாமொன்றுக்கான ரூ.32 இலிருந்து ரூ.45 இற்கு அதிகரித்தது. அபரிமித அறுவடை காரணமாக, நெல் சந்தைப்படுத்தும் சபை 2014/15 இலிருந்து 2015இல் பெரும்போகம் (160,000 மெ.தொன்) மற்றும் சிறுபோகம் (175,270 மெ.தொன்) இரண்டிலும் 335,270 மெ.தொன்களைக் கொள்வனவு செய்தது. நெல் சந்தைப்படுத்தும் சபையின் மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய வசதிகள் மற்றும் நிதியியல் தடைகள் இவ்வாண்டில் உத்தரவாதமளிக்கப்பட்ட விலைத் திட்டத்தின்கீழ் வேளாண்மையாளர்களிடமிருந்து மேலதிக நெல் இருப்புக்களை கொள்வனவு செய்யும் அதன் ஆற்றலைப் பாதித்தது. இதேவேளை, வரவுசெலவுத் திட்டம் 2016இல் முன்மொழியப்பட்டவாறு கீரிச் சம்பா மற்றும் சம்பா நெல்லின் கொள்வனவு விலையை முறையே கி.கிறாமொன்றுக்கு ரூ.50 மற்றும் ரூ.41 இற்கு குறைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் சந்தையில் அரிசி விலைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு நாடு மற்றும் ஏனைய வகை அரிசி கி.கிறாமொன்றுக்கு ரூ.38 இற்கு குறைக்கப்பட்டன. அபரிமித அறுவடையின் பின்னணியில் அரிசி இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்கில் அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2014இன் கி.கிறாமொன்றுக்கு ரூ.1 இலிருந்து 2015 சனவரி 22 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் கி.கிறாமொன்றுக்கு ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் மேலும் 2015 மாச்சு 26 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.40 இற்கு அதிகரிக்கப்பட்டது. 2015 மே 6 இலிருந்து சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.35 கொண்ட சுங்கத் தீர்வையாலும் ஏனைய வரிகளாலும் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, 2015இல் வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் ரூ.49,571 மில்லியனுக்கு அதிகரித்தன. பண்ணை உள்ளீடுகளைத் தெரிந்தெடுப்பதில் கூடிய நெகிழ்ச்சித்தன்மைக்கு வேளாண்மையாளர்களை அனுமதிப்பதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் 2015 சிறு போகத்திலிருந்து தற்போது நடைமுறையிலிருக்கும் வளமாக்கி உதவுதொகைக்குப் பதிலாக ஆகக்கூடியது 2 எக்டேயர் பரப்பளவுக்கு எக்டேயர் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் காசுக் கொடையை வழங்குவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு வேளாண்மைப் பயிர்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தை வசதிகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு களஞ்சியசாலை வசதிகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக, நவீன வசதிகளைக் கொண்ட மிகப் பெரிய களஞ்சியசாலை ரூ.260 மில்லியன் செலவில் புத்தளவில் நிறுவப்பட்டு 2016 சனவரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் களஞ்சியசாலையில் 20,000 மெ.தொன் தானியங்களை களஞ்சியப்படுத்த முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நீண்ட பாவனையை உறுதிப்படுத்துவதற்கு இவ்வசதியின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட்ட தானியங்கள் கடுமையான தரக்கட்டுப்பாட்டுச் செயல்முறைக்கு உட்படுத்தப்படும். இதேவேளை, அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு கிளிநொச்சி, பொலனறுவை மற்றும் எம்பில்பிட்டியவில் மேலும் மூன்று களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கு அரசு திட்டமிடப்பட்டிருக்கும் அதேவேளையில் மன்னாரிலுள்ள களஞ்சியசாலையின் எஞ்சிய வேலையையும் பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளது. இக் களஞ்சியசாலைகள் வேளாண்மையாளர்கள், அபரிமித காலப்பகுதிகளில் அவர்களின் உற்பத்தியை களஞ்சியப்படுத்துவதற்கான சிறந்த தரமான களஞ்சிய வசதிகளை வழங்கி பருவகாலமில்லாத காலப்பகுதிகளில் உயர் சந்தை விலைகளிலிருந்து நன்மையடைவதற்கு வேளாண்மையாளர்களை இயலச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. களஞ்சியப்படுத்தல், வேளாண்மைச் சந்தைப்படுத்தலின் முக்கிய குணாதிசயமாக இருப்பதால் உற்பத்தித்திறன் மற்றும் வருவாயை அதிகரிக்கும் அதேவேளை சுயதேவைக்கப்பால் உற்பத்தியை விரிவாக்குவதற்கு வேளாண்மையாளர் யோசிப்பதற்கு இயலச் செய்கிறது. களஞ்சியசாலைகள் ஏற்கத்தக்க நியமங்களுக்கு இருப்பதை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும். இதேவேளை, வேளாண்மை துறையில் கூடிய நச்சுத்தன்மை வாய்ந்த வேளாண்மை இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் நோக்கில் "பூரணமான வேளாண்மை - நலம் வாய்ந்த பொதுமக்கள் - நச்சுத்தன்மையில்லாத நாடு" என்ற தலைப்பின் கீழ் மூன்று ஆண்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2016 மாச்சு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

**இலங்கை தேயிலைச் சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் 2015இல் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், பெறுமதி கூட்டல் மற்றும் தேயிலைக் கைத்தொழிலின் போட்டித்தன்மை தொடர்பாக தொடர்ந்து கவனம் செலுத்தியது.** மண் பதனிடல் செயற்பாடுகளுடன் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகை எக்டேயர் ஒன்றுக்கு முறையே ரூ.350,000 மற்றும் ரூ. 250,000 இலிருந்து எக்டேயர் ஒன்றுக்கு ரூ.500,000 இற்கும் ரூ.400,000 இற்கும் அதிகரிக்கப்பட்டிருக்கையில் மண் பதனிடலின்றி புதிய நடுகைக்கான உதவுதொகை 2015ஆம் ஆண்டில் எக்டேயருக்கு ரூ.195,000 இலிருந்து ரூ.310,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. அதிகரித்த உதவுதொகைக்கு பதிலிறுத்தும் வகையில்,

கிட்டத்தட்ட 806 எக்டேயர்கள் ரூ.417 மில்லியன் செலவில் மீள்நடுகை செய்யப்பட்டிருக்கையில் 479 எக்டேயர்கள் ரூ.128 மில்லியன் செலவில் புதிதாக நடுகை செய்யப்பட்டன. இதேவேளை, இலங்கை தேயிலைச் சபை இவ்வாண்டில் குறிப்பாக சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைக்கு இலங்கை தேயிலையின் பரப்பெல்லையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் இலங்கை தேயிலைச் சபையின் உதவுதொகைத் திட்டத்தின் கீழ் சிங்க இலச்சினைப் பொதிகளுடன் பிரதான வெளிநாடுகளில் இடம்பெறும் உணவு மற்றும் பானங்களின் வர்த்தகச் சந்தையில் பங்குபற்றுவதன் மூலம் தேசிய ஊக்குவிப்பை வெளிப்படுத்தியது. மேலும், வெட்டிக் கழித்து சுருட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இயலளவினுள் தற்போதைய மரபுவழி தேயிலைத் தொழிற்சாலைகளில் வெட்டிக் கழித்து சுருட்டப்பட்ட தேயிலைக்கான தனியான உற்பத்திப் பிரிவை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைக்கக்கூடிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் தரத்தைக் கண்காணிப்பதனூடாக சராசரியாக சிறந்த கொழுந்து நியமத்தை 33 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்துக்கு தரமுயர்த்துவதற்கு இலங்கை தேயிலைச் சபை "பெஸ்ட் லீவ் 60" நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தரமான தேயிலைக் கொழுந்தை வழங்கும் சிறுஉடமையாளர்களுக்கு 2015 மாச்சிலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.80 கொண்ட உதவுதொகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், ஏல விலைகளின் வீழ்ச்சி காரணமாக நிதியியல் இடர்பாடுகளிலிருந்து விடுபடுவதற்கு உதவும் அதேவேளை தேயிலை சிறுஉடமையாளர்களுக்கு அவர்களின் கடமைகளை நேரம் பிந்தாது பூர்த்தி செய்வதை இயலச்செய்யும் வகையில் பதிவுசெய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களுக்கான குறுகியகால தொழிற்படு மூலதனக் கடனை அரசு நடைமுறைப்படுத்தியது. இத்திட்டத்துக்கான 2 சதவீதம் கொண்ட வட்டி உதவுதொகை மத்திய வங்கியால் வழங்கப்பட்டது.

**இறப்பர் துறைக்கான அபிவிருத்தி உபாயம் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதனூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தும் அதேவேளை மரபுவழியற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையின் விரிவாக்கத்தில் பெருமளவு கவனம் செலுத்தியது.** இறப்பர் மீள்நடுகை (எக்டேயருக்கு ரூ.175,000) மற்றும் புதிய நடுகைக்கான (எக்டேயருக்கு ரூ.150,000) உதவுதொகைத் திட்டம் 2015 இலும் தொடர்ந்து செயற்பட்டது. இதன்படி, இவ்வாண்டில் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைச் செயற்பாடுகளுக்காக முறையே ரூ.405 மில்லியன் மற்றும் ரூ.190 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. மரபுவழி மற்றும் மரபுவழியற்ற பிரதேசங்களிலான மீள்நடுகை முறையே 219 எக்டேயர் மற்றும் 172 எக்டேயராக விளங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனி மற்றும் சிறு உடமையாளர் இறப்பர் நிலங்களிலான மீள்நடுகை 2015இல் 621 எக்டேயருக்கு 70.4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதேவேளை, அரசு சந்தை விலையை போட்டிமிக்க சமனிலை மட்டத்தில் வைத்திருக்கும் நோக்குடன் கொழும்பு இறப்பர் ஏலத்தில் ஆர்எஸ்எஸ் இறப்பரின் மாதாந்த சராசரி விலை மற்றும் கி.கிறாமொன்றுக்கு ரூ.350 கொண்ட உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலைக்குமிடையேயான வித்தியாசத்தை சிறுஉடமையாளர்களுக்கு 2015 மாச்சிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் சிறுஉடமையாளர்களுக்கு இலாபகரமான விலையை வழங்கியதுடன் இத்திட்டத்தின் கீழ் 2015 ஓகத்தில் ரூ.1,409 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், உலகசந்தையில் வீழ்ச்சியடைந்து செல்லும் இறப்பர் விலைகளுக்கு மத்தியில் இறப்பர் துறைக்கு உதவுவதற்கு பல கொள்கை வழிமுறைகளை இறப்பர் ஆராய்ச்சி நிலையம் நடைமுறைப்படுத்தியது. இதன்படி, நவீன பாலெடுக்கும் கத்தி, வலுப்பாய் மற்றும் ஒரே நாளில் உலர்த்தும் முறைமை ஆகிய புதிய அபிவிருத்தியடைந்த தொழில்நுட்பங்களை ஆர்வலர்களிடையே பிரபல்யமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளையில் சிறுஉடமையாளர் துறையில் புதிய உயர் விளைவுள்ள பதியங்களை பிரபல்யப்படுத்தியது. மரபுவழி நடைமுறைகளுடன் இணைந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு, இறப்பர் நாற்று மேடைகளுக்கு வளமாக்கியை மெதுவாக வெளிவிடுவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ள வேளையில் இறப்பர் பயிர்ச்செய்கைகளுக்கான தரமான பயிர்ச்செய்கை மூலவளங்களை பரீட்சித்திருந்தது. மேலும், தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் இறப்பர்ச் செய்கையை விரிவாக்குவதற்கு பொருத்தமான காணிகளை இனங்காண்பதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டன. மரபு வழியல்லாத பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச் செய்கையின் விரிவாக்கம் நடுத்தர காலத்தில் இறப்பரின் உற்பத்தி இலக்குகளை அடைய உதவும் எனினும், மேலதிக இறப்பர் உற்பத்தியை உள்வாங்குவதற்கு உள்நாட்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் கைத்தொழிலினைப் பலப்படுத்துவது மிகவும் முக்கியமாகும்.

**தெங்கு துறையில், வெலிகம தென்னோலை பூச்சித் தாக்கத்தின் பரவலை ஒழிக்கும் அதேவேளை புதிய நடுகை, மீள்நடுகை, தெங்கு நிறுவனங்களைத் தரமுயர்த்தல் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு**

**நிறுவன ரீதியிலான உதவி மேலும் பலப்படுத்தப்பட்டது.** பூச்சித் தாக்கத்தின் பரவலை ஒழிப்பதற்கு வலுவான வலயத்தை பேணல் மற்றும் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் வெலிகம தென்னோலை பூச்சித்தாக்கத்தின் முகாமைத்தவ நிகழ்ச்சித்திட்டம் 2015இல் தொடர்ந்து இடம்பெற்றது. அதேவேளை மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்கான உதவித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ரூ.123 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்படி, மீள்நடுகை மற்றும் நடுகைக்குட்பட்ட பிரதேசங்கள் 4,919 எக்டேயராக விளங்குகையில் புதிய நடுகைப் பிரதேசம் 1,150 எக்டேயராக பதிவுசெய்யப்பட்டது. இதேவேளை, 2014இன் இறுதிவரை உள்நாட்டுச் சந்தையில் தேங்காய்க்கான பலத்த பற்றாக்குறை காரணமாக 2014 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்த தேங்காய் ஏற்றுமதிகள் மீதான தடை, தெங்கு உற்பத்தி இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான வரிகள் மற்றும் தீர்வைகள் இவ்வாண்டில் பரவலாக மாற்றமின்றி தொடர்ந்து விளங்கிய போதிலும், இத்துறையின் திருப்திகரமான செயலாற்றத்தைப் பரிசீலனையில் கொண்டு 2015 யூனிலிருந்து நீக்கப்பட்டது. எனினும், தேங்காய்களின் ஏற்றுமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கு தீர்வையில்லாத தடைகள் தொடர்ந்து இடம்பெற்றன. இதேவேளை, சமையல் எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.90.00 இலிருந்து ரூ.105.00 இற்கு அதிகரித்திருக்கையில் சமையல் உள்ளீட்டு மசகெண்ணெய் மற்றும் ஏனைய எண்ணெய் மீதான தீர்வை இவ்வாண்டில் முறையே கி.கிறாமொன்றுக்கு ரூ.110.00 இற்கும் ரூ.125.00 இற்கும் அதிகரிக்கப்பட்டது. தீர்வைத் திருத்தங்கள் உள்நாட்டு எண்ணெய் கைத்தொழிலில் அநேகமாக சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும் தேங்காய் எண்ணெய் விலையை விட தொடர்ந்து குறைவாக விளங்கிய உலக சந்தையிலான சமையல் எண்ணெய் விலைகளிலான தொடர்ச்சியான வீழ்ச்சி 2015இல் சமையல் எண்ணெய்யின் இறக்குமதிகளில் அதிகரிப்பை விளைவித்தது. இதேவேளை, தெங்குத் துறை அபிவிருத்திக்காக அரசால் செலவிடப்பட்ட மூலதனச் செலவினம் 2014இன் ரூ.767 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.663 மில்லியனாக விளங்கியது.

**உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் 2015இல் மேலும் பலப்படுத்தப்பட்டது.** பதுளை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் கரும்புப் பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கும் சிறிய அளவில் கரும்பை அடிப்படையாகக் கொண்ட பதனிடல் தொழிற்சாலைகளை நிறுவுவதற்குமான வழிமுறைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன. கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கை வழிமுறைகள் 2015இல் தொடர்ந்த போதிலும், கந்தளாயிலுள்ள முக்கிய கரும்பு விதை நாற்றுமேடைகளில் புல்லுருவி, இலை கருகல் மற்றும் வெள்ளை இலை நோய் தோற்றம் பெற்றமை அநேகமான நாற்றுமேடைகளை அழித்திருக்கையில் கரும்பின் சிறந்த ஆறு வகைகளுடன் கிட்டத்தட்ட 25 எக்டேயர்களில் புதிய நாற்று மேடைகள் நிறுவப்பட்டன. மேலும், கந்தளாய் தொழிற்சாலையில் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான தொழில்முயற்சியாளர்களைக் கண்டுபிடிக்கும் செயல்முறையை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆரம்பித்தது. இணங்கிச் செல்லக்கூடிய கொள்கைகள், ஒழுங்குவிதி இல்லாமை, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் தரமான கரும்பு விதை உற்பத்தி முறைமை இல்லாமை இக் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்கான முக்கிய தடைகளாக விளங்குகின்றன. இதனால், உற்பத்தி பல்வகைப்படுத்தலை அதிகரித்தல், கரும்புக்கான உறுதியான சந்தையை நிறுவுதல் மற்றும் புதிய முன்னேற்றமான கரும்பு வகைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் கைத்தொழிலின் எதிர்கால அபிவிருத்திக்கான தொழில்நுட்பம் மற்றும் செய்நுட்ப அறிவை அதிகரிப்பதற்கு வழிமுறைகள் எடுக்கப்படவேண்டும். மேலும் பிரதான சீனித் தொழிற்சாலைகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதில் பல எண்ணிக்கையான அமைச்சுக்கள் ஈடுபட்டுள்ளதால் சீனிக் கைத்தொழிலின் அபிவிருத்தியை வசதிப்படுத்தக்கூடிய ஒரு அமைச்சின் அதிகார வரம்பின் கீழ் அனைத்து மூன்று சீனித் தொழிற்சாலைகளைக் கொண்டுவருவது அத்தியாவசியமாகும்.

**இவ்வாண்டில் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் உள்ளூர் வேளாண்மையை ஊக்குவிக்கின்ற அதேவேளையில் வேளாண்மை உற்பத்தியில் ஏற்படும் பருவகால ஏற்ற இறக்கங்களை முகாமை செய்வதனையும் நோக்கி பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் தீவிரமாக நடைமுறைப்படுத்தின.** 2015இல், சிறந்த பொருத்தக்கூடிய மற்றும் உயர் விளைவைக் கொண்ட புதிய அரிசி வகை என்பன உள்ளூர் பயிர்ச் செய்கைக்காக வெளியிடப்பட்டிருந்ததுடன், ஏனைய களப் பயிர்களின் மூன்று புதிய வகைகளும் (மிளகாய், நிலக்கடலை மற்றும் சோளம்) வெளியிடப்பட்டது. அதேநேரத்தில், குடை மிளகாய் (கப்சிகம்), பாகற்காய், புடலங்காய், பயிற்றங்காய் மற்றும் காளானின் புதிய வகைகள் என்பனவும் பயிர்ச் செய்கைக்காக வெளியிடப்பட்டன. மேலும், உள்நாட்டு வெங்காய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அனுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களில் வெங்காய விதை உற்பத்தி மாதிரிக் கிராமங்களாக மூன்று கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. இது தொடர்பாக, "இலங்கைக்கான பெரிய வெங்காய வகையின் விதைப் பெருக்கம் மற்றும்

விளைச்சல் தொழில்நுட்ப அபிவிருத்தி" செயற்றிட்டத்தின் கீழ் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி மூன்று கிராமங்களிலுமுள்ள இரண்டு எக்டேயர் காணிகளில் மழைப் பாதுகாப்பிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. மேலும், கிட்டத்தட்ட 2.2 மில்லியன் நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் "பழக்கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்" கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 54 பழக் கிராமங்கள் நிறுவுவதற்கு தாவரங்கள் வழங்கப்பட்டன. இதேவேளை, கண்டி, மாத்தளை, கேகாலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள் என்பன உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான பிரதேசங்களாக இணங்காணப்பட்டுள்ளதுடன் கிட்டத்தட்ட 500 எக்டேயர் புதிய காணி உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்குக் கீழ் கொண்டுவர முடியும். இதேவேளை, தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மைப் பொருட்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உணவுப் பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 2015 ஒத்தோபரில் கிளிநொச்சியிலுள்ள இரணைமடுவில் "தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்" கமத்தொழில் அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டது. 2015இல் வேளாண்மைத்துறையில் இளைஞர்களைக் கவரும் வகையில் "இளைஞர் வேளாண்மை முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்" தொடர்ந்தும் நடாத்தப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் 2015இல் 848 இளம் முயற்சியாளர்கள் பயனடைந்தனர். அறுவடைக்குப் பின் கைத்தொழில் முகம்கொடுக்கும் தொழில்நுட்ப பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பணிகள் 2015இலும் தொடர்ந்து இடம்பெற்றன. இதன்படி, 13 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் செயற்படுத்தப்பட்டன. பெரும் எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு வினைத்திறன்மிக்க தொழில்நுட்ப மாற்றலை உறுதிப்படுத்தும் பொருட்டு நாடு பூராகவும் வெவ்வேறு மாவட்டங்களில் 10 கள நிலையங்கள் நிறுவப்பட்டன. ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பல கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டபோதிலும் பெரிய வெங்காயத்தைப் பொறுத்தமட்டில் இலங்கையில் பண்ணை மட்டத்தில் வெங்காயத்தை உரிய முறையில் களஞ்சியப்படுத்தும் முறைகள் எதுவும் காணப்படவில்லை. அநேகமான வேளாண்மையாளர்கள் அவர்களின் உற்பத்தியை பண்ணையிலேயே, குறைந்த விலையில் விற்பதனால் பருவகாலமற்ற காலப்பகுதியில் அவை உயர் விலைகளுக்கு இட்டுச் செல்வதால் வழங்கல் நிலைமைகள் மற்றும் சந்தை விலைகள் மீதான தேவையற்ற அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பண்ணை மட்டத்தில் வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தும் அமைப்பை நிறுவுவது மிகவும் அவசியமாகும். மேலும், பெரிய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி இயலளவை மேம்படுத்தும் அதேவேளையில் பெறுமதி கூட்டப்பட்ட வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கு வரவுசெலவுத் திட்டம் 2016இல் பல எண்ணிக்கையிலான கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டன. இதேவேளை கறுவாவின் பெறுமதிச் சங்கிலி தற்போது பல இடர்நேர்வுகள் முகவர்களின் கீழ் இக் கைத்தொழிலின் வளர்ச்சியை அடக்குவதால் பெறுமதிச் சங்கிலியின் அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தனியார் துறை பங்கேற்புடன் கறுவா அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுவதற்கு ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்படும்.

**நாட்டின் நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட அரசின் செயற்பாடுகள் 2015இலும் தொடர்ந்தும் இடம்பெற்றன.** அதிகரித்த பொருளாதாரச் செயற்பாடுகளுடன் இணைந்த அதிகரித்துச் செல்லும் குடித்தொகையுடன், வறட்சிகளுக்கும், காலநிலை காரணமான தாக்கத்துக்கும் ஈடுகொடுப்பதற்கு நாடு அதிகரித்த நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக, றுகம் கித்துள் நீர்த்தேக்கம் மற்றும் பெந்தற கங்கை வலது கரை வடிகாலமைப்பு மற்றும் உப்புநீர் பிரித்தெடுக்கும் திட்டம் ஆகிய இரண்டு புதிய நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் 15,000 எக்டேயர்கள் மற்றும் 810 எக்டேயர்கள் நிலப்பரப்பை வசதிப்படுத்துவதற்கு 2015இல் ஆரம்பிக்கப்பட்டன. இவ்விரு செயற்றிட்டங்களிலிருந்தும் ஏறத்தாழ 3,450 குடும்பங்கள் நன்மையடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, இவ்வாண்டில் நாட்டின் இரண்டு பாரிய நீர்த்தேக்கங்களான தெதுறு ஓயா மற்றும் யான் ஓயாவை அபிவிருத்தி செய்வதற்கு, ரூ.7,086 மில்லியன் செலவிடப்பட்டது. எனினும் நீர்தேக்கங்களில் மேடு காணப்படுதல் நீரின் அளவை மட்டுப்படுத்தி குறைந்த மழைவீழ்ச்சியுள்ள காலப்பகுதியில் வேளாண்மையாளர்களின் பயிர்ச்செய்கைச் செயற்பாடுகளை தடைப்படுத்தியது. வெள்ளத்தின் பாதகமான விளைவைக் குறைக்கும் அதேவேளை நீர்த்தேக்கங்களில் சேகரிக்கப்பட்ட நீரின் அளவை அதிகரிப்பதற்கு உரிய நேரத்தில் நீர்த்தேக்கங்களிலுள்ள மேடுகளை அகற்றல் மிக முக்கியமானதாகும். நீர்ப்பாசனச் செயற்றிட்டங்கள் சூழல் தீங்குகளை குறைக்கும் வகையில் கட்டப்பட்டு வினைத்திறனுடன் முகாமை செய்யப்பட வேண்டும். மேலும் கிராமிய வேளாண்மைக்கு உதவுவதற்கு சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களைப் புதுப்பிப்பதற்கு ரூ.2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களம் கால்நடைத் துறை முக்கிய திட்டத்துடன் இணைந்து செல்லும் வகையில் பல நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது.** இது தொடர்பாக, நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில்

பசுக்களின் குடித்தொகையைத் தரமுயர்த்துவதற்கு கால்நடை சினைப்படுத்தல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. எருதுக் கன்றுகளின் பரம்பரையை பரிசோதித்தல் மற்றும் மேய்ச்சல் தரை அபிவிருத்தி இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்பாடுகளாகும். இவ்வாண்டில் மொத்தமாக 227,108 செயற்கைமுறைக் கருத்தரிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு நாட்டில் பசு மற்றும் எருமைக் குடித்தொகையை பூர்த்தி செய்தது. இதேவேளை, "கன்று ஈனாத பசுக்களை வளர்க்கும் செயற்றிட்டத்தின்" கீழ் செயற்கையாகப் பிறந்த பெண் கன்றுகளுக்கு தீன் ஊட்டுவதற்கும் முகாமை செய்வதற்கும் உதவி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 33,152 கன்று ஈனாத பசுக்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், "கள மிருகவைத்திய பணிகள் மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் தங்கொட்டுவ மற்றும் அகரபத்தனையில் இரண்டு புதிய மிருகவைத்திய விசாரணை நிலையங்கள் நிறுவப்பட்டதன் மூலம் கால்நடை அபிவிருத்திக்கான நிறுவன ரீதியிலான உதவியைப் பலப்படுத்தியது. அரசு 2016இல் முன்மதியுடைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை இத்துறையை மேலும் பலப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, அரசு தனியார் கூட்டு ஒழுங்குமுறையில் வர்த்தக அளவிலான பாற்பண்ணையைப் பலப்படுத்தும் பொருட்டு குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத அரச காணியை ஆகக்குறைந்தது ரூ.25 மில்லியன் முதலீட்டுக்கு வழங்குவதற்கு வரவுசெலவுத் திட்டம் 2016இல் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு தயாரிப்பாளர்களுக்கு 400 கிறாம் பொதியொன்றுக்கு ரூ.30 கொண்ட உதவுதொகையை வழங்கும் அதேவேளையில் உள்ளூ ரில் தயாரிக்கப்பட்ட 400 கிறாம் பால்மா பொதியொன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை தற்போதைய விலையான ரூ.325 இலிருந்து ரூ.295 இற்கு குறைக்கப்படும்.

**மீன்பிடித் துறைக்கான கொள்கைகள் ஆழ்கடல் மீன்பிடியை அதிகரித்தது மீன்பிடிச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான தேவையை கோடிட்டுக் காட்டுகிறது.** ஐரோப்பிய நியமங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கையிலிருந்தான மீன் ஏற்றுமதிகள் மீதான தடையை நீக்குவதற்கும் இலங்கை அரசு பல வழிமுறைகளை மேற்கொண்டது. வடக்கு நீர்த்தேக்கங்களில் இருப்புக்களை அதிகரிப்பதற்குத் தேவையான மீன் குஞ்சுகளை வழங்கும் பொருட்டு இரணைமடுவிலுள்ள அலங்கார மீன் அபிவிருத்தி நிலையம் நிறுவப்பட்டதுடன் மட்டக்களப்பில் கைத்தொழில் அலங்கார மீன் பூங்காவை நிறுவுவதற்கு முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது. நீர்தேக்கங்களில் நன்னீர் இறால் இருப்புக்களை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அரசு தனியார் துறை கூட்டு ஒழுங்குமுறையின் கீழ் திருப்பி வாங்கும் செயல்முறை நிறுவப்பட்டது. இதேவேளை, மட்டக்களப்பில் கூனி இறால் பண்ணைச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கு 2015இல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. செயற்கை முறையிலான மீன்பிடிக்காக பெரும் எண்ணிக்கையான நீர்ப்பாசன நீர்த்தேக்கங்களை பயன்படுத்துவதற்கு மேலதிகமாக தேசிய அலங்கார மீன் அபிவிருத்தி அதிகாரசபை சமுதாய மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் கடல் அட்டை மற்றும் கடல் பாசி வளர்த்தல் போன்ற மரபுரீதியற்ற அலங்கார மீன் வளர்த்தலின் அபிவிருத்தியை ஊக்குவித்து வசதிபடுத்தியது. வியட்னாம் மற்றும் தேசிய அலங்கார மீன் அபிவிருத்திச் சபைக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, தனியார் செயற்கையான இனப்பெருக்கல் நிலையங்களில் கடல் அட்டைகளின் இனப்பெருக்கத்துக்கு நிபுணத்துவம் வழங்கப்பட்டதுடன் 2015இல் 239,000 கடல் அட்டைக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் அரச தனியார் கூட்டு உடன்படிக்கையின் கீழ் தனியார் இனப்பெருக்க நிலையத்தில் 250,000 மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆழ்கடல் மீன் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தருமபுரத்தில் ஆழ்கடல் மீன் இனப்பெருக்க நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வேளாண்மை அபிவிருத்தியில், முக்கிய தடையாக அலங்கார மீன் பெறுமதிச் சங்கிலியின் போதுமானதற்ற அபிவிருத்தி இருப்பதால் உணவு மற்றும் கமத்தொழில் நிறுவனத்திடமிருந்தான நிதியிடல் மூலம் அலங்கார மீன் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி செயற்றிட்டத்துக்காக நகல் உபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்கிடையில் வரவுசெலவுத் திட்டம் 2016இல் முன்மொழியப்பட்டவாறு உள்ளூர் மீன்பிடித் துறைமுகங்கள் நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்யப்பட்டு தரமுயர்த்தப்படும். மேலும் வேளாண்மை மற்றும் மீன்பிடி பதனிடல் வசதிகளை உருவாக்குவதற்கு அனுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்து வேளாண்மை கால்நடை மற்றும் மீன் பதனிடல் பூங்கா உருவாக்கப்படும். இதேவேளை, மீன்பிடி வலை மீதான இறக்குமதித் தீர்வை குறைக்கப்படும் அதேவேளையில் உள்ளூர் மீன்பிடிக் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்கு மீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.50.00 இற்கு அதிகரிக்கப்பட்டது.

## கைத்தொழில்

**கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகள் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்சாரம், நீர், கழிவுமுறை மற்றும் கட்டடவாக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.** இச்செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீத

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 3.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இது முக்கியமாக தயாரிப்புச் செயற்பாடுகளிலான அபரிமித வளர்ச்சியால் உற்சாகமூட்டப்பட்டது. இதேவேளை மின்சாரம் தொடர்பான செயற்பாடுகள், சாக்கடை நீர், கழிவுமுறை மற்றும் அகற்றல் செயற்பாடுகள் மற்றும் நீர் சேகரிப்பு, தூயதாக்கல் மற்றும் வழங்கல் செயற்பாடுகள் கைத்தொழிலின் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. எனினும், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மற்றும் கட்டடவாக்கச் செயற்பாடுகள் 2015இல் சுருக்கத்தைப் பதிவுசெய்து கைத்தொழில் செயற்பாடுகளிலான வளர்ச்சியை மோசமாகப் பாதித்தன.


### சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகள் 2014இன் 2.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 0.9 சதவீதத்தால் ஒடுங்கியது.** கட்டடவாக்கச் செயற்பாடுகளில் அவதானிக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றம் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகளிலான வளர்ச்சியை மோசமாகப் பாதித்தது. மேலும், கனிப்பொருள் ஏற்றுமதிகள் அளவுச் சுட்டெண் 2014இன் 95.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 48.1 சதவீதத்தால் சுருக்கமடைந்த அதேவேளையில் பொசுபேற்றின் உள்நாட்டு உற்பத்தியும் 2015இல் சுருக்கத்தைப் பதிவுசெய்தது. எனினும், இல்மனைட் உற்பத்தியிலான கணிசமான வளர்ச்சி காரணமாக 2015இல் கனிப்பொருள் மணலின் உற்பத்தியில் சாதகமான வளர்ச்சி பதியப்பட்டது. கிறபைற் உற்பத்தியும் 2015இல் விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது.

### தயாரிப்பு

**கைத்தொழில் செயற்பாடுகளின் மிகப்பெரிய பிரிவான தயாரிப்புச் செயற்பாடுகள் 2014இன் 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.**

வரைபடம் 2.3 கைத்தொழில்களில் மொத்தப் பெறுமதி சேர்ப்பு (2010 நிலையான விலைகளில்)




தயாரிப்புத் துறையிலான வளர்ச்சி முக்கியமாக 2014இன் 1.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பால் உந்தப்பட்டது. மேலும், ஏனைய தயாரிப்பு, பொறியின் திருத்த வேலை மற்றும் நிறுவுதல், தளபாடத் தயாரிப்பு மற்றும் பொறியினதும் கருவியினதும் தயாரிப்பு ஆகிய துணை வகைகள் தயாரிப்புச் செயற்பாடுகளில் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தது. எனினும், ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு 2015இல் 2.8 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.


### தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உற்பத்தி நியதிகளில் பொருளாதாரத்தில் தயாரிப்புத் துறையின் செயலாற்றத்தை வெளிப்படுத்தும் முக்கிய குறிகாட்டியாக விளங்குகிறது.**[3] இச்சுட்டெண் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தலின் திருத்தம் 4 அடிப்படையில் 17 முக்கிய செயற்பாடுகளை உள்ளடக்குகிறது. குறிப்பிட்ட முக்கிய துறைகளிலான சாதகமான உள்நாட்டுக் கேள்வியால் பெரிதும் தூண்டப்பட்டு தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்தி அதன் வளர்ச்சி உத்வேகத்தை 2015இலும் தொடர்ந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 6.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 9.2 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் காட்டியது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் உணவு, பானங்கள், அணியும் ஆடைகள், புகையிலை உற்பத்திகள், இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், மின் கருவி மற்றும் ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத் துறைகளின் சாதகமான செயலாற்றத்தால் ஏற்பட்டது. எனினும், புடவை, இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், நிலக்கரி மற்றும் தூய்மையாக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், தோல் மற்றும் இது சார்ந்த உற்பத்திகளின் துணைத் துறைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் மிகப் பெரிய துணைத் துறையான உணவு உற்பத்திகள் துணைத் துறை 2015இன் அநேகமான பகுதியில் சாதகமான செயலாற்றத்தை வெளிப்படுத்தி 2014இல் அவதானிக்கப்பட்ட**

3. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் நிறைகள் 2010இனை அடியாண்டாகக் கொண்டு ஒவ்வொரு கைத்தொழிலுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் உற்பத்தியின் முக்கியத்துவத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், தோற்றம் பெற்றுவரும் புதிய கைத்தொழில்களின் விளைவாக பொருளாதாரத்தில் முக்கியமான கட்டமைப்பு மாற்றங்கள் காணப்பட்டன. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் அடுத்த திருத்தத்தில் இது கவனத்திற்கொள்ளப்படும்.

வரைபடம் 2.4 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2010 = 100)




**2.8 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 4.9 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டியது.** இவ்வளர்ச்சியானது பெரும்பாலும் அதிகரித்த பால் சேகரிப்பால் உதவப்பட்ட பால் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் உணவுப் பொதி, வெதுப்பக உற்பத்திகள், மைக்குறொணி, நூடில்ஸ் மற்றும் இது போன்ற பொருட்கள், அது போல் தயாரிக்கப்பட்ட விலங்குத்தீனின் அதிகரித்த வெளியீட்டால் ஏற்பட்டது. மேலும், கரும்பு உற்பத்தி இவ்வாண்டில் சாதகமான மழையால் உதவப்பட்ட அதிகரித்த கரும்புச் செய்கையால் 34.4 சதவீதத்தால் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது. எனினும், 2015இன் முற்பகுதியில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளால் முக்கியமாக மீனின் பதனிடல் மற்றும் பாதுகாக்கும் செற்பாடுகள் பாதிக்கப்பட்ட குறைவான நன்னீர் மீன் உற்பத்தியுடன் இணைந்து கரையோர மற்றும் குடா ஏரி மீன் உற்பத்தியின் வீழ்ச்சியுடன் ஆழ்கடல் மீன் உற்பத்தியிலான வீழ்ச்சி காரணமாக 2.8 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைக் காட்டியது.

**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் உணவு உற்பத்திகளைப் போலவே சமமாக ஆதிக்கம் செலுத்துகிறதும் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாகவும் விளங்கும் அணியும் ஆடைகள் துணைத் துறை 2015இலும் தொடர்ந்து சாதகமாகச் செயலாற்றியது.** இத்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 19.7 சதவீத வளர்ச்சியைக் காட்டிலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டு 16.0 சதவீதமாக விளங்கியது. உலகளாவிய நியமங்களில் புத்தாக்கம் மற்றும் தரத்தினைப் பேணுகின்ற அதேவேளை நம்பகத்தன்மை மற்றும் விரைவான விநியோகம் என்பவற்றில் சிறந்து விளங்குவதற்காக இலங்கையின் ஆடைகள் துறை இனங்காணப்பட்டுள்ளது. மேலும், தொழில் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பிலான சிறந்த கைத்தொழில் நடைமுறைகள் ஒழுக்கவியல்சார்ந்த தொழிலாளர் மற்றும் சூழல் நிலைமைகளின் கீழ் ஆடைகளைத் தயாரிக்கும் கவர்ச்சிகரமான சேருமிடமாக இலங்கையை ஏற்படுத்தியது. மேலும், பொதுவாக முன்னுரிமையளிக்கப்பட்ட விடயங்கள் + (ஜிஎஸ்பி +)இனைப் மீளப்பெற்றுக்கொள்ளல் மற்றும் அதிகரித்த தன்னியக்கத்தினூடாக தொழிலாளர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முன்னேற்றமும் எதிர்காலத்தில் ஆடைத் துறைக் கைத்தொழிலுக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்யும். எனினும், முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளிலிருந்தான வர்த்தகச் சலுகைகளாலும் நன்மையடைந்த குறைந்த செலவுடைய ஆடை உற்பத்தியாளர்களிடமிருந்தான கடுமையான போட்டியால், கைத்தொழில் அதன் விலை போட்டித்தன்மையை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவதுடன் வியாபார அடையாளத்தை உள்ளடக்கி சிறிய சந்தைகளை இனங்கண்டு புதிய மரபுவழியல்லா ஏற்றுமதிச் சந்தைகளைத் தேடுவதற்கான சந்தைப் பன்முகப்படுத்தலிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**2014இன் 9.2 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து பானங்கள் துணைத் துறை 2015இல் 10.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை அறிவித்திருந்தது.** இத்துணைத் துறையின் பெரும்பங்கிற்கு வகைகூறும் வெறியக் குடிவகையின் அதிகரித்த உற்பத்தி இவ்வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக விளங்கியது. இதற்கு மேலதிகமாக, மென்பானங்கள்,

அட்டவணை 2.9 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2010 = 100)


| பிரிவு | சுட்டெண் | | | |
|---|---|---|---|---|
| | 2014 (அ) | 2015 (ஆ) | 2013/14 (அ) | 2014/15 (ஆ) |
| 1 உணவு உற்பத்திகள் (23.7%) | 102.3 | 107.3 | -2.8 | 4.9 |
| 2 குடிபானங்கள் (8.1%) | 111.8 | 123.1 | 9.2 | 10.1 |
| 3 புகையிலை உற்பத்திகள் (8.4%) | 87.6 | 95.4 | -9.3 | 8.9 |
| 4 புடவை (1.6%) | 132.9 | 131.0 | 3.4 | -1.4 |
| 5 அணியும் ஆடைகள் (23.1%) | 149.5 | 173.4 | 19.7 | 16.0 |
| 6 தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.8%) | 97.0 | 86.4 | -1.4 | -10.9 |
| 7 தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள் (0.1%) | 108.9 | 121.7 | -4.9 | 11.7 |
| 8 தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (0.1%) | 126.6 | 126.6 | 2.6 | 0.0 |
| 9 அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (0.7%) | 112.4 | 112.4 | 1.9 | 0.0 |
| 10 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (2.2%) | 86.0 | 82.6 | 3.1 | -3.9 |
| 11 இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (6.3%) | 82.2 | 88.3 | 10.8 | 7.5 |
| 12 மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 142.8 | 142.2 | -22.9 | -0.4 |
| 13 இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (10.5%) | 134.2 | 131.3 | 13.6 | -2.2 |
| 14 ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.2%) | 102.9 | 118.5 | -0.3 | 15.1 |
| 15 அடிப்படை உலோகங்கள் (1.0%) | 112.9 | 115.0 | 10.3 | 1.8 |
| 16 பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (3.8%) | 97.1 | 109.8 | -12.7 | 13.0 |
| 17 இலத்திரனியல் சாதனங்கள் (2.3%) | 99.5 | 130.6 | -7.6 | 31.3 |
| **தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **114.9** | **125.4** | **6.1** | **9.2** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு :
1) தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணுக்கான (2010=100) நிறையிடல் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.
2) கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பது 2013இல் தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என மீளப்பெயரிடப்பட்டுள்ளது.


**வரைபடம் 2.5 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2015**




போத்தலில் அடைக்கப்பட்ட நீர், சுத்திகரிக்கப்பட்ட நீரிலான 18.2 சதவீத வளர்ச்சி மற்றும் சுவையூட்டப்பட்ட பால் உற்பத்திகளின் 8.8 சதவீத வளர்ச்சியும் பானங்கள் துணைத் துறையிலான ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. இத்துறையிலான விரிவாக்கத்திற்கு இவ்வாண்டில் அதிகரித்த சுற்றுலா வருகை பெருமளவில் பங்களித்தது.

**இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறை 2014இன் 10.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 7.5 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பிரதிபலித்தது.** பூச்சுக்கள் மற்றும் வாணிஸின் விரிவடைந்த வெளியீடு 53.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து இத்துணைத் துறையின் அதிகரித்த செயலாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும், சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கிகளின் உற்பத்தியும் 4.3 சதவீதத்தால் அதிகரித்து இத்துணைத் துறையின் ஒட்டுமொத்தச் செயலாற்றத்திற்கு உதவியது. இதேவேளை, இத்துணைத் துறையின் வெளியீட்டுக்கு முக்கிய பங்களிப்பாளரான வளமாக்கி உற்பத்தி ஆண்டு காலத்தில் 0.8 சதவீதத்தால் அதிகரித்தது.

**வரைபடம் 2.6 முக்கிய பிரிவுகளின் தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி**




கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலைகளை முக்கியமாக உள்ளடக்கும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத் துறை முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட கூர்மையான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் சாதகமாகச் செயலாற்றியது. பிராந்திய போட்டியாளர்களிடமிருந்தான அதிகரித்துச் செல்லும் போட்டிக்கு மத்தியிலும் கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலைச் செயற்பாடுகள் எண்ணெய் அகழ்வுக்காகப் பயன்படுத்தும் கரைகடந்த துணைக் கலங்களுக்கான அதிகரித்த கேள்வியின் முக்கிய காரணமாக ஏறத்தாழ 20 சதவீதத்தால் விரிவடைந்தன. மேலதிகமாக பன்னாட்டு கப்பல் பாதைகளில் இருக்கும் இலங்கையின் பூகோள அமைவிடம் கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலைகளுக்கு பன்னாட்டு வியாபாரத்தை ஈர்க்கும் கைத்தொழிலுக்கான வாய்ப்பைத் தொடர்ந்தும் வழங்குகிறது. எனினும், இப்பிராந்தியத்தில் தோற்றம் பெற்றுவரும் கப்பல் கட்டும் துறைகளிலிருந்து எழும் போட்டிக்கு முகம்கொடுப்பதற்கு, உயர் உற்பத்தித்திறனுடன் அதன் தொழில்நுட்பம் மற்றும் தர நியமங்களை இக்கைத்தொழில் முன்னேற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னணியில், ஏற்றுமதிச் சந்தையில் பொழுதுபோக்கு மற்றும் பயணிகள் பணிகளுக்கான கலங்களை உள்ளடக்குவதற்கு உற்பத்திக் கலங்களை நீடிப்பதையும் ஆராய வேண்டும்.

**முன்னைய ஆண்டின் மந்தமான செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத் துறை சிறப்பான செயலாற்றத்தைப் பிரதிபலித்து 15.1 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது.** உயர் நுகர்வுக் கேள்வியால் உந்தப்பட்ட சீமேந்து, சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சாந்தின் உற்பத்தியிலான 21.1 சதவீத வளர்ச்சி மற்றும் கொங்கிறீட், சிமெந்து மற்றும் சுண்ணாம்புச் சாந்தால் செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியிலான 24.5 சதவீத வளர்ச்சி இத்துறையின் அதிகரித்த உற்பத்திக்கான ஆதிக்கம் செலுத்தும் பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான போட்டிக்கு மத்தியிலும் மட்பாண்ட மற்றும் வெண்களி உற்பத்திகள் 2.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்யக் கூடியதாகவிருந்தது. நலக்கரிசனை காரணமாக 2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் கல்நார் உற்பத்திகளின் சாத்தியமான தடையைப் பரிசீலிக்கும் அரசின் அண்மைய தீர்மானம் கல்நாரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மீது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய போதும் களிமண்ணை அடிப்படையாகக் கொண்ட கட்டடவாக்கப் பொருட்கள் மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் 2.3 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்யும் மின்கருவியின் உற்பத்தி முன்னைய ஆண்டின் 7.6 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சிக்கு எதிராக இவ்வாண்டில் 31.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உள்நாட்டு வலுத் துறை அதுபோல் ஏற்றுமதிச் சந்தைகளிலிருந்தான உயர் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு மின்மாற்றிகள், கம்பி மற்றும் மின்கலத்தின் அதிகரித்த உற்பத்தி இத்துணைத் துறையின் முன்னேற்றகரமான செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது.

புகையிலை உற்பத்திகள் துணைத் துறை 2015இல் 8.9 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்து கடந்த மூன்று ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கமடையும் போக்கை எதிர்மாறாக்கியது. முக்கியமாக அதிகரித்த வருமானம் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் புகையிலை உற்பத்திகளுக்கான கேள்வியில் எழுச்சி அவதானிக்கப்பட்டது. எனினும், 2015இன் நான்காம் காலாண்டில் கலால் தீர்வையிலான அதிகரிப்பால் ஏற்பட்ட சிகரெட் விலைகளின் மேல் நோக்கிய திருத்தம் மற்றும் சிகரெட் பொதிகளில் 80 சதவீத பட எச்சரிக்கைகளைக் கட்டாயமாக வெளிப்படுத்த வேண்டிய அரச ஒழுங்குத் தாக்கம் காரணமாக இத்துணைத் துறை 6.1 சதவீதம் கொண்ட சுருக்கத்தை அனுபவித்தது.

அடிப்படை உலோகங்களின் உற்பத்தி 2014இன் 10.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் கிட்டத்தட்ட 1.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டின் முற்பகுதியில் பின்னடைவைச் சந்தித்த நாட்டின் கட்டடவாக்கச் செயற்பாடுகளிலிருந்தான குறைந்த கேள்வி காரணமாக இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் அடிப்படை இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திகளின் தயாரிப்பிலான சுருக்கம் இக்காலப்பகுதியில் குறைந்த வெளியீட்டைப் பாதித்த முக்கிய காரணியாக விளங்குகிறது. எனினும் ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்த கேள்வி இத்துணைத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஆதரவளித்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்த் தூய்மிகளின் வெளியீட்டை மட்டும் உள்ளடக்கியுள்ள சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 3.9 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. 2015இன் முற்பகுதியில் பேணலுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி மூடப்பட்டமையால் குறைந்தளவிலான சுத்திகரிக்கப்பட்ட செயற்பாடுகள் இவ்வாண்டில் இத்துணைத் துறையின் சுருக்கத்துக்கான முக்கிய காரணமாக விளங்கியது.

இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அநேகமாக 2015 முழுவதும் செயலாற்றத்தில் மெதுவடைவை எடுத்துக்காட்டியது. இத்துணைத் துறை இவ்வாண்டில் 2.2 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு இத்துணைத் துறையின் வெளியீட்டில் பெரும்பாலானவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் இறப்பர் டயர்கள் மற்றும் ரியூப்புக்களின் உற்பத்தியிலான 4.1 சதவீதத்திற்கும் கூடுதலான வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பா போன்ற முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளிலிருந்தான மந்தமான கேள்வியால் ஏற்பட்ட குறைந்த ஏற்றுமதிகள் இவ் உற்சாகமற்ற உற்பத்திக்குக் காரணமாக இருந்தன. அதேநேரத்தில், வீழ்ச்சியடைந்து செல்லும் எண்ணெய் விலைகள் செயற்கை இறப்பருக்கான விலையை குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏற்கனவே வீழ்ச்சியடைந்து செல்லும் இயற்கை இறப்பர் உற்பத்தியை மேலும் பாதித்து இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் தயாரிப்பு மீது எதிர்க்கணிய விளைவுக்கு வழியமைக்கிறது. குறைந்த இயற்கை இறப்பர் விலைகள் மற்றும் முன்னேற்றமடைந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வியிலிருந்து நன்மையடைந்து பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் கையுறை போன்ற ஏனைய இறப்பர் உற்பத்திகள் சிறப்பாகச் செயலாற்றி முறையே 30.3 சதவீதம் மற்றும் 3.9 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தன. பல ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களுடன் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. இலங்கை டயர் தயாரிப்பாளர்கள் உலகளாவிய ரீதியில் கெட்டியான டயர் கேள்வியின் பெருமளவு பங்கினை பூர்த்திசெய்வதுடன் இவ்வுற்பத்திகள் உலகில் சிறந்ததொன்றாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையின் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் மருத்துவ, கைத்தொழில் மற்றும் வீட்டுப் பாவனைக்கான கையுறைகள், வாகன மற்றும் வானூர்திகளுக்கான டயர்கள் மற்றும் ரியூப் போன்ற பரந்தளவிலான பெறுமதிகூட்டப்பட்ட பொருட்களை உள்ளடக்குகின்றன. எனினும், இவ்வகையான உற்பத்திகள் 2015இல் நாட்டின் மொத்த வணிக ஏற்றுமதிகளின் 8 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறுகின்றன. எனவே, பன்னாட்டு அதுபோல் உள்நாட்டுச் சந்தையில் உயர் பெறுமதியுடைய உற்பத்திகளுக்கு கூறுகள் தயாரிப்பாளராக உலக பெறுமதிச் சங்கிலியை ஒருங்கிணைக்கும் சாத்தியங்களுடன் கணிசமான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருக்கும் இத்துறைக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

புடவை துணைத் துறை பின்னடைவை அனுபவித்து 2014இல் அறிவிக்கப்பட்ட 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஏறத்தாழ 1.4 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்தது.

சார்பு ரீதியில் குறைந்த விலைகளில் இறக்குமதி செய்யப்பட்ட ஆடை மற்றும் புடவைகளின் கிடைப்பனவு உள்நாட்டுப் புடவை தயாரிப்பு துணைத் துறையில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதனால், உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் போட்டிக்கு முகம் கொடுப்பதற்கு விலை அல்லது தர நியதிகளில் போட்டித்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கான முறைகளைத் தேடவேண்டும். இதன் பின்னணியில், நாட்டில் மிகப் பழைமையான கைத்தொழில்களில் ஒன்றான உள்நாட்டு கைத்தறித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வளத்தை ஆராய வேண்டும். சூழலுக்கு ஏற்ற கைவினைப் பொருட்களுக்கான வளர்ந்து வரும் கேள்வியின் நோக்கில் இத்துறையானது பன்னாட்டுச் சந்தையில் பாரிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது.

**தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் துணைத் துறை 2015இல் நலிவான செயலாற்றத்தைத் தொடர்ந்து அனுபவித்தது.** இத்துணைத் துறை 2014இன் 1.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 10.9 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியை அறிவித்தது. பாதணி தயாரிப்பிலான வீழ்ச்சியே இவ்வெதிர்மறையான செயலாற்றத்துக்கான முக்கிய காரணமாகும். தோல் பொருட்களுக்கான குறைந்த கேள்வி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட குறைந்த விலையிலான செயற்கை உற்பத்திகளிலிருந்தான போட்டி உள்ளூர் பாதணி தயாரிப்பை மோசமாகப் பாதித்த முக்கிய காரணிகளாகும்.

### கைத்தொழில் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியிலான உதவி

**அரசு அதன் ஏற்றுமதியால் வழிநடத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளுடன் இத்துறை இணைந்து செல்வதற்கான முயற்சிகளுடன் கைத்தொழில் துறை அபிவிருத்தியைத் தொடர்ந்து வசதிப்படுத்தியது.** இதன்படி, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இவ்வாண்டில் மேலும் விரிவாக்கப்பட்டது. திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் கட்டம் II தொடர்பான அபிவிருத்தி வேலை 2015இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு காணி அபிவிருத்திச் செயற்பாடுகளில் அநேகமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இக்கைத்தொழில் பேட்டையின் மேலுமொரு விரிவாக்கமான கட்டம் III அதற்குப் பக்கத்திலுள்ள 50 ஏக்கர் காணியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திராய்மடுவில் கைத்தொழில் பேட்டையை 24 ஏக்கர் அரச காணியில் நிறுவுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு 2015இல் வழங்கப்பட்டது. அம்பாறையிலுள்ள நவகம்புர கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளும் இவ்வாண்டில் இறுதிப்படுத்தப்பட்டதுடன் தற்போது 7 தொழிற்சாலைகள் தொழிற்பாட்டிலுள்ளன. வட மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்குவதை உதவும் பொருட்டு வட மாகாணத்தில் கைத்தொழில்களைத் தூண்டுவதற்கு ஆடை மற்றும் ஆடைசார்ந்த தொழிற்சாலைகளை வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வெலிஓயாவில் கைத்தொழில் பேட்டையை நிறுவுவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பிரதேசத்தில் கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான மேலதிகத் தூண்டலாக இக்கைத்தொழில் பேட்டையில் 3 தொழிற்சாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு தீர்மானித்துள்ளது. இங்கு கட்டடவாக்கம் தொடர்பான ஆரம்பச் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**பன்னாட்டுச் சந்தைகளில் கைத்தொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கும் அதேவேளை இவ்வாண்டில் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு பொதுவான கொள்கை முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** மிகச் சிறிய மட்டத்திலான நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபை பல பயிற்சி மற்றும் தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதில் அநேகமானவை உணவு மற்றும் பானங்கள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளில் துறைகளிலிருந்தானவையாகும். 20 மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலுக்கான நடவடிக்கைத் திட்டம் உள்ளிட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்யும் உலகில் போட்டித்தன்மை வாய்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளாக ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சால் உருவாக்கப்பட்டது. இதேவேளை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வர்த்தகக் குழுக்களை ஏற்பாடு செய்தல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள் மூலம் பன்னாட்டுச் சந்தைகளில் உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு வசதிப்படுத்தியது. இலங்கையின் பாதணி மற்றும் தோல் பொருட்களின் நற்பெயரைப் பன்னாட்டு ரீதியில் பலப்படுத்துவதற்கு பாதணி மற்றும் தோல் கண்காட்சி 2015இல் நடத்தப்பட்டது. ஆடைத் துறைக்கு அடுத்தபடியாக வளர்ச்சிக்கான உயர் உள்ளார்ந்த வளம் கொண்ட நம்பிக்கையளிக்கும் துறையாக பாதணி விளங்குகிறது. உலகில் நீலக்கல்லுக்கான மையமாக இலங்கையை நிலைப்படுத்தும் குறிக்கோளுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பன்னாட்டு நிறமுள்ள இரத்தினக்கல் அமைப்பின் 16ஆவது மாநாட்டையும் உள்ளூர் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலைத் தூண்டுவதற்கு பன்னாட்டு

## சிறப்புக்குறிப்பு 3 வியாபார நடத்தைகளின் ஒரு குறிகாட்டியான வியாபார நிலைமைகளின் அளவீடுகள்

வியாபார தோற்றப்பாடு மற்றும் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் போன்ற வியாபார நிலைமைகளின் அளவீடுகள், சந்தை பங்குபற்றுனர்களின் கருத்துக்களை கண்டறிவதன் ஊடாக கொள்கை வகுப்பாளர்கள் பொருளாதாரத்தின் நாடித்துடிப்பினை அடையாளம் காணுவதற்கான அதேநேர தகவல்களை சேகரிப்பதற்கு இயலச் செய்கின்றன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்கள், சிறிய கால தாமத்துடன் கிடைக்கப்பெறும் அலுவல்சார் புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் உரிய நேரத்தில் கிடைப்பதாகவும் எதிர்காலத்திற்கு சிறந்ததாகவும் காணப்படுகின்றன. எனவே, வியாபார நிலைமைகள் அளவீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தோற்றம்பெற்றுவரும் பொருளாதார அபிவிருத்திகளை விளங்கிக் கொள்வதற்கும், சாத்தியமான இடர்நேர்வுகளை முன்கூட்டியே இனங்கண்டு கொள்வதற்குமானதொரு வசதியை வழங்குகின்றதுடன் இதன்மூலம் முன்கூட்டியே கொள்கை நடவடிக்கைகளை எடுக்கமுடியும். அவ்வாறு உரிய நேரத்திலான தகவல் சேகரிப்புக்களின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளும் பொருட்டு, நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் அசைவுகளை கண்டறிவதற்கான கணியம்சார் தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக, இலங்கை மத்திய வங்கியானது 2014இன் நடுக்காலப் பகுதியிலிருந்து வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டையும் 2015 மேயிலிருந்து தயாரிப்பு மற்றும் பணிகள் துறைக்கான கொள்வனவு முகாமையாளர்களின் குறிகாட்டியையும் அறிமுகப்படுத்தியது. கொள்வனவு முகாமையாளரின் குறிகாட்டியின் முடிவுகள் தகவல்களின் நியாயமான நீண்டதொடர்ச்சியான தகவல்கள் நிறுவப்பட்டதன் பின்னர் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன் வியாபார தோற்றப்பாட்டு அளவீடு பொதுமக்களுக்கு தற்போது கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதனை தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்காகும்.


### வியாபார தோற்றப்பாட்டு அளவீடு

வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது பொருளாதார செயற்பாடுகளின் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நிலை தொடர்பிலான வியாபார அபிப்பிராயங்களின் ஒரு நிழலாக காணப்படுவதுடன், பொருளாதார செயற்பாடுகளின் முக்கியமான விடயங்களிலான வியாபார சமூகத்தின் பூந்துணர்வுகளை உரிய காலத்தில் திரட்டுகின்ற செயற்பாடாகவும் காணப்படுகிறது. பதிலிறுப்பாளர்கள், பொருளாதார செயற்பாடுகளின் பல்வேறு வழிமுறைகளுக்கு கணியம் சார்ந்தவைகளை விட தரமானவற்றில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதனால் வியாபார தோற்றப்பாட்டு அளவீடு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களானது தரம் சார்ந்த பிரசன்னங்களைத் தருவதாக கருதமுடியும். உதாரணமாக, விற்பனை போக்குகளின் மதிப்பீடொன்றில், ஒரு பதிலிறுப்பாளர் மதிப்பீட்டிற்காக, விற்பனைப் போக்கானது தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கின்றதா, மாறாதுள்ளதா அல்லது குறைந்து செல்கின்றதா என்பதை கேட்கமுடியும். பாரம்பரிய அளவீடுகளில், இவை பதிலிறுப்பாளர்கள் தேவைப்படும் காலத்தை அளவிடுவதற்காக கேட்கலாம். எனவே, வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது பொருளாதாரம் மீதான பயனுள்ள ஒன்றுடன் ஒன்று இணைந்த தகவல்களை வழங்குவதுடன் அலுவல்சார் தகவல்களை விட விரைவானதாகவும் உரிய நேரத்தில் கிடைக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

### வியாபார மனோபாவ அளவீட்டொன்றின் முக்கியத்துவம்

பொருளாதாரமொன்றின் செயற்பாடுகள் தொடர்பிலான கணியம்சார் தரவுகளை பயன்படுத்துதலானது அதிநவீன பகுப்பாய்வு தொழில்நுட்பங்கள் காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற அனைத்து அபிவிருத்திகளையும் பெற்றுக்கொள்வதற்கு தவறலாம். அத்துடன், அத்தகைய கணியம்சார் தரவுகள் பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை நோக்குகையில் குறிப்பிடத்தக்க கால பின்னடைவுகள் கணிசமான தாமதங்களை நீக்குவதன் மூலம் பெரும்பாலும் கிடைக்ககூடியதாக காணப்படுகின்றன. எனவே, கணியம்சார் தரவுகளின் மீது மட்டுமே சார்ந்திருப்பது பொருளாதாரமொன்றின் அபிவிருத்திகளின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே வழங்கும். உண்மைப் பொருளாதார செயற்பாடுகள் மீதான அதிகளவான அண்மைய போக்குகள் மற்றும் அனுமானிக்கும்தன்மை போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும் போக்குடன் அளவீட்டின் அத்தகைய பின்னடைவுகளை தவிர்ப்பதற்காக அளவீடுகள் பொருளாதார முகவர்களுடன் நேரடியாக தொடர்புகொள்ளக் கூடியவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. நடைமுறை வியாபார நிலைமைகளின் பூரணமான மதிப்பீடுகளை இயலச் செய்வதற்கும் கணியம்சார் தரவுகள் கொள்கை உருவாக்கத்திற்காக கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும் காலம் வரையில் கணியம்சார் குறிகாட்டிகள் ஊடாக குறுங்கால அபிவிருத்திகளை எதிர்வுகூறல் போன்ற சாத்தியங்கள் காணப்படுகின்ற நியாயமான அதிநவீன அளவீட்டு பிரயோகங்களை கொண்டுள்ள நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது குறிப்பாக நடைமுறை பொருளாதார நிலைமைகளை கண்காணித்தல் மற்றும் வியாபார சுற்றோட்டத்திலுள்ள திருப்புமுனைகளை எதிர்வுகூறுதல் போன்றவற்றிற்கு பயன்படுகின்றது என்பதனை நிரூபித்துள்ளது. தகவல்களை ஆராய்தல் பொருளாதார நடவடிக்கைகளிலான மாற்றங்களின் நேரகாலத்துடனான எச்சரிக்கையொன்றினையும் வழங்கும். இவற்றை, பொருளாதார நெருக்கடிகள் போன்ற மாறுந்தன்மை காணப்படுகின்றவிடத்து விஞ்ஞான ரீதியிலான மாதிரிகள் உறுதியற்றதாக காணப்படுவதால் அதன்மூலம் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

வரைபடம் சி.கு. 3.1 வியாபார நிலைமை சுட்டெண்ணின் போக்கு



### நாட்டின் அனுபவமும் பன்னாட்டு ரீதியான ஏற்புகளும்

பேங்க் ஒப் கொரியா, பெங்கோ டி மெக்சிகோ, பேங்க் ஒப் தாய்லண்ட், பேங்க் ஒப் கனடா, ரிக்ஸ்பாங்க், ஐக்கிய அமெரிக்க பெரடல் ஒதுக்கு மற்றும் உலகிலுள்ள அநேக மத்திய வங்கிகள் போன்றவை வியாபார தோற்றப்பாடு மீதான அளவீடுகளை மேற்கொள்கின்றன. மேலும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பானது பன்னாட்டு ஒப்பீடுகளை தளர்த்துவதற்காக வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டின் ஒத்திசைவான முறைமையொன்றை நாடுகள் பின்பற்றுவதனை ஊக்குவிப்பதற்கான கையேடு ஒன்றினை வெளியிட்டது. இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் கையேட்டில் முன்மொழியப்பட்டவாறான பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை பின்பற்றுகின்றது.

நாடுகள் அனைத்தினதும் அனுபவங்கள், வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டினையும் பொருளாதாரத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட நேரத்தொடர்ச்சிச் சுட்டெண்கள் உயர்ந்தளவான பரஸ்பர தொடர்புகளை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக, வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடுகளிலுள்ள நடவடிக்கையொன்றாக அளவிடப்பட்ட எதிர்கால விற்பனை எதிர்பார்ப்புக்கள் பொருளாதாரம் மெதுவடைவதற்கு முன்னதாகவே குறைவடைந்து அல்லது தேய்வடைந்து வருவதுடன் பொருளாதார மீட்சிகளுடன் சேர்ந்து நேர்க்கணியமாக முன்னோக்கி நகரத்தொடங்குகின்றன. மேலும், வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு பொருட்பட்டியல்களை விரும்பத்தக்க மட்டத்திலும் பார்க்க உயர்வாக இருப்பது, முதலீடுகளை நாடும் தன்மை பொருளாதாரம் மெதுவடைவதற்கு முன்னதாகவே எதிர்க்கணியமாக மாறிவிடுவதற்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டுவதாக இருக்கும்.

### வியாபார தொழிற்பாட்டு அளவீட்டின் முறையியல்

இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டின் முக்கிய இலக்கு வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் செயற்பாட்டினை உள்ளடக்கிய பாரிய அளவிலான நிறுவனங்களாக காணப்படுகின்றன. மாதிரியானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான துறைவாரியான பங்களிப்பின் அடிப்படையில் திருப்தித் தன்மையின் மூலமான நடுநிலையான மாதிரி முறையினை பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்டது. நியமமான வினாக்கொத்தின் அடிப்படையில் தரவுகள் நேரடியாக அல்லது தொலைத்தொடர்பு கலந்துரையாடலின் மூலம் அல்லது பதிலிறுப்பாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மின்னஞ்சல் மூலமாக சேகரிக்கப்பட்டன. இவ் அளவீடானது காலாண்டு இடைவெளியில், காலாண்டின் அடுத்துவரும் காலாண்டின் முதல் வாரத்திலும் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டது. அளவீட்டின் முடிவுகள் வியாபார நிலைமைகள், இலாபத்தன்மை, திறன் வாய்ந்த தொழிலாளர் கிடைப்பனவு, விற்பனைகள், இயலளவு பயன்பாடு மற்றும் கேள்வி போன்ற பெயர்களிலான வியாபார நடத்தை குறிகாட்டிகளை (வி.ந.கு) தொகுப்பதன் மூலம் சுருக்கமாக குறிப்பிடப்பட்டது. வியாபார நடத்தை குறிகாட்டியானது பின்வருவனவற்றை வழங்கியதன் மூலம் கணிக்கப்பட்டது.

- நேர்மறையான முறையில் வழங்கப்பட்ட பதில்களுக்காக +1
- மாறாத முறையில் வழங்கப்பட்ட பதில்களுக்காக 0
- எதிர்மறையான முறையில் வழங்கப்பட்ட பதில்களுக்காக -1

இவ் அளவிடப்பட்ட பெறுமதிகள் சராசரியாக்கப்பட்டதுடன் ஒவ்வொரு துறைக்குமான ஒரு குறிகாட்டியை தொகுப்பதற்கு 100 வரைக்கும் மீள் அளவிடப்பட்டது. வியாபார நடத்தைகள் குறிகாட்டியின் (வி.ந.கு) இத்தகைய துறைகள் பொருத்தமான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிறையினை அவற்றிற்கு வழங்கியதன் மூலம் இணைக்கப்பட்டது. தொகுக்கப்பட்ட வியாபார நடத்தைகள் குறிகாட்டியானது 0-200 வரையான அளவுகளில் பெறுமதிகளை கொண்டுள்ளதுடன், பொதுவான விளக்கம் பின்வருமாறு அமைந்திருக்கும்.

- வி.ந.கு = 100 என்று வியாபார நடத்தையானது தொடர்பான கணக்குப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையவில்லை.
- வி.ந.கு > 100 என்பது வியாபார நடத்தையானது தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டுள்ளது.
- வி.ந.கு < 100 என்பது வியாபார நடத்தையான தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மோசமடைந்துள்ளது.

### கணிக்கப்பட்ட வியாபார நடத்தை குறிகாட்டிகளின் போக்கு

2014இன் 2ஆம் காலாண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வியாபார தோற்றப்பாட்டு அளவீடுகளின் விளைவுகளின் படி, (வரைபடம் சி.கு. 3.1 மற்றும் அட்டவணை சி.கு. 3.1) 2015இல் வியாபார நிலைமைக் குறிகாட்டி 100 ற்கும் மேல் காணப்பட்டது. இது ஒட்டுமொத்த வியாபார நிலைமைகளும் நேர்மறையான விதத்தில்

அட்டவணை சி.கு. 3.1

**வியாபார மனோபாவச் சுட்டெண்கள் (அ)**

| சுட்டெண் | 2014 | | | 2015 | | | | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கா1 | கா3 | கா4 | கா1 | கா2 | கா3 | கா4 | கா1 எறிவுகள் |
| வியாபார நிலைமை | 120 | 136 | 126 | 107 | 111 | 111 | 122 | 121 |
| தேர்ச்சி பெற்ற ஊழியர்களின் கிடைப்பனவு (ஆண்டுக்காண்டு) | 73 | 101 | 90 | 102 | 84 | 100 | 76 | 86 |
| கேள்வி (ஆண்டுக்காண்டு) | 131 | 137 | 136 | 122 | 139 | 129 | 146 | 137 |
| விற்பனை (ஆண்டுக்காண்டு) | 134 | 127 | 140 | 123 | 145 | 142 | 142 | 138 |
| இயலளவு பயன்பாடு (ஆண்டுக்காண்டு) | 128 | 122 | 138 | 131 | 134 | 138 | 124 | 126 |
| இலாபத்தன்மை (காலாண்டுக்கு காலாண்டு) | 85 | 120 | 117 | 97 | 97 | 106 | 112 | 100 |

(அ) 2015 திசெம்பர் 21இலிருந்து 2016 சனவரி 11 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 2014 இரண்டாம் காலாண்டு தொடக்கம் 2015 நான்காம் காலாண்டு வரையான காலப்பகுதிக்கான வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டின் பெறுபேற்றின் அடிப்படையில்.

மாறாது காணப்பட்டமையினை குறிக்கும் வேளையில் விற்பனைகள் மற்றும் கேள்வி போன்ற வியாபார செயற்பாடுகளின் முன்னோக்கிய பார்வைக் குறிகாட்டிகளும் 2015இல் நேர்மறையாக காணப்பட்டது. குறிகாட்டியின் மட்டங்களை கவனத்தில் கொள்கையில், 2014இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், வியாபார நடத்தை குறிகாட்டிகள் பலயீனமான இலாபத்தன்மையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2015 காலப்பகுதியில் ஒட்டுமொத்த வியாபார நிலைமைகளில் மெதுவான தன்மையொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், 2015இன் பிற்காலப்பகுதியில் ஒட்டுமொத்த வியாபார நிலைமைகளில் படிப்படியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மேலும், இது 2014 உடன் ஒப்பிடுகையில் 2015இல் சராசரியாக, இயலளவு அழுத்தங்களானது கேள்வியின் அதிகரிப்பு மூலம் அதிகரித்தது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அளவீட்டில் பங்குகொண்ட பதிலிறுப்பாளர்களால் குறிப்பிடப்பட்டவாறு, ஊழியர் பற்றாக்குறையானது பயிற்றப்பட்ட ஊழியர் கிடைப்பனவின் குறிகாட்டி மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு தேய்வடைந்தமையில் அதிகரித்த கேள்வியினை நிவர்த்தி செய்வதற்கு தடையானதொன்றாக அடையாளம் காணப்பட்டது. சில கம்பனிகள் கட்டுப்பாடு என்ற வகையில், திறன்கள் அனுமானிக்கும் தன்மைகளுக்கிடையில் பொருத்தப்பாட்டின்மை காணப்படுவதாக குறித்துக் காட்டப்பட்டுள்ள வேளையில், பயிற்றப்பட்ட ஊழியர்களின் புலம்பெயர்வானது பயிற்றப்பட்ட ஊழியர்களின் கிடைப்பனவுக்கான சவாலாக விளங்குவதாக மற்றையவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பதிலிறுப்பாளர்கள் கொள்கை நிச்சயத்தன்மையின் தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டிய போதிலும் 2016இன் முதலாம் காலாண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட வியாபார வெளிப்பாடுகளிலான நடுநிலையான அபிப்பிராயங்களை ஊக்குவிப்பிதற்கான அறிகுறிகளை எடுத்துக்காட்டிய வேளையில், வெளிப்புற வியாபார நிலைமைகளை இறுக்கமடையச் செய்வது பற்றிய எச்சரிக்கைகளையும் கொண்டுள்ளது.

**முன்னோக்கிய பாதை**

வியாபார தோற்றப்பாடு அளவீட்டின் வெற்றியானது தகவல் வழங்குனர் அல்லது பதிலுறுப்பாளர்களான கம்பனிகளால் வழங்கப்படும் பங்களிப்பில் தங்கியுள்ளது. இந்த அளவீடானது முன்னோக்கிய குறிகாட்டிகள் மற்றும் பொருளாதார நிலைமைகளை எச்சரிக்கைப்படுத்துவதற்கான பொருளாதார முகவர்கள் மற்றும் மத்திய வங்கியிடையிலான வினைத்திறனுடனான தொடர்பூட்டல் வழிகளினை உருவாக்குதலை இயலச்செய்து வருகின்றது. மேலும், வியாபார தோற்றப்பாடு அளவையானது கொடுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் அதன் பணிப்புரைகள் மீது பொருளாதார முகவர்களின் அனுமானிக்கும் தன்மையை மதிப்பிடுவதற்கு இயலச்செய்கின்றது. ஆகையால் துல்லியமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதலானது ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் போக்கினை கண்காணிப்பதற்கான வியாபார தோற்றப்பாடுகளுக்கு மிக முக்கியமானதாகும். வியாபார தோற்றப்பாட்டு அளவைகளின் கண்டுபிடிப்புக்கள் பொதுமக்களின் தகவல்களுக்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் ஒன்றுசேர்ந்த படிவத்தில் காலாண்டு அடிப்படையில் வெளியிடப்படுகிறது. இதனை www.cbsl.gov.lk/htm/english/08_stat/s_8.html ஊடாக அணுகமுடியும்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியையும் ஏற்பாடு செய்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் பொறுப்பேற்கப்பட்ட ஏனைய முக்கிய செயற்பாடுகளில் சில பன்னாட்டுச் சந்தையில் படகு கட்டுவதற்கான இலங்கையின் போட்டித்தன்மையை ஊக்குவிப்பதற்கு வசதிப்படுத்தல், தைத்த ஆடைகளுக்கான புதிய பன்னாட்டுச் சந்தைகளைத் தேடுதல் மற்றும் இலங்கையின் கறுவா வர்த்தக அடையாளத்தை ஊக்குவிப்பதற்கு உதவுவதாகும். இதற்கும் மேலாக, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 22 இற்கும் கூடுதலான பன்னாட்டு வர்த்தகச் சந்தைகளில் பங்கேற்பதை வசதிப்படுத்தியதுடன் 2015இல் உள்நாட்டில் கிட்டத்தட்ட 29 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2015இல் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டது. பன்னாட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி ஆபரணத் தொழிலாளிகள் அவர்களின் ஆபரணத்தைத் தயாரிப்பதற்கு வழிநடத்துவதற்கும் உதவுவதற்குமாக உலோகச் சோதனை மற்றும் அசல் என்பதைக் குறிக்கும் அடையாளம் அதுபோல் இரத்தினக்கற்களைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூடம் காலியில் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் தேர்ச்சியைத் தரமுயர்த்துவதற்கு பயிற்சி மற்றும் இயலளவைக் கட்டியெழுப்பும் தொழில்நுட்பங்களையும் வழங்கியது.

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துக்கான ஒருங்கிணைப்புச் செயலகம் நாட்டின் கைத்தொழில் துறையின் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கு பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப ஆலோசனைப் பணியை வழங்குவதன் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்புக்களை வசதிப்படுத்தியது.** விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் சம்பந்தமாக நாட்டின் தற்போதைய நிலையைப் பற்றி தகவலை வழங்கும் இலங்கை புத்தாக்க தகவல்தளம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ் தகவல்தளத்தின் முக்கிய நோக்கம் இலத்திரனியல் வடிவில் உரியதகவலை வழங்குவதன் மூலம் தேசிய விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க உபாயத்துக்கு உதவுவதாகும். மேலும், வரவுசெலவுத் திட்டம் 2016இல் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதனை நோக்கி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சில் புத்தாக்க விரைவுபடுத்தல் மற்றும் தேசிய புத்தாக்க நிலையத்தை நிறுவுதல் மற்றும் இலங்கை கண்டுபிடிப்போர்

ஆணைக்குழு ஊடாக தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியை வழங்குவதன் மூலம் பன்னாட்டு உரிமப்பத்திர உரிமைகளை பெறுவதை இலகுபடுத்தல் உள்ளிட்ட பல எண்ணிக்கையான முன்மொழிவுகளை முன்வைத்தது. இத்துடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரத்தின் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி ஒரு முக்கிய விடயமாகவிருப்பதுடன் மேல் மாகாண பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அறிவாற்றலை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கத்தின் மூலம் தூண்டப்படும் பொருளாதாரமொன்றிற்கு மாறுகின்ற விதத்தில் பொருளாதாரத்தின் அவசியமான அமைப்பியல் மாற்றங்களை இயலச்செய்வதற்கு உத்தேச விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நகரை அபிவிருத்தி செய்வது முக்கியமான ஒரு உபாயமாகும். இது ஏற்றுமதிகள் தொடர்பான பலமான வலியுறுத்தலுடன் பாரிய உயர் தொழில்நுட்பத் தயாரிப்பு மற்றும் வர்த்தகப்படுத்தக்கூடிய பணிகள் துறையை ஊக்குவிப்பதற்கு வடிவமைக்கப்படும். மேலும், தேசிய விஞ்ஞான மன்றமும் நெகிழ்ச்சியான நிதியிடும் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், அறிவை அதிகரித்தல் மற்றும் மாற்றலுக்கான ஒத்துழைப்பு, ஆராய்ச்சி விஞ்ஞானங்களின் இயலளவைக் கட்டியெழுப்புதல் என்பவற்றை வழங்குவதன் ஊடாகவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் தனியார் துறை ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கு கொள்கை முன்மொழிவுகளை அறிமுகப்படுத்துவதூடாகவும் உள்ளூர் ஆராய்ச்சியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு பல முன்னெடுப்புகளை எடுத்தது.

**வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்கள் இருபுடை வர்த்தக கூட்டத் தொடர்களை ஏற்பாடு செய்தல், முதலீட்டாளர் மாநாடுகள், வர்த்தக வசதிப்படுத்தலை ஊக்குவித்தல், பிராந்திய கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிப் பொருட்களை நடத்துவதன் மூலம் கைத்தொழில் துறை அபிவிருத்திக்கு தொடர்ந்து உதவியது.** இதன்படி இலங்கை உணவு பதன்படுத்துவோர் அமைப்பு 'புறோ-பூட் / புறோ-பக் அன்ட் அக்றி-பிஸ் 2015' பானம் மற்றும் பொதியிடல் பொருட்காட்சியை ஏற்பாடு செய்து களத்தில் ஆகப்பிந்திய தொழில்நுட்ப அபிவிருத்திகளை ஊக்கப்படுத்தியது. பல எண்ணிக்கையான சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் மிகச் சிறிய நிறுவனங்கள் பொருட்காட்சியில் அவற்றின் உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதற்கு உதவி வழங்கப்பட்டதுடன், இது செழிப்பான பிராந்திய பங்கேற்பைக் காட்டியது. இத்துடன், இலங்கை உணவு பதன்படுத்துவோர் அமைப்பு இந் நிறுவனங்களுக்காக முக்கியமாக "உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்" தொடர்பாக முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அறிவைப் பகிரும் கூட்டத்தொடர்களை நடத்தியது. பரவலாக ஐக்கிய அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிருவாகத்துடன் இணைந்து செல்லும் விதத்தில் அனைத்து உணவு மற்றும் பானங்கள் தொடர்பான பிரச்சினைகளை கையாள்வதை ஒருமுகப்படுத்துவதற்கு "தேசிய உணவு அதிகாரசபையை" நிறுவுவதற்கு இவ்வமைப்பு முன்மொழிந்துள்ளது.

**இவ்வாண்டில் தனியார் துறை கைத்தொழில் வகைகளில் அநேகமானவற்றுக்கு கொடுகடனில் விரிவாக்கம் அவதானிக்கப்பட்டது.** 2015இல் தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடனில் 40 சதவீதத்துக்கும் கூடிய பெரும் பங்குக்கு கைத்தொழில் துறைக் கொடுகடன் வகைகூறியது. மேலும், கைத்தொழில் துறைக்கான கொடுகடன் வசதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. மொத்தக் கொடுகடனில் 18.6 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டடவாக்கத் துறைக்கு கொடுகடனின் பாரிய பங்கு வழங்கப்பட்டதுடன் புடவை மற்றும் ஆடைகள் துறைக்கு 3.8 சதவீதம் வழங்கப்பட்டது. எனினும், புடவை மற்றும் ஆடைத் துறைக்கான கடன் வழங்கல் ஏனைய துறைகளிலான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கொடுகடன் வழங்கப்பட்ட ஏனைய முக்கிய துறைகளில் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி (3.6 சதவீதம்) மற்றும் உணவு மற்றும் பானங்களை (2.5 சதவீதம்) உள்ளடக்குகின்றன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான தனியான நிலையம் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட அலகை வைத்திருப்பதற்கு அறிவுறுத்தல், விரைந்த பணிக்காக கடதாசி இல்லாத வேலையைக் குறைப்பதற்கான தேவைப்பாடு போன்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்குவதை அதிகரிப்பதற்கு வர்த்தக ஊக்கப்படுத்துவதற்கு அரசால் பொதுவான முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன.

**விருப்பமான திசையை நோக்கி கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு உதவுவதற்கான தேவையை இனங்கண்டதன் மூலம் பல்வேறு முன்மொழிவுகள் வரவுசெலவுத் திட்டம் 2016இல் வெளிப்படுத்தப்பட்டன.** வர்த்தக ரீதியில் பழம் மற்றும் மரக்கறிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உலர்ந்த மற்றும் தகரத்தில் அடைக்கும் பழங்கள் கைத்தொழிலுக்காக வங்கிகளிலிருந்து எடுக்கப்படும் கடன்கள் மீதான 50 சதவீதமான வட்டி உதவுதொகையை நீடிப்பதற்கு வரவுசெலவுத் திட்டம் முன்மொழிந்தது. மேலும், இக் கைத்தொழிலில் பயன்படுத்தும் பொறிக்கு இறக்குமதித் தீர்வைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. உள்ளூர் இனிப்புக் கைத்தொழிலுக்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் மரக்கறிக் கொழுப்பு மீது பிரயோகிக்கத்தக்க சிறப்புப் பண்டத் தீர்வையைக் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திகளின் உள்ளூர்த் தயாரிப்பை ஊக்குவிப்பதற்கு லக் சதோச லிமிட்டெட் ஊடாக திரும்பி வாங்கும் பொறிமுறையொன்று விதந்துரைக்கப்பட்டது.

அரச தனியார் பங்குடமைகளாக மருந்தாக்கல் வலயங்களை நிறுவுவதில் தனியார் துறை துணிந்துசெய்வதை ஊக்கமளித்தல், தயாரிக்கப்பட்ட தொடர்பான மருந்தாக்கப் பொருட்களின் அரச தேவைப்பாட்டைக் கொள்வனவு செய்வதற்கான திரும்பி வாங்குதல் போன்றவை உள்ளூர் மருந்தாக்கல் கைத்தொழிலை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளில் சிலவாகும். 2018 அளவில் கல்நார்த் தகடில்லாத இலங்கையை இயலச்செய்வதற்கு சூழல் சிநேகபூர்வமான கூரைப் பொருட்களை வழங்கும் நோக்குடன் 3 வருட காலப்பகுதிக்கான வருமான வரி மீது அரைவாசி வரி விடுமுறையை வழங்குவதன் மூலம் செங்களியிலான கூரைத் தகடுகளின் தயாரிப்பு ஊக்கப்படுத்தப்படும். வெளி மூலங்களிலிருந்து பணிகளைப் பெறுதல் மற்றும் தகவல், தொடர்பூட்டல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற தோற்றம் பெற்றுவரும் துறைகளாகவும் குறிப்பாக கூடிய ஏற்றுமதி உள்ளார்ந்த வளம் கொண்ட வர்த்தகரீதியில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய துறைகளை நோக்கி கொடுகடனை வழங்குவதில் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இது போலவே, உலக பெறுமதிச் சங்கிலிக்குள் நுழையும் உள்ளார்ந்த வளத்தைக் காட்டும் கைத்தொழில்கள் அல்லது இறக்குமதிப் பதிலீடுகளாக பொருளாதார நன்மைகளை உருவாக்கும் கைத்தொழில்கள் பலப்படுத்தப்படவேண்டும். எனவே, வங்கிகள் நுகர்வை விட முதலீட்டை அடிப்படையிலான கொடுகடனை நோக்கி அவற்றின் கடன் சொத்துப்பட்டியலை சாய்ந்துகொள்ள ஊக்கப்படுத்த வேண்டும்.

**பிராந்திய கைத்தொழில் மயமாக்கத்தை ஊக்குவிப்பதற்கு வரவுசெலவுத் திட்டம் 2016 வவுனியாவில் புதிய பொருளாதார வலயத்தை நிறுவுவதற்கும், கண்டியில் தகவல் மற்றும் கமத்தொழில் தொழில்நுட்ப வலயங்களுடன் அம்பாந்தோட்டை, றைகம, மகாஓயா மற்றும் திருகோணமலையில் கைத்தொழில் அபிவிருத்தி வலயங்களை நிறுவுவதற்கும் முன்மொழிந்துள்ளது.** கப்பல் கட்டுதல், கப்பல் உடைத்தல் மற்றும் கப்பல் திருத்த வேலைச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் அரச காணியை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. இத்துடன், தற்போதைய கைத்தொழில் பேட்டைகளிலுள்ள வசதிகள் புதுப்பிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட வேண்டியிருக்கையில் மீரிகம மற்றும் ஹொரணை மேல் மாகாண பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் நகரங்களாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மிரிகமவிலுள்ள கைத்தொழில் நகரம் பிரதானமாக ஏற்றுமதி சார்ந்த உணவு பதனிடலுக்கான சிறப்பு வலயமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன் ஹொரணையிலுள்ள கைத்தொழில் நகரம் இறக்குமதி பதிலீடு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இரண்டையும் வசதிப்படுத்துவதற்கு பிராந்தியத்தில் பரந்து கிடக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சிலவற்றை ஒருமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**நாட்டின் கட்டடவாக்கத் துறையை ஊக்குவிப்பதற்கு, நாட்டில் கட்டவாக்க வேலையைப் பாரமேற்கும் எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரரும் உள்ளூர் ஒப்பந்தங்களுடன் கூட்டு முயற்சி உடன்பாட்டில் நுழைய வேண்டுமென வரவுசெலவுத் திட்டம் 2016 முன்மொழிந்துள்ளது.** இத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட கடல் மண்ணை தூய்மையாக்குவதற்கான பொறி, பாரம் தூக்கிகள், கொங்கிறீட் கலக்கும் பொறிகள் என்பன மீதான வரிச் சலுகைகளூடாக குறைந்த விலைகளில் கட்டடப் பொருட்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்கு கட்டவாக்கக் கைத்தொழில் உத்தரவாதமளிக்கப்பட்ட நிதியத் தீர்வையை நீக்கல், கொடுப்பனவு உத்தரவாதமளிக்கப்பட்ட பாதுகாப்புச் சட்டத்தின் அறிமுகம் மற்றும் பல ஏனைய வழிமுறைகள் உள்ளடங்கலாக உள்ளூர் கட்டவாக்கக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு முன்மொழியப்பட்ட ஏனைய பல சலுகைகளாகும்.

**அரசின் முழுமையான வளர்ச்சி உபாயத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் நுண்பாக நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளின் விரிவாக்கத்தை ஊக்குவிப்பதற்கு பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.** இத்துறையால் முகம் கொடுக்கப்படும் நிதியியல் பிரச்சனைகளைக் குறைப்பதற்கு துணிகர மூலதன அணுகுமுறையூடாக மூலதன நிதியிடலை வழங்குவதற்கு "நிதியங்களின் நிதியம்" நிதியத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இந்நிதியம் வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம், ஊழிய நிதியம் போன்ற அரசுக்குச் சொந்தமான நிதியங்களையும் வெளிநாட்டு நிதியங்களையும் உள்ளடக்கியிருக்கும். இந் நிறுவனங்களுக்கு பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி 5 வருட காலப்பகுதிக்கு 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மொனராகல, புத்தளம், யாழ்ப்பாணம்/வன்னி மற்றும் அம்பாறையில் சிறிய கைத்தொழில் பூங்காக்கள் பாதுகாப்பு இடமாகக் கட்டப்படும். இச்செயற்பாடுகள் பிரயோகிக்கத்தக்க வரி வீதத்திலான 50 சதவீத குறைப்பு இலாபம் ஈட்டும் முதல் ஆண்டிலிருந்து 3 வருட காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும்.

## மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல்

**மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடுகள் 2014இன் 3.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** இவ்விரிவாக்கம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீத வளர்ச்சியுடன்

ஒப்பிடுகையில் இவ்வாண்டு மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட 6.0 சதவீத வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது. மின்வலு உருவாக்கத்தைப் பரிசீலனையில் கொள்கையில், நீர் மின்வலு உருவாக்கம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 39.4 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2015 முழுவதும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளால் உந்தப்பட்டு 2015இல் 35.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2014இன் 117.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறைந்த வீதத்திலாயினும் 2015இல் நிலக்கரியை அடிப்படையாகக்கொண்ட மின்வலு உருவாக்கமும் 38.8 சதவீதத்தால் விரிவடைந்திருக்கையில் எரிபொருள் எண்ணெய் அடிப்படையாகக்கொண்ட மின்வலு உருவாக்கம் 2014இன் 32.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 47.1 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்தது. எரிபொருள் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின்வலு உருவாக்கத்திலான வீழ்ச்சி நீர் மற்றும் வெப்ப மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். இதேவேளை, நீர் சேகரிப்பு, சுத்திகரித்தல் மற்றும் வழங்கல் செயற்பாடுகளிலான மொத்த பெறுமதி கூட்டல் 2014இன் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.3 சதவீதத்தால் விரிவடைந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பகிர்ந்தளிக்கப்பட்ட நீரின் அலகுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, கழிவுநீர் அகற்றல், கழிவுகளைச் சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் செயற்பாடுகள் 2014இன் 11.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 24.8 சதவீதத்தால் அதிகரித்தது.

### கட்டடவாக்கம்

**இரண்டாவது மிகப்பெரிய கைத்தொழில் பிரிவான கட்டடவாக்கச் செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 0.9 சதவீதத்தால் சுருங்கியது.** பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களிலான ஒப்பீட்டு ரீதியிலான மெதுவடைவு 2015இல் கட்டவாக்கச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவிலான பாதிப்புக் காரணியாக விளங்கியது. எனினும், சீமெந்தின் கிடைப்பனவு 2014இன் மந்தமான செயலாற்றத்திலிருந்து மீட்சியடைந்து சீமெந்து இறக்குமதிகளிலான சிறிய சுருக்கத்துக்கு மத்தியிலும் முக்கியமாக உள்ளூர் உற்பத்தியிலான வளர்ச்சியால் உந்தப்பட்டு 2015இல் 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத்துடன், கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2015இல் 9.7 சதவீதத்தால் சாதகமாக விரிவடைந்தது. மேலும், கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2014 திசெம்பர் இறுதியிலான 22.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015 திசெம்பர் இறுதியில் 36.1 சதவீதத்தால் குறிப்பிடத்தளவில் அதிகரித்தது. இதில் தனிப்பட்ட வீடமைப்பு நிர்மாணத்துக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் 35.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து தனியார் துறை கட்டடவாக்கச் செயற்பாடுகளில் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

### பணிகள்

**பொருளாதாரத்துக்கான முக்கிய பங்களிப்புக்காரணியான பணிகள் செயற்பாடுகள் 2014இன் 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் மொத்த பெறுமதி கூட்டல் நியதிகளில் 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 56.6 சதவீதத்துக்கு வகைகூறியது.** இவ்வளர்ச்சி, வீட்டுடமை மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகள் உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள், களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்தால் உதவப்பட்ட நிதியியல் பணியிலான ஆரோக்கியமான வளர்ச்சியால் நிலைநிறுத்தப்பட்டது. மேலும், பொது நிர்வாகப் பணிகளிலான விரிவாக்கம், ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள், காப்புறுதி, மனித நலச் செயற்பாடுகள், தொலைத் தொடர்பூட்டல், மற்றும் தகவல் தொழில்நுட்ப வழிமுறைத் தொகுப்புப் பணிகள் இவ்வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. எனினும், தொழில்சார் பணிகள், கல்வி, தங்குமதிடவசதி, உணவு மற்றும் குடிபானங்கள் பணிகள் மற்றும் அஞ்சல் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்லும் செயற்பாடுகள் 2014 உடன் ஒப்பிடுகையில் 2015இல் சுருக்கமடைந்து பணிகளாலான ஒட்டுமொத்த வளர்ச்சியை மெதுவடையச் செய்தன.

### மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகளிலான பெறுமதி கூட்டல் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இறக்குமதி அளவுச் சுட்டெண் 2014இன் 9.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 10.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து. வர்த்தகச் செயற்பாடுகளிலான அதிகரிப்பைப் பிரதிபலித்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 2014இன் 20.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 24.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அறிவித்தது. நுகர்வுப் பொருட்களுக்கான உயர் கேள்வி ஊர்திகள் இறக்குமதிகளிலான பெரும் அதிகரிப்பால் ஏற்பட்டது. மேலும், முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவுச் சுட்டெண் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் கொண்ட சிறு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் மீட்சியடைந்து 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப்

பதிவுசெய்தது. சுட்டெண்ணினுள், பொறிமுறை மற்றும் கருவி, கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவி உள்ளிட்ட அனைத்துத் துணை சுட்டெண்களும் இவ்வாண்டில் குறிப்பிடத்தளவில் வளர்ச்சியடைந்தன. எனினும், முக்கியமாக பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியிலான சுருக்கம் காரணமாக இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2014 உடன் ஒப்பிடுகையில் 2015இல் மெதுவடைந்தது. இதேவேளை, ஏற்றுமதிகள் அளவுச்சுட்டெண் 2014இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொத்த ஏற்றுமதிகளில் முக்கிய பங்களிப்புக்காரணியான கைத்தொழில் ஏற்றுமதிகள், கைத்தொழில் ஏற்றுமதிகள் சுட்டெண்ணின் பாரிய பங்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புடவை மற்றும் ஆடைகள் வகையிலான ஏற்றுமதியான சிறிய சுருக்கத்துக்கு மத்தியிலும், அளவு நியதிகளில் 8.4 சதவீதத்தால் அதன் வளர்ச்சியைத் தொடர்ந்தது. எனினும், தேயிலை, இறப்பர் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சி காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகள் சுட்டெண் இவ்வாண்டில் அளவு நியதிகளில் 7.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இதேவேளை, உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகள் வேளாண்மை உற்பத்தி மற்றும் தயாரிப்பு வெளியீட்டிலான அதிகரிப்பால் உதவப்பட்டது.

### போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து 2014இன் 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** தனியார்துறை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையால், தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்களின் மொத்த எண்ணிக்கை 2014இல் பதிவுசெய்யப்பட்ட 12.7 சதவீதம் மற்றும் 2.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 6.1 சதவீதத்தாலும் 19.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. மேலும், இலங்கைப் புகையிரதப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர் இவ்வாண்டில் 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கும் மேலாக, இவ்வாண்டில் சிறீலங்கன் எயர்லைன்ஸ் மற்றும் மிகின் லங்கா என்பவற்றால் இணைந்து பறக்கப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2014இன் 2.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீத சிறியளவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், இலங்கை துறைமுகங்களால் கையாளப்பட்ட கொள்கலன் போக்குவரத்து (இருபது அடிக்குச் சமமான அலகுகள்) மற்றும் சரக்கு 2014இல் அறிவிக்கப்பட்ட முறையே 14.0 சதவீதம் மற்றும் 12.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 5.7 சதவீதத்தாலும் 4.3 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. எனினும் இலங்கை புகையிரதப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட சரக்குத் தொன்கிலோமீற்றர்கள் 2015இல் 2.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இத்துடன், சிறிலங்கன் எயர்லைன்ஸ் மற்றும் மிகின் லங்கா என்பவற்றால் இணைந்து பறக்கப்பட்ட சரக்குத் தொன்கிலோமீற்றர்கள் இவ்வாண்டில் மேலும் சுருக்கமடைந்தன. இதேவேளை, அஞ்சல் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்லும் செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 7.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. அஞ்சல் திணைக்களத்தால் கையாளப்பட்ட உள்நாட்டுத் தபால்கள் மெதுவடைந்திருக்கையில் கையாளப்பட்ட உள்நாட்டுப் பொதிகள் சுருக்கமடைந்தன. எனினும், அஞ்சல் திணைக்களத்தால் கையாளப்பட்ட வெளிநாட்டுத் தபால்கள் இவ்வாண்டில் விரிவடைந்தன.

### தங்குமிடம் மற்றும் உணவுப் பணிச் செயற்பாடுகள்

**தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் 2014இன் 4.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 1.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தன.** இவ்வகையான மதிப்பிடப்பட்ட பெறுமதி, மதிப்பீடு செய்யப்படும் நேரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பெறுமதி கூட்டல் வரி தேசிய மட்டத்திலான தரவில் அசைவுகளைப் பிரதிபலித்தது. எனினும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சுகாதார சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலாவிடுதி நிறுவனங்களிலான அறையில் தங்கும் வீதம் 2014இன் 74.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 74.5 சதவீதத்துக்குச் சிறிதளவால் அதிகரித்தது. இவ்வாண்டில் சுற்றுலா வருகைகள் 2014இன் 19.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 17.8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. பிராந்தியங்களினுள், அநேகமான சுற்றுலா வருகைகள் மேற்கு ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களாகும். இதேவேளை, வதிவிட நாட்டைப் பரிசீலனையில் கொள்ளும்போது சுற்றுலா வருகைகளிலான குறிப்பிடத்தக்க வளர்ச்சி சீனாவிலிருந்து அவதானிக்கப்பட்டது. இது சுற்றுலா மூலத்தில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக வந்துள்ளது. தேசிய தாவரப் பூங்காக்கள், பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் தெகிவளையில் உள்ள தேசிய வனவிலங்குகள் பூங்காவுக்குச் சென்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வருகையாளர்கள் 2015இல் உயர் வீதத்தில் அதிகரித்தது. இவ்வாண்டில் சுற்றுலாப் பயணிகள் செயற்பாடுகளில் வளர்ச்சியைப் பிரதிபலித்தன. இதேவேளை சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2015இல் கணிசமானளவில் அதிகரித்து ஐ.அ.டொலர் 2,980.7 மில்லியனுக்கு 22.6 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவுசெய்தன.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**தகவல் மற்றும் தொடர்பூட்டல் செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் பெறுமதி கூட்டல் நியதிகளில் 12.5 சதவீதத்தால்**

**வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சி, 2014இல் பதிவுசெய்யப்பட்ட 13.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 10.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த இப்பிரிவினுள் முக்கிய துணைச் செயற்பாடான தொலைத்தொடர்பூட்டல் செயற்பாடுகளால் ஏற்பட்டது. தொலைத் தொடர்பூட்டல் செயற்பாடுகளிலான அபிவிருத்திகளைப் பரிசீலனை செய்கையில், கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர்களில் தொடர்ச்சியான அதிகரிப்பு காணப்பட்டிருக்கையில் நிலையான இணைப்புள்ள கம்பியல்லா இணைப்புகளில் சுருக்கமானது அவதானிக்கப்பட்டது. மேலும், செல்லிட அகலப்பட்டை தொடர்பூட்டல்கள் உள்ளடங்கலான இணையதள இணைப்புக்கள் விரிவடைந்தது. இது நாட்டில் தரவு தொடர்பூட்டல் பணிகளுக்கான பாரிய கேள்வியை பிரதிபலிக்கிறது. இதேவேளை, தகவல் தொழில்நுட்ப வழிமுறைத் தொகுப்பு மற்றும் தொடர்பான செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 21.1 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தன. மேலும், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள் மற்றும் கட்புல செவிப்புல உற்பத்திகளும் 2014இன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் உடைமை உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் உடைமை உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள் பெறுமதி கூட்டல் நியதிகளில் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 12.3 சதவீதத்தால் விரிவடைந்தன.** இத் தொடர்ச்சியான வளர்ச்சி 2014இன் 10.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 15.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த நிதியியல் பணிகளால் உந்தப்பட்டதாகும். வங்கிக் கைத்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2014இன் 13.7 சதவீதம் மற்றும் 16.0 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 21.1 சதவீதம் மற்றும் 30.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதேவேளை, வங்கிக் கைத்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புத்தளம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 12.4 சதவீதம் மற்றும் 22.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 15.3 சதவீதத்தாலும், 16.1 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இதன்படி, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புடன் கூட்டப்பட்ட கடன் தளம் 2014இன் 13.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 18.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது வியாபாரச் செயற்பாடுகளிலான விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. மேலும், வங்கித் தொழில்துறையின் வரிக்குப் பின்னரான இலாபங்கள் 2015இல் 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வரிக்குப் பின்னரான இலாபங்கள் 2.3 சதவீதத்தால் அதிகரித்தன. வீடுகளின் உடமை உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 6.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் பெறுமதிக் கூட்டல் நியதிகளில் 9.6 சதவீதத்தால் விரிவடைந்தன. மேலும், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடும் செயற்பாடுகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. காப்புறுதிக் கைத்தொழிலால் உழைக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் கோரல்கள் 2014இன் 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 16.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து காப்புறுதி வியாபாரச் செயற்பாடுகளில் அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

### தொழில்சார் பணிகள் மற்றம் ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்

**தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகளிலான பெறுமதிக் கூட்டல் 2014இல் பதிவு செய்யப்பட்ட 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 1.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி ஆக்கபூர்வமான கலைகள் மற்றும் களியாட்டம், புகைப்படமெடுத்தல், சிகையலங்காரம் மற்றும் ஏனைய அழகுச் சிகிச்சை, உடை கழுவுதல் மற்றும் கறையகற்றல் செயற்பாடுகளை உள்ளடக்கும் இப்பிரிவினுள் வரும் மிகப்பெரிய துணைச் செயற்பாடான ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகளிலான விரிவாக்கத்தால் நிலைநிறுத்தப்பட்டது. இவை அனைத்தும் சேர்ந்து 2014இல் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் மெதுவான வீதத்தில் 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. எனினும், தொழில்சார், விஞ்ஞான, தொழில்நுட்ப, நிருவாக மற்றும் ஆதரவளிக்கும் பணிச் செயற்பாடுகள் 2014இன் 2.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 7.1 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. உயர் பெறுமதி கூட்டலுக்கான உள்ளார்ந்த வளத்துடன் கட்டடக்கலை மற்றும் பொறியியற் செயற்பாடுகள், தொழில்நுட்ப பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு, சட்ட மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் விளம்பரம் மற்றும் சந்தை ஆராய்ச்சி போன்ற பணிகளிலான பெறுமதி கூட்டல் அபிவிருத்திகளை தொழில்சார் பணிகள் பிடித்துக்கொண்டன.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள்

**பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் 2014இன் 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் பெறுமதி கூட்டப்பட்ட**

**நியதிகளில் 3.2 சதவீதத்தால் விரிவடைந்தன.** இவ்வளர்ச்சி முக்கியமாக 2015இல் பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பதுகாப்புச் செயற்பாடுகளிலான 6.9 சதவீத வளர்ச்சியால் ஏற்பட்டது. இது 2014இல் 5.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், மனித நலச் செயற்பாடுகள், வசதிவிடக் கவனிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகளும் 2014இன் 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. எனினும், கல்விப் பணிகளிலான மொத்த பெறுமதி கூட்டல் 2014இல் பதிவு செய்யப்பட்ட 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 7.5 சதவீதத்தால் சுருங்கி பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மெதுவடையச் செய்தது.

## 2.5 செலவினம்

**உள்நாட்டு நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்திலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2015இல் ரூ.12,013.7 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.** 2014இன் 8.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் மொத்த உள்நாட்டுச் செலவினத்திலான 6.5 சதவீத வளர்ச்சி முக்கியமாக நுகர்வுச் செலவினத்திலான விரிவாக்கத்தால் ஏற்பட்டிருக்கையில் முதலீட்டுச் செலவினம் சிறதளவு வீதத்தால் வளர்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில் நுகர்வுச் செலவினத்தால் உந்தப்பட்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் 2014இன் 6.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 6.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, தேறிய வெளிநாட்டுக் கேள்வி இறக்குமதிகளின் ரூபாய் பெறுமதியிலான 3.5 சதவீத வளர்ச்சி மற்றும் ஏற்றுமதிகளின் ரூபாய் பெறுமதியிலான 5.1 சதவீத வளர்ச்சியின் இணைந்த விளைவால் 2014இன் 1.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் பெயரளவு நியதிகளில் 0.7 சதவீதத்தால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது. இது சம்பந்தமாக, குறிப்பாக எண்ணெய் உள்ளிட்ட உலகப் பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சி ஏற்றுமதி விலைகளை விட உயர் வீதத்தில் இறக்குமதி விலைகளைச் குறைத்தது. தேறிய ஏற்றுமதிப் பணிகளும் பெயரளவு நியதிகளில் மேம்பாடடைந்து தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் பதியப்பட்ட வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. எனினும், ஏற்றுமதிகளின் கேள்வியிலான மெதுவடைவுடன் சேர்ந்து குறைந்த பண்டவிலைகள் மற்றும் குடும்ப அலகுகளின் செலவளிக்கத்தக்க வருமானத்திலான அதிகரிப்பு காரணமாக இறக்குமதிகளுக்கான உயர் கேள்வி உண்மை நியதிகளில் தேறிய ஏற்றுமதிகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. வெளிநாட்டுக் கேள்வியிலான இப்போக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதி அளவுகள் ஏற்றுமதி அளவுகளை விட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தன. இறக்குமதிப் பெறுமதிகள் அது போல் அளவுகளிலான வளர்ச்சி பெரும்பாலும் நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்களின் நுகர்வால் உந்தப்பட்டிருக்கையில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் அளவில் மெதுவடைந்து பெறுமதி நியதிகளில் சுருக்கத்தைப் பதிவுசெய்தது. ஏற்றுமதிப் பெறுமதிகள் மற்றும் அளவுகளைப் பரிசீலிக்கையில் 2015இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மேம்பட்ட வேளையில், வேளாண்மை மற்றும் கனிப்பொருட்களின் ஏற்றுமதி சுருக்கமடைந்தது. இதன்படி, தேறிய வெளிநாட்டுச் கேள்விக்கு சீராக்கம் செய்யப்பட்ட

**அட்டவணை 2.10**

**மொத்த கேள்வி (அ)**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 (ஆ) | 2015 (ஆ) | 2013 | 2014 (ஆ) | 2015 (ஆ) |
| அ. உள்நாட்டுக் கேள்வி | | | | | | |
| நுகர்வு | 7,229,352 | 7,943,796 | 8,652,180 | 5,881,197 | 6,216,685 | 6,645,913 |
| (% மாற்றம்) | 13.7 | 9.9 | 8.9 | 7.0 | 5.7 | 6.9 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3,189,326 | 3,341,174 | 3,361,546 | 2,597,115 | 2,782,904 | 2,920,219 |
| (% மாற்றம்) | -6.5 | 4.8 | 0.6 | -8.8 | 7.2 | 4.9 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **10,418,678** | **11,284,971** | **12,013,727** | **8,478,312** | **8,999,589** | **9,566,132** |
| **(% மாற்றம்)** | **6.7** | **8.3** | **6.5** | **1.6** | **6.1** | **6.3** |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,949,158 | 2,185,039 | 2,295,423 | 1,470,967 | 1,533,668 | 1,605,147 |
| (% மாற்றம்) | 12.6 | 12.1 | 5.1 | 6.6 | 4.3 | 4.7 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 2,775,711 | 3,021,530 | 3,125,930 | 2,103,077 | 2,304,271 | 2,548,455 |
| (% மாற்றம்) | 0.3 | 8.9 | 3.5 | -1.5 | 9.6 | 10.6 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-826,553** | **-836,492** | **-830,507** | **-632,110** | **-770,603** | **-943,307** |
| **(% மாற்றம்)** | **20.2** | **-1.2** | **0.7** | **16.4** | **-21.9** | **-22.4** |
| **இ. மொத்த கேள்வி** | **9,592,125** | **10,448,479** | **11,183,220** | **7,846,202** | **8,228,986** | **8,622,825** |
| **(% மாற்றம்)** | **9.8** | **8.9** | **7.0** | **3.4** | **4.9** | **4.8** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மொத்த உள்நாட்டுச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலைகளில் ரூ.11,183.2 பில்லியனுக்கு 7.0 சதவீதத்தால் அதிகரித்ததுடன், இது 2015இல் 4.8 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியையும் 2.1 சதவீதம் கொண்ட மொ.உ.உற்பத்தி உள்ளார்ந்த சுருக்கியையும் உள்ளடக்கியுள்ளது.

## நுகர்வு

**பொருளாதாரத்தின் முக்கிய செலவினக் கூறான நுகர்வுச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.8,652.2 பில்லியனுக்கு 8.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி முக்கியமாக மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88.6 சதவீதத்துக்கு வகைகூறும் தனியார் நுகர்வுச் செலவினத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டதாகும். இதன்படி, தனியார் நுகர்வுச் செலவினம் 2014இல் பதிவு செய்யப்பட்ட 9.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. செலவழிக்கத்தக்க வருமானத்திலான அதிகரிப்பு, உலக பண்ட விலைகளிலான வீழ்ச்சி மற்றும் சில வரி மாற்றங்கள் நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியை ஊக்கப்படுத்தியது. நுகர்வுக் கேள்வியிலான வளர்ச்சி குறிப்பாக ஊர்திகள் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் சாதனங்கள் போன்ற பொருட்கள் உள்ளிட்ட நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிச் சுட்டெண்ணிலான அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. இதேவேளை, அரசின் நுகர்வுச் செலவினம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 16.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 13.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி, கல்வி மற்றும் நலம் போன்ற அரசின் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்திலான வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கையில் பொது அரச பணிகள் மீதான இணைந்த இறுதி நுகர்வுச் செலனமும் மேம்பாடடைந்தது.

**தனியார் நுகர்வுச் செலவினத்துக்கான முக்கிய பங்களிப்புக் காரணியான உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் வகை 2014இல் பதிவு செய்யப்பட்ட 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 13.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** செலவினத்திலான அதிகரிப்பும் 2014இன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2006/07=100) உணவுப் பணவீக்கத்தின் 4.9 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, மேற்கூறிய வகையின் குடும்ப அலகு இறுதி நுகர்வுச் செலவினத்தின் பங்கு 2014இன் 25.6 சதவீதத்திலிருந்து 2015இல் தனியார் நுகர்வுச் செலவினத்தின் 26.8 சதவீதத்துக்கு அதிகரித்தது.

**இதேவேளை, வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப் பொருள்கள் மற்றும் உடை மற்றும் பாதணி மீதான குடும்ப அலகின் இறுதி நுகர்வு பங்கு தாழ்ந்த மட்டங்களிலேயே தொடர்ந்தும் விளங்கியது.** வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப் பொருள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2014இன் 8.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. உடை மற்றும், பாதணி மீதான குடும்ப அலகின் செலவினம் 2014இல் பதிவு செய்யப்பட்ட 1.7 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2015இல் 5.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது, 2015இல் நாட்டுக்கான ஆடை மற்றும் துணைப் பொருட்களின் இறக்குமதியிலான கணிசமான வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது.

**அட்டவணை 2.11** நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 (ஆ) | 2015 (ஆ) | 14/13 (ஆ) | 15/14 (ஆ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 26.3 | 25.6 | 26.8 | 6.2 | 13.6 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 1.9 | 1.9 | 1.9 | 8.7 | 10.3 |
| 3. புடவையும், காலணியும் | 4.3 | 3.9 | 3.8 | -1.7 | 5.7 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.6 | 10.6 | 10.9 | 9.0 | 11.5 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.3 | 1.3 | 1.2 | 10.2 | 0.9 |
| 6. நலம் | 2.8 | 2.6 | 2.9 | 1.3 | 22.1 |
| 7. போக்குவரத்து | 20.9 | 21.9 | 22.3 | 14.5 | 10.3 |
| 8. தொடர்பூட்டல் | 0.9 | 0.9 | 1.0 | 6.6 | 17.9 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 1.1 | 1.3 | 1.4 | 22.2 | 15.7 |
| 10. கல்வி | 1.6 | 1.7 | 1.6 | 17.2 | -0.3 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.4 | 4.3 | 4.0 | 7.3 | -1.1 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 24.8 | 26.1 | 24.9 | 14.6 | 3.6 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.5 | 2.5 | 2.7 | 7.3 | 16.5 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 3.5 | 4.5 | 5.3 | 42.7 | 27.4 |
| **மொத்த தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **9.1** | **8.4** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**தனியார் நுகர்வுச் செலவினத்தின் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகை 2014இல் பதிவு செய்யப்பட்ட 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015 இல் 11.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** 2014 செத்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட மின்வலுவின் தீர்வைத் திருத்தம் குறைந்த பயன்பாடு வகையிலுள்ள நுகர்வோரை நன்மையடையச் செய்தது. இது 2015 முழுவதும் மின்வலு பாவனையின் அலகொன்றுக்கான அவர்களின் நுகர்வுச் செலவினத்தைக் குறைத்தது. 2015இல் 9.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த உள்நாட்டுத் துறைக்கான மின்வலு விற்பனைகள், மின்வலுவைப் பெறும் வசதி மற்றும் குடும்ப அலகுகளின் பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளின் அதிகரிப்புடன் நாட்டில் மின்வலு நுகர்வை விரிவாக்கியதை எடுத்துக் காட்டுகிறது. மேலும், 2014 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட நீர் வரிக்கட்டணத்தின் கீழ்நோக்கிய மீளாய்வின் நன்மை 2015இற்கு கடத்தப்பட்ட வேளையில் ஆண்டுகாலத்தில் நீரின் நுகர்வு மேலும் அதிகரிக்கப்பட்டது. இதேவேளை, டீசல், பெற்றோல் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவிலான நிருவாக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட விலைகளிலான காலாந்தரமான கீழ்நோக்கிய திருத்தங்கள் நுகர்வுச் செலவைக் குறைத்த வேளையில் அத்தகைய செலவின வகைகளுக்கான கேள்விக்கு ஊக்கமளித்தது.

**போக்குவரத்துச் செயற்பாடுகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2014இன் 14.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மெதுவடைவைப் பதிவு செய்தது.** 2015 பெப்புருவரியில் பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்கள் சராசரியாக 8.2 சதவீதத்தால் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமை தனியார் நுகர்வுச் செலவினத்தைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தது. மேலும், எரிபொருள் விலைகளிலான குறைப்பும் போக்குவரத்துச் செலவைக் குறைக்க உதவியது. எனினும் இவ்வாண்டில் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளின் பதிவு 2015இன் பிற்பகுதியில் மெதுவடைவைக் காட்டிய போதிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது.

**நலச் செயற்பாடுகள் மீதான குடும்ப அலகுச் செலவினம் 22.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் கல்வி மீதான அச்செலவினம் 2015இல் 0.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** மேற்கூறிய வகைகளின் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு கல்வி மற்றும் நலப் பணிகளை வழங்குவதில் அரச செலவினத்திலான விரிவாக்கத்தால் பெரும்பாலும் ஏற்பட்டது. இதில் கட்டணமின்றியோ அல்லது குறைந்த வீதத்திலேயோ நலம் மற்றும் கல்விப் பணிகளை வழங்குவதில் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினமாக அரசு ஆண்டுதோறும் அதன் இறுதி நுகர்வில் கிட்டத்தட்ட 30 சதவீதத்தைச் செலவழிப்பதால் அவ்வகைகள் மீதான குடும்ப அலகு நுகர்வுச் செலவினத்தைக் குறைக்கிறது. உற்பத்தி அணுகுமுறை மதிப்பீடுகளும் அரசின் பாரிய பங்கைப் பிரதிபலித்தது. கல்வி மற்றும் நலச் செயற்பாடுகளிலான மொத்த பெறுமதி கூட்டல் பெரும்பாலும் அரச துறையால் உந்தப்பட்டது.

**தொடர்பூட்டல் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2014இன் 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 17.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து அதன் உத்வேகத்தைத் தொடர்ந்தது.** இது, நாட்டில் தொலைபேசி மற்றும் இணைய இணைப்புக்களிலான தொடர்ச்சியான வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டவாறு தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் பாவனையிலான அதிகரிப்பால் உதவப்பட்டது. 2014 ஓகத்திலிருந்து அஞ்சல் கட்டணங்களிலான மேல்நோக்கிய திருத்தம் அஞ்சல் பணிகளின் குடும்ப அலகுப் பயன்படுத்துனரின் தனியார் நுகர்வுச் செலவினத்தை அதிகரித்தது. தொலைத் தொடர்பூட்டல் சாதனங்களின் இறக்குமதி ரூபா பெறுமதிச் சுட்டெண்ணில் 67.2 சதவீத வளர்ச்சியானது, நாட்டில் தொலைத் தொடர்பூட்டல் கருவிக்கான அதிகரித்த கேள்வியை எடுத்துக் காட்டுகிறது.

**பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் மீதான வீட்டலகு நுகர்வுச் செலவினமும் 2014இன் 22.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 15.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** செலவழிக்கத்தக்க வருமான மட்டங்களிலான அதிகரிப்பு, போக்குவரத்து வலையமைப்பு மற்றும் வீதி உட்கட்டமைப்பு என்பவற்றின் அபிவிருத்திகள், சமாதானச் சூழலுடன் சேர்ந்து தாங்கக்கூடிய எரிபொருள் விலைகளுடன் இணைந்து தனியார் ஊர்திகளின் பயன்பாடு உள்நாட்டு நகர்வுக்கு பெருமளவு உதவியதுடன் பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரச் செயற்பாடுகளுக்கான கேள்விக்கு உகந்ததாக இருந்தது.


**அரச நுகர்வுச் செலவினம் முழு சமுதாயத்தினது நன்மைக்காக பொது அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்ட செலவினமான அரசின் இணைந்த இறுதி நுகர்வுச் செலவினத்தையும் தனிப்பட்ட வீட்டலகுகளின் நன்மைக்காக பொது அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்ட தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் உள்ளடக்கியுள்ளது.** அரசின் இணைந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2015இல் மொத்த அரச நுகர்வுச் செலவினத்தின் 67.6 சதவீதத்துக்கு வகைகூறி பொது அரச பணிகள், பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு, பொருளாதார விடயங்கள், சூழல் பாதுகாப்பு, வீடமைப்பு மற்றும் சமுதாய பொது வசதிகள், பொழுதுபோக்கு, கலாச்சாரம் மற்றும் சமயம் மற்றும் சமூக பாதுகாப்பு மீதான செலவினத்தை உள்ளடக்குகிறது. 2015இல், அரசின் இணைந்த இறுதி நுகர்வு 2014இல் பதிவு செய்யப்பட்ட 17.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் 9.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் சம்பளங்கள்

மற்றும் கூலிகள் மீதான அரச நுகர்வுச் செலவினத்தை உள்ளடக்குவதுடன் பொது அரச பணிகள் மீதான இறக்குமதி நுகர்வுச் செலவினத்திலான 33.6 சதவீத வளர்ச்சியாலும் 2015இல் சமூகப் பாதுகாப்பு மீதான செலவினத்திலான 15.4 சதவீத வளர்ச்சியாலும் ஏற்பட்டது. எனினும் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய அரச செலவின வகைகள் மீதான செலவினம் 2015இல் மிதமடைந்திருக்கையில் பொருளாதார விடயங்கள் மற்றும் பொழுதுபோக்கு, கலாச்சாரம் மற்றும் சமயம் மீதான செலவினம் சுருக்கமடைந்தது. அதேவேளை நலம் மற்றும் கல்விச் செலவினத்தின் மொத்த தொகையான அரசின் தனிப்பட்ட இறுதி நுகர்வு 2014இல் அவதானிக்கப்பட்ட 15.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 22.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது 2015இல் அரசின் நுகர்வுச் செலவினத்தின் 32.4 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது பெரும்பாலும் கல்வி மீதான அரசின் இறுதிச் செலவினத்தால் பங்களிப்பு செய்யப்பட்டது. இதன்படி, கல்வி மற்றும் நலம் மீதான அரசின் இறுதி நுகர்வுச் செலவினம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 12.5 சதவீதம் மற்றும் 18.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 28.4 சதவீதத்தாலும் 16.1 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது.

## முதலீடு

**தனியார் மற்றும் அரச முதலீடுகளை உள்ளடக்கும் முதலீட்டுச் செலவினம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் பெயரளவு நியதிகளில் 0.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** பொறி மற்றும் கருவி மற்றும் ஆயுத முறைமைகள் மீதான செலவினம் 2014இன் 4.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில்

**வரைபடம் 2.7** முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ. மில்லியன்)




(அ) கடன்கள் உள்ளடங்கலாக

2015இல் 6.8 சதவீதத்தால் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி பொறி மற்றும் கருவி இறக்குமதிகளின் ரூபா பெறுமதிச் சுட்டெண்ணிலான மீட்சியால் பிரதிபலிக்கப்பட்டது. இதேவேளை, கட்டடவாக்கச் செலவினம் 2014இல் பதிவு செய்யப்பட்ட 7.3 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கட்டடவாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதி 2014இல் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து நேர்க்கணியமாக திரும்பியது. கட்டவாக்கச் செயற்பாடுகளின் நோக்கத்துக்காக வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனிலான குறிப்பிடத்தக்க வளர்ச்சியால் தனியார் கட்டடவாக்கச் செயற்பாடுகளின் ஈடுபாடு பிரதிபலிக்கப்பட்டுள்ளது. எனினும் அரச முதலீட்டை மீள்மதிப்பீடு செய்தமை 2015இல் கட்டடவாக்கச் செயற்பாடுகளை உந்தச் செய்ததுடன் கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. மேலும், போக்குவரத்துக் கருவி மீதான முதலீடு 2014இன் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்

**அட்டவணை 2.12** இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 (அ) | 2015 (ஆ) | 2014 (அ) | | | 2015 (ஆ) | | | 2014 (அ) | 2015 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 214 | 233 | 229,235 | 172,544 | 401,780 | 186,252 | 243,054 | 429,305 | 34,216 | 34,275 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 187 | 217 | 217,041 | 172,207 | 389,247 | 184,409 | 241,688 | 426,096 | 30,938 | 33,502 |
| பிரிவு 16இன் கீழ் | 27 | 16 | 12,195 | 338 | 12,533 | 1,843 | 1,366 | 3,209 | 3,278 | 773 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 152 | 150 | 98,942 | 164,627 | 263,569 | 147,510 | 135,122 | 282,632 | 25,476 | 22,516 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,951 | | 1,133,006 | 622,696 | 1,755,702 | 1,236,251 | 755,557 | 1,991,808 | 484,675 | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,748 | 2,823 | 425,027 | 4,127,910 | 4,552,937 | 452,541 | 4,150,540 | 4,603,081 | 412,658 | 421,967 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 2,030 | 2,097 | 402,038 | 4,117,317 | 4,519,356 | 417,950 | 4,139,766 | 4,557,716 | 375,735 | 384,809 |
| பிரிவு 16இன் கீழ் | 718 | 726 | 22,989 | 10,593 | 33,582 | 34,591 | 10,774 | 45,365 | 36,923 | 37,158 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 2,192 | 2,276 | - | - | 203,764 | - | - | 204,522 | 306,781 | 311,698 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்க மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

2015இல் 1.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள முதலீட்டு வகைகளான தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பக் கருவி, தூய்மையாக்கப்பட்ட உயிரியல் வளங்கள் மற்றும் புலமைச் சொத்து உற்பத்திகள் 2015இல் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. எனினும், பெறுமதிகளின் விற்பனவுகளைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களிலான மாற்றங்களின் சுருக்கம் 2015இல் முதலீட்டு வளர்ச்சியை ஊக்கமிழக்கச் செய்தது.


**கடன்கள் உள்ளிட்ட முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 1,528.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 969.7 மில்லியனாக விளங்கி 36.6 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.** இக்காலப்பகுதியில் முதலீட்டுப் பாய்ச்சலிலான சுருக்கத்துக்கான முக்கிய காரணம் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் பணிகளுக்கான உட்பாய்ச்சல்கள் முறையே 33.6 சதவீதத்தாலும் 49.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தமையாகும். தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்களும் 23.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பெரும்பாலானவை மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சலில் 46.8 சதவீதத்தை (ஐ.அ.டொலர் 453.4 மில்லியன்) பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமாக வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி தொடர்பான உட்கட்டமைப்பு சார்ந்த செயற்றிட்டங்கள் கணக்கிலானவையாகும். பணிகள் துறையிலான வெளிநாட்டு நேரடி முதலீடு மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் 26.3 சதவீதமாக (ஐ.அ.டொலர் 255.4 மில்லியன்) விளங்குகையில் தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு ஐ.அ.டொலர் 257.0 மில்லியனாக விளங்கி 2015இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டின் 26.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17இன் கீழ் 2015இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடுகள் ரூ.429.3 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.** பணிகள் மற்றும் அணியும் ஆடைகள் மற்றும் தோல் துறைகளிலான செயற்றிட்ட ஒப்புதல்களின் முதலீட்டுப் பெறுமதி சிறிதளவில் வீழ்ச்சியடைந்திருக்கையில் உலோகமல்லா கனிப்பொருள்கள் துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடு 2014 உடன் ஒப்பிடுகையில் கணிசமானளவில் குறைவடைந்தது. எனினும், உணவு, பானங்கள் மற்றும் புகையிலை மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகத் துறைகளில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் மதிப்பிடப்பட்ட முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர் முதலீட்டுப் பெறுமதியைப் பதிவுசெய்தது. பிரிவு 17இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூ.282.6 பில்லியனாக விளங்கியதுடன் இது 2014 உடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீத அதிகரிப்பாகும். முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 17இன் கீழ் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடுகள் 2015 இறுதியில் ரூ.4,603.1 பில்லியனாக விளங்கின. 2015 இறுதியில் முதலீட்டுச் சபையின் திரண்ட பெறப்பட்ட முதலீடு ரூ.1,991.8 பில்லியனாக விளங்கியது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களின் அளவு பெயரளவு நியதிகளில் 2015இல் ரூ.14,309.1 பில்லியனுக்கு தொடர்ந்து விரிவடைந்து 2014இன் 8.9 சதவீத வளர்ச்சியுடன் மெதுவான வீதத்திலாயினும் 6.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** 2015இன் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவடைவு 2014 உடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் மொ.உ.உற்பத்தி மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் இரண்டிலுமான மெதுவான வளர்ச்சியின் இணைந்த வெளிப்பாடாகும். உள்நாட்டு மூலவளங்களிலான வளர்ச்சி வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள்

வரைபடம் 2.8 — 2015 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)




(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

2

தேசிய உற்பத்தி, செலவினம் மற்றும் வருமானம்

**அட்டவணை 2.13**

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ) (ஆ)**

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 77.6 | 78.2 | 8.9 | 7.0 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 22.4 | 21.8 | 8.9 | 3.5 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **8.9** | **6.2** |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 59.0 | 60.5 | 9.9 | 8.9 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 20.9 | 20.5 | 0.0 | 4.3 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 4.0 | 3.0 | 40.3 | -18.8 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.2 | 16.0 | 12.1 | 5.1 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **8.9** | **6.2** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

செயற்பாடுகளிலிருந்தான சாதகமான பங்களிப்பாய் உந்தப்பட்டது. பெயரளவு நியதிகளிலான இறக்குமதிகள் மீதான செலவினத்தின் மெதுவடைவு பெற்றோலிய உற்பத்தி மீதான செலவினம் உள்ளிட்ட உலகப் பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பெருமளவில் ஏற்பட்டது. இது பெயரளவு நியதிகளில் உள்நாட்டு மூலவளங்களின் பங்களிப்பில் 2014இன் 77.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் நீடித்த கேள்வியின் 78.2 சதவீதத்துக்கான அதிகரிப்பை விளைவித்தது. உண்மை நியதிகளில், மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு 2014இன் 5.9 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதமான ஓர் வீதத்தில் அதிகரித்தது. இவ்வளர்ச்சி நிலையான விலைகளிலான மொ.உ.உற்பத்தியிலான அதிகரிப்பாலும் உண்மை நியதிகளில் வெளிநாட்டு மூலவளங்களிலான வளர்ச்சியாலும் ஏற்பட்டது.

**கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் பொருளாதாரத்தின் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டது.** நுகர்வு நோக்கங்களுக்கான மூலவளங்களின் பயன்பாடு 2015இல் பெயரளவு நியதிகளில் 60.5 சதவீதத்துக்கு வகை கூறியதுடன் இது 2014இல் பதிவு செய்யப்பட்ட 59.0 சதவீத பங்கை விட சிறிதளவு கூடியதாகும். இதேவேளை, முதலீட்டு நோக்கங்களுக்கான மூலவளங்களின் பயன்பாடு 2014இன் 24.8 சதவீத பங்கை விட சிறிதளவால் குறைவடைந்து 2015இல் 23.5 சதவீதமாக விளங்கியது. இது திரண்ட உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கத்தின் தொடர்பான பங்குகளிலான வீழ்ச்சியினதும் 2015இல் பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றத்தினதும் இணைந்த விளைவாகும். இதேவேளை, மூலவளங்களின் மொத்த பயன்பாட்டின் சதவீதமாக ஏற்றுமதிகள் 2014இன் 16.2 சதவீதப் பங்கிலிருந்து 2015இல் 16.0 சதவீதப் பங்குக்கு வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் உலகக் கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவால் ஏற்பட்டதாகும்.

## சேமிப்புக்கள்

**பொருளாதாரத்தின் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2015இல் ரூ.2,531.0 பில்லியனுக்கு அதிகரித்து 2014இல் 6.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உள்நாட்டு சேமிப்பு வளர்ச்சியிலான மெதுவடைவானது அரசின் அரசிறையிலான ஒப்பீட்டளவிலான குறைவான வளர்ச்சிக்கு எதிராக அரச மீண்டெழும் செலவினத்திலான கணிசமான வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டவாறு விரிவடைந்து செல்லும் அரசின் குறைச் சேமிப்பின் விரிவாக்கம் மற்றும் தனியார் சேமிப்புக்களின் மெதுவடைவு என்பவற்றின் இணைந்த விளைவாகும். அரசின் மீண்டெழும் செலவினத்திலான வளர்ச்சி பெரும்பாலும் அரசின் பிரதான மீண்டெழும் செலவின் வகையான

**அட்டவணை 2.14**

**நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள் (அ) (ஆ)**

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 10,448,479 | 11,183,220 | 8.9 | 7.0 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 7,943,796 | 8,652,180 | 9.9 | 8.9 | 76.0 | 77.4 |
| தனியார் | 7,074,658 | 7,666,365 | 9.1 | 8.4 | 67.7 | 68.6 |
| அரசு | 869,138 | 985,815 | 16.6 | 13.4 | 8.3 | 8.8 |
| 3. முதலீடு | 3,341,174 | 3,361,546 | 4.8 | 0.6 | 32.0 | 30.1 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 2,504,682 | 2,531,040 | 6.0 | 1.1 | 24.0 | 22.6 |
| தனியார் | 2,632,374 | 2,777,819 | 8.3 | 5.5 | 25.2 | 24.8 |
| அரசு | -127,692 | -246,779 | -88.5 | -93.3 | -1.2 | -2.2 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -836,492 | -830,507 | -1.2 | 0.7 | -8.0 | -7.4 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -236,669 (இ) | -251,288 (இ) | -4.7 | -6.2 | -2.3 | -2.2 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 813,128 | 833,498 (இ) | 11.6 | 2.5 | 7.8 | 7.5 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,081,142 | 3,113,250 | 7.5 | 1.0 | 29.5 | 27.8 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சம்பளங்கள் மற்றும் கூலிகளிலான கணிசமான அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2014இன் 24.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 22.6 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

**பொருளாதாரத்தின் தேசிய சேமிப்புக்கள் இவ்வாண்டில் ரூ.3,113.2 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இது 2014இன் 7.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.0 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது.** உள்நாட்டுச் சேமிப்புக்களிலான மெதுவடைவை விட உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களிலான மெதுவடைவு மற்றும் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்திலான சுருக்கம் என்பன தேசிய சேமிப்புக்களை மோசமாகப் பாதித்தன. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2014இன் 29.5 சதவீதத்திலிருந்து 27.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், முதலீட்டுச் செலவினத்தின் குறிப்படத்தக்க விளைவு காரணமாக தேசிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி 2014இல் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

## 2.6 வருமானம்

**குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருளாதாரத்தினுள் வருமானத்தை பிரிக்கப்பட்ட கூறுகள் உருவாக்கியதை வருமான அணுகுமுறை மதிப்பீடுகளிலான தேசிய கணக்குகள் காட்டின.** மொத்தப் பெறுமதி கூட்டலிலான வருமானத்தின் கூறுகளாக ஊழியர்களின் நட்டஈடு, மொத்தத் தொழிற்படு மிகை மற்றும் உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த ஏனைய வரிகள் என்பன விளங்கின. இக்கூறுகள் பொருளாதாரத்தில் வருமானத்தை உருவாக்கிய நிறுவன ரீதியிலான துறைகளுக்குள் மேலும் வகைப்படுத்தப்படலாம். ஊழியர்களின் நட்டஈடு உற்பத்திச் செயல்முறைக்கு அவர்களின் தொழில் உள்ளீட்டுக்கான இலாபத்தை தனிப்பட்ட நபர்களுக்கு செலுத்த வேண்டிய வருமானத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மொத்தத் தொழிற்படு மிகை தொழில் தவிர்ந்த தேறிய தொழிற்பாட்டு மிகை, கலப்பு வருமானம் மற்றும் நிலையான மூலதனத்தின் நுகர்வு ஆகிய உற்பத்திக் காரணிகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானமாகும். தேறிய தொழிற்பாட்டு மிகை நிலையான மூலதனத்தின் நுகர்வு மற்றும் கலப்பு வருமானம் நீங்கலான மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் கலப்பு வருமானம் என்பதுடன், நிலையான மூலதனத்தின் நுகர்வு இக்காலப் பகுதியில் உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட நிலையான மூலதனத்தின் பெறுமதியிலான வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. கலப்பு வருமானம் என்பது உற்பத்திச் செயல்முறைக்காக குடும்ப அலகுத் தொழிலைப் பயன்படுத்துவதன் மூலம் வீட்டலகுத் துறையால் உருவாக்கப்பட்ட வருமானமாகும். எனவே, கலப்பு வருமானம் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குடும்ப அலகுத் துறைக்காக மட்டும் உருவாக்கப்பட்டது. வருமானத்தில் நிறுவனத் துறைவாரியான பங்களிப்பைப் பரிசீலிக்கையில் குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்கள் ஆகக்கூடிய பங்களிப்பைக் கொண்டிருந்ததுடன், இதைத் தொடர்ந்து முறையே நிதியல்லாக்

**அட்டவணை 2.15**

**நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ) (ஆ)**

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | | | | | 2015 | | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் |
| **ஊழியர்களின் நட்டஈடு** | **31.6** | **6.3** | **27.0** | **35.2** | **100.0** | **30.1** | **5.1** | **29.3** | **35.5** | **100.0** |
| **மொத்த தொழிற்பாட்டு மிகை** | **36.0** | **3.6** | **2.4** | **58.0** | **100.0** | **35.4** | **4.1** | **2.2** | **58.2** | **100.0** |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 40.1 | 4.3 | 1.3 | 54.3 | 100.0 | 39.6 | 4.9 | 1.1 | 54.4 | 100.0 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 38.5 | 1.8 | 13.5 | 46.2 | 100.0 | 38.5 | 2.5 | 12.7 | 46.3 | 100.0 |
| **உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** | **91.3** | **8.4** | **-** | **0.3** | **100.0** | **92.0** | **7.8** | **-** | **0.3** | **100.0** |
| **அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்ப்பு** | **34.9** | **4.4** | **9.4** | **51.2** | **100.0** | **34.4** | **4.5** | **10.1** | **51.1** | **100.0** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கூட்டுத்தாபனங்கள், பொது அரசாங்கம் மற்றும் நிதிக் கூட்டுத்தாபனங்கள் என்பன காணப்பட்டன.

**பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதி கூட்டலிலிருந்து, முக்கிய வருமானத்தின் கூறுகளாக மொத்த தொழிற்படு மிகை பெரும்பாலானவற்றையும் அதைத் தொடர்ந்து ஊழியர்களின் நட்டஈடு பிரதிநிதித்துவப்படுத்தியது.** மொத்த தொழிற்படு மிகை 2014இல் பதிவு செய்யப்பட்ட 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறைந்த வீதத்திலாவது பெயரளவு நியதிகளில் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இந்த மெதுவடைவு பெரும்பாலும் தேறிய தொழிற்பாட்டு மிகை மற்றும் நிலையான மூலதனத்தின் நுகர்விலான மெதுவடைவால் ஏற்பட்டது. இவை 2014இல் பதிவு செய்யப்பட்ட முறையே 9.3 சதவீதம் மற்றும் 7.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் முறையே 4.6 சதவீதம் மற்றும் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதேவேளை கலப்பு வருமானம் 2014இன் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 8.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும் பொருளாதாரத்தில் ஊழியர்களின் நட்டஈடுகள் 2014இன் 9.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 2015இல் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்து வருமானத்தின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன.

**2015இல், வருமான உருவாக்கலின் பெரும்பகுதியை குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்கள் துறை அதைத் தொடர்ந்து நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களும் பிரதிநிதித்துவப்படுத்தியது.** பொருளாதாரத்தின் மொத்தத் தொழிற்படு மிகையிலிருந்து குடும்ப அலகுகள் மற்றும் குடும்ப அலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்கள் 58.2 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த வேளையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 35.4 சதவீதத்துக்கு வகை கூறின. ஊழியர்களின் நட்டஈட்டைப் பரிசீலனையில் கொள்கையில் குடும்ப அலகு மற்றும் குடும்ப அலகுக்கு பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்கள் 35.5 சதவீதத்துக்கும் அதைத் தொடர்ந்து நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 30.1 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், பொது அரசாங்கமும் ஊழியர்களின் நட்டஈட்டில் 29.3 சதவீதத்துக்கு வகை கூறியது. இதே வேளை, உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் நிதியல்லாக் கூட்டுத்தாபனத் துறையால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. 2015இல் மொத்த பெறுமதி கூட்டலில் குடும்ப அலகு மற்றும் குடும்ப அலகுக்கு பணிபுரியும் இலாபமீட்டா நிறுவனங்கள் 51.1 சதவீதத்துக்கு பங்களிப்புச் செய்த போதிலும் உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகளுக்கான பங்களிப்பு 0.3 சதவீதமாக மட்டுமே விளங்கியமை அவதானிக்கப்பட்டது.